உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பழனித்தல புராண மூலம்

இஃது

மேற்படியூர்

பெரியவணகவிராயர் புத்திரர்

வாலசுப்பிரமணியக் கவிராயரவர்களால்

இயற்றப்பட்டு

ப. குப்புசாமிக்கவுண்டர், கி. குப்புசாமிக்கவுண்டர்,

நாச்சப்பக்கவுண்டர், தளியம் கந்தசாமிப் பிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி

ஈரோடு தண்டபாணி சுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு

கோயமுத்தூர்

கிரந்தம் ஈஸ்வரய்யரவர்களது

வித்தியாபானு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி சகககரு, விஜய-ஹு வைகாசி-மீ.

*Registered Copy-right.*

இதன் விலை ரூபாய் ஒன்றரை.

உ

ஸ்ரீ குருபாதமேதுணை.

சிவமயம்.

# பழனித்தல புராணம்.

## விநாயகர் துதி.

வா

வீதிவேழமாவுலாவுமாவினன்குடிவேத
மோதிவேழமாமூலமென்றுரைத்தியன்போற்று
மாதிவேழமாதொருபிடியாகவந்துதித்த
சோதிவேழமாமுகவனைத்துதித்திடல்செய்வாம்.

## அடியார் பெருமை.

மந்தாகிரியைச்சற்றுமணிதராலசைக்கொணாது
சுந்தரமாருதத்தைச்சுருப்புகளாலுங்கொணாது
செந்தழறன்னையீக்களாற்சேர்ந்தினிமொய்க்கொணாது
சந்தனைப்போற்றுவாரைமேற்காலனுமணுகொணாதே.

ஒருவானமுதலாயபூதமுடனேழிரவிமதியான்மாவே
திருவானவட்டமதாமூர்த்தமெனச்சிவசாருணியம்பெற்றிக்
கருவிணாகொள்ளையதாங்காதுகின்றமயக்கொடியிறக்கண்டித்தாளுங்
அருஞானசமயந்தருதேசிகனார்திருவடியைச்சிந்தைசேர்ப்பாம்.

## பிதா வணக்கம்.

வீரமுடன்பொலியுடனேவிளங்குகின்றசைவமுதன்மதங்களெல்லாஞ்
சாரலொழிந்தேயுயிராபாதசாந்தகுணமாதியடைந்தறமேசெயவோர்
காரணமாங்குருவாகிக்காசினியிற்பெறலடைந்துகடையிற்றிவ்ய
வாரணஞ்சொலுருமேவவனுக்கிரகிக்குமெமதுகுருவடிகள்போற்றி.

## மாதா வணக்கம்.

கருவிலுருத்தரித்தபினேகருணையுடன்றுணுண்டிவிரதம்பாத்துத்
தருவதுடன்றலைமைபெறுஞ்சிசுவாகியுற்பவிக்கத்தவமேயாற்றி
யொருபதுதிங்களிற்பிறக்கவொருபோதிலொருவடிவாய்வளர்த்திட்டிமை
மருவாதுவாழவெனவருள்புரிந்தவன்னைதுதிமகிழ்ந்துகொள்வாம்.

# கடவுள் வணக்கச் சருக்கம்.

### நடராஜர் துதி.

பூமேவுதுளபனுளம்புரிந்துகாண்பரியபவன்
சாமேவுபுலிமுனியும்பதஞ்சலியுங்கண்டுவப்ப
மாமேவுமறைதொடராப்பாஞ்சுடரேமன்றினடி
தேமேவுநளினமலர்ச்சேவடிகளிறைஞ்சுவமால். ௧.

### பிரகதீச்சுரர் துதி.

முண்டகன்காண்பரியபெருமூதண்டமுகடுதிருமுடியாய்ச்சோதி, கொ
ண்டசுடரொருமூன்றும்விழிகளாய்த்திசைமுழுதுங்குலவுந்தோளா, யெ
ண்டருமேழ்தலங்கழிந்தகழிவுசெழுமலரடியாயெங்குமோங்கு, மண்டர்
பிரானெனும்பெரியாவுடையநாயகனமலர்த்தாள்கருத்துள்வைப்பாம். ௨.

### கைலாசநாதர் துதி.

மன்னினுவலருமங்கமிருமூன்றுமருவுமொருநான்குவேதச்
சென்னியுபநிடதமுமாயத்தனிநெறியபொருளாகிப்புகழ்ந்தநீள
முன்னியகிலாண்டமுதலெவ்வுயிருமெய்ப்பொருளுமுழுதுமீன்ற
கன்னியுடனிருந்ததிருக்கைலைநாயகன்மலர்த்தாள்கருத்துள்வைப்பாம். ௩.

### சிவலோக நாயகன்றுதி.

ஒளிவந்துதிரமுமனத்தறிவிறுவியுணர்வுகயிறொருங்குவீக்கிக்
களிவந்துகளையவெழுந்தெள்ளமுதையளியில்விளைகனியையுள்ளே
யளிவந்துவந்தனையாரனந்தபாவசராகியருந்துஞானத்
தெளிவந்தசெழுந்தேனைச்சிவலோகநாயகனைச்சிந்தைசெய்வாம். ௪.

### பிரகன்னாயகி துதி.

அருவுருவந்தணிந்தசச்சிதானந்தநிமலனருட்சிற்சிமுத்திக்
சொருமுதல்விதொழிலைந்துமியற்றிநால்வகைத்திறனுமுயிர்க்குநல்கி
யிருவினையொத்தவரேத்தமனத்தவிசிலினிதுவீற்றிருந்தென்ஞான்றுங்
கருணைபொழிபெரியநாயகிமலர்ச்சீரடியெமதுகருத்துள்வைப்பாம். ௫.

### சுப்பிரமணிய கணபதி துதி.

அண்முனிவருருகியிரங்கநெகிழ்க்கமாட்டாதிவ்வகிலம்போற்றுங்
கணிவிரவுசிவசயிலபதிலையுடனுலவுமழகளிறறைவேணி
பணிமணிகள்வெயில்விரிப்பச்சிறுமதிவெண்ணிலவுகால்பரப்புந்தானம்
மணியருவிசொழித்தசுப்ரமணியவிநாயகவரையைவழுத்தலுற்றும். ௬.

### தண்டபாணி துதி.

ஆரனூபுரவடியுமுடிமிசையொண்மீக்குடுமியழகுமந்தண், சேரலவோ
ர்கரனுமொக்கற்சேர்த்தியதோர்கரனுமெழில்விளங்கமென்சார், பாரனுதி
பர்விபுதர்பரவுசிவகிரிவருபச்சிமத்துவாரச், சேரர்கோனாலயத்தினின்றி
லகுபரஞ்சுடரைச்சிந்தைசெய்வாம். ௭.

## செல்வக்குமரர் துதி.

வேறு. சேயிரவியொளிகவற்றுமாமணிப்பொன்முடியுஞ்
செம்முகமுங்கருணைபொழிநயனமுஞ்செவ்வாயுந்
தூயநறும்புழுகொழுகுஞ்செழுமணிப்பொற்குழையுந்
தொடைநிறைந்ததுணைத்தோளுஞ்சுடரிலைவேற்படையு
மாயுமறைநூன்மார்புங்களபநறுஞ்சாந்து
மணிபணிப்பூணாரமும்பொன்னொலியலுடையழகும
பாயொளிக்கிண்கிணிபுனைந்தசீரடியும்படைத்த
பழனிநிமலைக்குமரனையாம்பணிதல்செய்வாம். அ.

## ஆறுமுகநாயனார் துதி.

வேறு. ஆறுமணிமவுலியுங்கண்ணீராறுங்குழைகளீராறும்பால
மாறுநற்பவளவாயாறுமாறெழுத்தாறுமாறே
றாறுமிளிர்தண்டமுந்தோளீராறுங்கரங்களீராறுஞ்சோதி
யாறுவதனமுந்தொழுவோராராதபிறவியிளைப்பாறுவாரே. கூ.

## தெய்வயானை துதி.

வேறு. பழுதிலறுதொழின்மறையோர்துதிக்கையுந்தானமும்படை
த்துப்பருவந்தாங்கிச், செழுமணிப்பூணிழைத்தமுலைத்துணைமருப்பும்பூ
ணுதலுந்திருவினோங்கிக், கொழுமலர்க்கூதளந்தொடுத்தகண்ணியும்பூங்
கடம்புநறுங்குரவந்தோய்ந்த, வெழிறரும்பாகனுக்குவகையுதவுதெய்வ
யானைபதமிசையருசேர்ப்பாம். ௰.

## வள்ளியம்மை துதி.

எண்ணகன்மாவிரும்புவியிலின்றோர்புதிதென்னவுமுட்கவன்றுவேடர்,
தண்ணெனமேவிருமுகமுமேனையவும்படைகளுந்தோன்றுமற்றென்றிப்,
பண்ணவர்கண் கவரவளாவேங்கைகொழுக்கொம்பரெனப்படர்ந்துபற்று
ப், தண்ணமலர்ப்பொதுள்வள்ளிப்பசுக்கொடிச்செந்தளிரடிகள்சரண்புக்
கேமால். ௰க.

## தலைவன் துதி.

முந்தநனுவாதிவடிவாகிமுதலந்தமின்றிமூலஞால, மந்தணமாருயிர்க
டொறுநிறைவியாபகன்சிவமாமலையின்மீது, கொந்தணவுங்குடுமியுங்கோ
வணவுடையுநூன்மார்புங்கோலுங்கொண்டோ, ரந்தணனாய்வடிவுருவந்
தரித்துநின்றனவனடிகண்முடிமேல்வைப்பாம். ௰உ.

துளங்குமறந்தெறுபிறைவாய்க்கறைகெழுவெங்கொலைமழுமான்றுணை
க்கைபற்றி, விளங்குமரன்குன்றிமிழத்தனிவிழிச்சேய்செழுமலர்த்தூய்வி
ரும்புவோருட், களங்குமரநதையுங்களைந்தகதிரிலைவேற்கடவுள்சிவகிரியி
லவைகு, மிளங்குமரனிணைமலர்க்கிண்கிணிச்சரணஞ்சரணெனத்தாழ்ந்தி
றைஞ்சுவாமால். ௰௩.

## குழந்தை வேலப்பர் துதி.

இருவருங்காண்பரியவொருமுதல்வனுதல்கிளர்த்தவிழியெரியிற்றோற்
றுய், பொருவருஞ்சேயெனததெரியாதிசனுமடல்கெழுமிடும்பன்பொன்
றவீட்டி, வெருவறமீளவுந்தடுத்தாட்கொண்டுசிவகிரிக்காவல்விளைப்பூரா
ளுந், திருவருணல்கியசதிர்வேற்சேவகன்சேவடிக்கமலஞ்சென்னிசேர்ப்
பாம். ௰௪.

உரவினிரலுமிழ்மணிசிதளவயிரகோமளந்தண்டரளராசி
விரவினிழலருவிகொழித்திழியுமுயர்சிவகிரியில்விளங்கிநாளு
மிரவிநிழலுளைநுழையாநெழுந்துலவவிசும்பினைகடுரிஞ்சிநீடு
குரவினிழலுறைகுழந்தைக்குமரனிருகமலபதங்குறித்துவாழ்வாம். ௰௫.

## ஆவினன்குடி குழந்தை வேலாயுதர் துதி.

சேவினன்வந்தனமாசானெனத்தெரிந்துதாழ்த்தியசெஞ்செவியில்ஞானந்
தூவினனவந்தனைபுரிபுத்தேளிருந்துயாதுமிந்தசுடாவேற்றேனறல்
பூவினன்வந்தனைமுனிவரிரும்பூதுறறுவகைபெறப்பூமானபூமி
ஞூவினன்கந்தனைபுரியாவினன்குடிவேளடிமலர்களகத்துளவைப்பாம். ௰௬

## முத்துக்குமாரசுவாமி துதி.

தருவருவிண்ணவாமுதலோாபரசமணிமுரசியம்பத்தைப்பூசத்திற
பொருவருமபாறமேறினருளவழங்கியிருதலைச்சூலுங்குலிசமபொறபுத்
திருவரதாடயமிலங்கதென்றிசையிலருட்கடைச்சண்சோதிமாநூ
ரிருவருடனரசவீறறிருக்குமொருதலைவனையாமிறைஞ்சுவாமால். ௰௭.

## திருநந்தியடிகள் துதி.

கருகர்தியிநிமாறுமுனிவர்சாஞ்சிரமுகிழ்ப்பச்களசமேரு
பொருாநதிமபூவிடைமேறபொனமலாமாமழைபொழுந்துபுலவர்போற்ற
வருநநதிவடிவமுமாலயனபணியுஞ்சனங்கசடொழுவாழ்வுமபெற்ற
திருநந்தியடிகளிணையடிகண்முடிபுனைந்துவினைதீர்துமனறே. ௰௮.

## வீரவாகுதேவர் துதி.

பாலொளிவெண்ணீற்றினர்செம்பவளவொளிச்சடையினாபார்வதித
ன்பாலர், சூலொளிவாட்பலகையர்சூர்முதறடிந்தவேற்இறைவாதனையர்
தூய, காலொளியகூடெயிறறர்வீரவாகுவையுமுதலாவணியிறறேற்றய், போ
லொளிரொன்பதின்மரையும்விரைமலாத்தூய்த்தூப்பணிந்துபோற்றுவா
மால. ௰௯.

## ஞானசம்பந்தர் துதி.

முரசதிரும்பிரமபுரமுனையெழுந்துதமிழ்முழங்சமுழக்கிவேதத், தரை
செறிநன்மாக்களுய்யமறைவனமொரிஇகடமபாடவிசாரந்தநகச, ணாசு
கிழலெண்பெருங்குன்றமணவெள்ளத்திரண்முருகியகிலங்காக்கும், பர
சமயக்கோளரியைவேதியர்சூளாமணியையபணிதல்செய்யவாம். ௨௰

## அப்பர்சுவாமிகள் துதி.

மலராசிநெறியரிடும்கற்பினைவாரிதிமிதப்பமறைவல்லோாபற்
பலராசிபகாதிருப்பாதிருபபுலியூர்க்கரைசார்ந்துபவநோய்தீர்வான்
புலராசிநெறியொருவிசிவசமயநெறியிணிடைபோநதுஞானச்
சலராசிபடிநததமிழவாகீசர்சரணமலர்தலைமேறகொளவாம. ௨௧.

## சுந்தரமூர்த்தி துதி.

முடிதடவுமிருவிசும்புந்தடவவொருமலரடிபாாமுழுதுமற்றே
ரடிதடவவளரரியுமயனுமிருவருமடியுமுடியும்பாந்தட்
கடிதடவல்லிளமுலைவாணுதற்பரவைகிரணமணிக்கனகவாசற்
படிதடவவிடுந்தமிழ்தெள்ளமுதகவிநாவலன்றுள்பணிதல்செய்வாம்,

### வாதவூரர் துதி.

கரைசெறிப்பூவாதவூர்பிறந்துகுருந்தடியின்மதிப்பாசன்சையு
ஞரைசெறியங்குசநடங்கியருட்டளையோடானந்தவொளிர்ந்தாடிக்
குரைசெறியுமுணாவுசேவகம்பயின்றுபொருவிலிளங்கொம்போடு
மாசுநிழலடிவைகுமாணிக்கமழகனிறையகத்துள்வைப்பாம். உ௩.

### சிவன் அடியார் துதி.

பண்டைசரெனக்குனித்தமணவிலாப்பயமபெயதுபணியும்போழ்தில்
கண்டைசரென்றுஞ்சிதைத்தசந்தைதாண்மழுவாறவடிநதுசேட
முண்டைசாகூடியதுகூடிமகபபேறினருளுயாவுபூண்ட
தண்டைசாமுதலதிருத்தொண்டாபதஞ்சார்நதவர்தாட்சார்துமன்றே. உ௪.

### அடியார் துதி.

உய்வரேகருருதியரிச்சளைபுரிவோர்வரியைர்துமுறைப்போர்செய்பொன்
பெயவரேறறேறறபணிபுரிவிப்போரபுரிவோரகம்பெருமைசேட்போா
சயவமேசமயமெனததஙகிற்போாசிவகிரியிறறுலங்குமவைவேற்
றெய்வமேதெயவமெனத்தெளிந்திடுவோர்மலாப்பாதநதரிசிப்போமால்.

நனிதவநாடொரும்புரிந்துசார்துவிதகுணமடைந்துநவைகடந்து
தனுமுழுதுமுழுதததிருநீற்றிஞெளிட்டுழச்தொழுகுந்தலைமைசாாநது
புனிதமுறவிளங்கிவைவேற்குமரனுறைசினகரஞ்சூழ்போந்துபோறறி
யனுதினமேவலிற்பரிவுபுரிநததிருவசவடிமைக்கடிமையாமால். உ௬.

### சந்தானதருவர் துதி.

நந்தாவுள்ளொளிஞானமுதிப்பமலவிருடமிர்ந்துநவிலறகொணுை, மூந்தாயபொருளிதுவெனறருளுருக்கொண்டியிாமெயபொருண்மூன்றுமேறறு, வநதாளும்பெண்ணைநதியடுத்தவெண்ணெய்மெய்கண்டான்வழியிறறேற்றுஞ், சந்தானகுரவாபதமபிறவிநோய்தவிாககுமருந்தெனவுட்கொள்வாம. உ௭.

## நூல் வரலாறு.

இறைவனருள்வழிநந்திபாறறெரிந்துசனற்குமரனியல்வியாதற்
கறைய வவன்சூதமுனிக்கருளியமூவாறுபுராணத்திற்காந்த
முறைபிறழாதுசவுகிகிப்பிரகாசகாண்டததின்மொழியுமிநநூற்
குறைவிலத்தியாயமடிறுநான்குநடைபெற்றதன்மேறகூறுமாதோ. உ௮.

அள்ளிலைவெள்வேறகுழகன்சிவகிரியிலரசுவீற்றிருக்குமந்தண், கள்ளவிழ்பூங்கழனிவளந்திகழ்பழனிக்காதைவடமொழியையாய்ந்து, தெள்ளுதமிழாற்றகுதிசிறநதெனவத்தலன்வைகுந்தெளிமெய்ஞ்ஞான, வுள்ளுணாவுமுதுக்குரவோர்வெளிற்றறிவினெனைவிளித்தேயுரையென்றுரால்.

அத்திருநாமகர்வெதிநுண்ணறிவுடையோர் சிறியேன்புல்லறிவினாற்று, மித்தமிழின முறைதிரப்பச் சொல்வகை சொற்பொருணிரப்பியெடுப்பரென்றே. வைத்தமுறைச் சருக்கமிருபான மூன்றுவரவினிதுவழங்குமாற்றுன். மெய்த்தமிழின்சுவையொழுகும்விருத்தயாப்பதுவிளங்கவிளம்பலுற்றேன். ௧௧.

**வேறு.** குமரகுருபரசரவணோற்பவகுகாசண்முகாவென்றோதி
லமரர்தமிடர்கடிந்தபுவியிலெளிதினில்வந்தடையுமென்றால்
விமலமுட்னிருசெவியாலவனருடொல்கதையமுதமிசைந்தோர்முற்றுந்
தமலமதுவிளியநனிபெறும்பயனெல்லையையொருவர்சாற்றற்பாற்றே.

மலர்தலையுலகுநர்தாந்தமணிமுடிச்சகமதென்னு
நிலைபெறுமிலக்கியத்தமையன்னதுறினமேற்றிசைமுமைம்பான்
றலைபெறிடருவாமனைகிறைனிநெடுங்கதிர்வேலண்ண
லலைவுறுபுகழ்கூருநாடபெருமையைநவிலலுற்றேன். ௧௨.

பொருந்துமுச்சனைமுமந்தக்கரணமும்புலனுமுளளந்
திருந்துமுறமெருருங்குணமுந்தோமசெவிப்புலனமேற்கவாரி
யருந்தமுதனையதொனறூல்வழிநடாயசலமேந்தி
பெருந்தமிழ்புனைந்தவிநூல்பெயர்பழனிப்புராணம். ௧௩.

இந்தநூலாரியத்தையியற்றமிழ்த்தொடர்புசெய்ய
வந்தகாரணமியாதென்னில்வண்டமிழ்நிலத்தில்வைகுங்
கந்தவேளடியார்யாவருங்கலந்தருட்கடலின்மூழ்கு
மந்தவாழ்வடைவாமேயினையுமடையலாமே. ௧௪.

அவையடக்கம்.

வானமுட்பருகுமதிவிலமலியுவர்நீரும்பூந்தண்
சானிருகுளவிமேவிக்கவர்பசுங்கூழும்போற்
றேனிமிர்விசாகனைபருளாநகொளிறசிறியேன்புன்சொற்
றுணிதுநன்காம்யாறுநதொண்டைப்புரியதாமே. ௧௫.

வார்கடற்புலவுமோரார்மகிறச்சேறுமோரார்
ரீமலியவருமெண்ணார்நித்திலமணிகொள்வார்போற
ரிதபவருண்டசிஞ்சொற்பொருட்சுவைதிரிதற்றோரார்
கரிவெவிப்பரடோர்காதைதுற்றிநூளங்கொள்வாநல்லோர். ௧௬.

பலவருபோர்வர்சானைச்கொருமொழிபுகன்றும்வெற்பின்
புலவுநசஉறப்போந்தமெபொருள்வகைவிரிவுங்கூட்டிப்
புல்வருச்சருளியுபபாபுகழ்சவகிரியில்வைகும்
புலவனுட்கொளயானபாடப்புக்கவென்புலமைநன்றே. ௧௭.

மூதுணர்வுடையோர்வேதமுதலியதெரிந்தெஞ்ஞான்று
மோதுசொல்லமுதமுண்டுதேக்குமொள்ளிலேவெற்சேய்பொற்
காதுகளொன்சொனஞ்சங்கைக்குமோதுய்க்குமேயோ
யாதுசொல்லறியேனுசைதுறப்பதறகென்செய்கேனே. ௧௮.

கடவுள் வணக்கப்பாயிர முற்றும்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

திருச்சிற்றம்பலம்.

## முதலாவது கிரிச் சருக்கம்.

புனிதமாமுனிவர்போற்றும்பொருவருவியாதவேத
முனிபுகன்றல்புராணமுழுதொருங்குணர்ந்தசூதன
பணிமுதலியவருத்தும்பருவங்கட்குடையானென்று
நனிதவம்புரிவோர்வைகுநைமிசாரணியநேர்ந்தான. ௧.

சென்றமாதவனைவேதச்சிரப்பொருளுணர்ந்துமூன்றும்
வென்றமாமுனிவரநேர்ந்துவேணவாவுறத்தழீஇக்கொண்
டின்றுநல்விருந்துவந்ததெனமனமகிழ்வுதாங்கி
நன்றுறக்கொணர்ந்தோர்பீடத்திருத்தினர்முகமனல்கி. ௨.

அருக்கியமுதலநல்கியதரிசனப்பாரதியந்தண்
முருக்கிதழ்ச்சுருக்காமீட்டுமுகநயக்கிளவிகூறிச்
சுருக்கமில்கேள்வியோய்முச்சுடரிலைப்பெருமான்றல்சீர்
பெருக்குதொல்புராணங்கேட்கும்வேட்கையோம்பெரிதுமென்றார். ௩.

அவ்வுரைகேளாநன்னரருளினிராணங்கட்
செவ்வியாகமங்களுந்தொல்புராணங்கடெளியவோதி
லெவ்வமிறேசகாலபாத்திரமிவைகள்வேண்டும்
வெவ்வியல்பில்லீர்சொல்லில்விரியுமோர்சிறிதுசொல்வாம. ௪.

நற்பெருந்தேசநற்பூதரந்தெய்வநதிதீர்த்தங்க
ணற்பெருந்தவவனங்களூடுநன்னகர்மடங்க
ணற்பெருங்கோயிலாதியவற்றினுநற்காலத்தி
னற்பெருந்தவத்தோர்கேட்பநவிற்றுகென்றனர்நன்னூலோர். ௫.

ஆதலின்வனத்துட்டெய்வவனமிதுவன்றேநம்மைக்
காதலினிறைஞ்சுமிந்தக்காலநற்காலமன்றே
தாதலரிதழிவேணிச்சங்கரன்றொண்டர்நம்மின்
மூதறிவினர்நீரன்றேமொழிகுவனும்பாலென்றான். ௬.

என்பதுமுனிவர்கேளாவெதிர்முனிவரனைநோக்கி
முன்பருளினைபுராணமுழுவதுமவற்றுட்சாந்த
மின்பொலிகிரிப்ரகாசகாண்டத்தின்மேருவாதி
நன்கெழுகிரிகளுந்தானங்களுநவிற்றுமெல்லை. ௭.

சிறந்தனகிரிகளுட்டென்றிசையினீர்கொண்மேக
நிறந்தருவராகவெற்பொன்றுளததனீழலின்கண்
ணுறைந்துளதின்பமுத்திதருவதோர்தலனுண்டென்றே
மறைந்தவைவகையினன்றின்றருளுதிவிரிவினென்றார். ௮.

என்றவரிசைப்பக்கேளாவிருந்தவன்சிரந்துளக்கி
நன்றிது நன்றிதென்றேநமதுநன்கருத்துமற்றப்
பன்றிவெற்பியல்புமந்தப்பாங்கரின்பெருமையுமியா
ரொன்றறப்புகல்வார்சேடனுரைக்கவுமரியவென்றல். ௯.

ஆயினுமரியவற்றுளரியதைத்தெரியுமாறெந்
தாயினுமினியஞானதேசிகன்சாற்றல்வேண்டு
நீயவையறைதியென்றீர்நிமலவாக்குணர்ந்துநெஞ்சிற்
பாயிருடுமிந்துளீர்யாமறிந்தவைபகருகின்றாம். ௰.

எனமனத்தடாரதொண்ஞானதேசிகனிணைப்பொற்பாத
நளினமலர்தனினைமன்போதலர்த்திநாண்மலர்ப்பூங்கொன்றை
வணையும்வேணியாகசோரவாயமைபுகன்றதேசிகர்கோமானை
நினைவரமுகூர்த்தமொன்றுநினைத்துளங்குமிழ்ப்பநோந்து. ௰௧.

மாமறைத்தலைவகேண்மோவரையளப்பிலவுண்டேனுஞ்
சாமாபொற்குவட்டிலேமங்கவினிமாசலத்திறதெய்வத்
தூமணிமரகதத்தில்வெள்ளியங்கிரியிறெல்லோ
னமுறவைத்தங்கந்தகிரியில்வேளுறையுமென்றும். ௰௨.

தண்மலர்க்கடம்புசம்புதன்சிலைப்போதிமேலை
விண்ணவராலிநான்குமேருவின்றுணைபாலாதி
நண்ணிநாற்றிசையினனீடுநாவலன்றீவின்மேவு
மண்ணலங்குமரிகண்டத்துளபலவடுக்கன்மாதோ. ௰௩.

வேறு. ஒளிவிளங்குகேதாரமென்றுரைப்பதோரோங்கல்
தெளிவுகொண்டசீர்ப்பருப்பதந்தேமலர்பிலிறதி
பளிவிழைந்தவர்தொழுந்திருக்காளத்தியசலம
தளிர்நறுமலர்ச்சோலைசூழ்தருங்கழுக்குன்றம். ௰௪.

கொல்சினத்தவெங்கொடுமறக்கிராதர்தனைசெருவிற
றொல்லைநல்லெழில்காட்டிவெளவாக்கருள்சுரந்து
வல்லிருங்குவவிளமுலைவள்ளிமென்குறமான்
செல்வியோடரசிருப்பதுசெருத்தணிக்குன்றம். ௰௫.

தண்டுளாய்க்குரவணிந்துசக்கரமயிருங்கி
மண்டுபொறகலைசெய்யகோசிகமருங்கசைத்துக்
கொண்டல்செந்நிறந்திகழ்ந்திருபுட்கொடிகொண்டு
விண்டுவெளுறைவேங்கடமிளிர்குகனேறி. ௰௬.

செங்கண்மாயனுந்திசைமுகக்கடவுளுமகந்தை
பொங்கியேனமுமன்னமுமெனப்புவியகழ்ந்து
மங்கண்வானுறீஇநேடியுமடிமுடிகாணாச்
சங்கரன்றழற்பிழம்பெனத்தயங்குதொல்விலங்கல். ௰௭.

வெய்யசூர்முதறடிந்தசெவ்வேற்கிறைதோன்றுஞ்
செய்யகண்ணுதலுறையவதிருமுதுகுன்றம்
வையமுய்யவண்காவிரிமலிபுனல்விளங்கச்
சையமாமுனிகும்பனீதருதிருச்சையம. ௰௮.

தளவவாணகைச்சாம்பவியருந்தவங்காணு
விளங்கியோர்புறம்பசப்பநல்கிறைவனின்றதுவெம்
பழகறுத்தசெஞ்சீரடிப்பன்னிருபுயத்துக
குழகனவீற்றிருப்பதுதிருக்குலவுசெங்கோடு. ௧௯.

அம்புயத்திருமார்பனாராயணகிரீசன்
கொம்பரிறபசுந்தேன்சொரிகுளிர்பொழிற்றொல்லி
யெம்பிரானருளவிளங்குமீங்கோய்மலையென்று
மும்பர்போற்றுமாணிக்கமாமலையெனுமோங்கல். ௨0.

அற்றவர்க்கருள்புரிதிருக்கடிகுடியடுக்கல்
செற்றமுக்குரும்பினாமொராமுஞ்சிராமலைச்சிகரிக்
கற்றையஞ்சடைக்கடவுளாமுமைதந்தசெவியிற
சொற்றதூய்மொழிதேசிகன்சுவாமிமால்வரையால். ௨௧.

எருக்கைவேணியனிடத்திரண்குமாரவேளிருக்குமா
வருக்கைதுன்றுகுனறக்குடிவரைமலாத்தருவி
னிருக்கைமன்னவணிபமகளிளமுலைமுயங்கித்
திருக்கைவேறகிலாயிருப்பதுதிருப்பரங்குன்றம். ௨௨.

சக்கரனாரயனேமேற்கொடுகாண்பரிதாயெம்
பெண்ணொருகூறுடையிலுதித்தகண்ணாறிரண்டுடையோன்
மின்னொருதகாமேனியன்வீற்றிருப்பதுபூந்
தண்ணறுவுமிழ்பழமுதிர்சோலைவேதண்டம். ௨௩.

தாதுதூற்றுபூந்துணாபொதுளியகவிழ்தலைச்சூச்
சூதமோர்நொடிகூறிடுஞ்சுடர்மணிவேலோன
சிதவாரபொழிலுடுத்தமூதூர்திருச்செந்தூ
ரோதநீரலைவாயிலோாகந்தவெறபுளதால். ௨௪.

சாம்பவிக்கொருதலைவனூடிமலர்ச்சாரபின்
றோம்பிடும்பெருந்தவம்புரிகுறுமுனிமேவுந
தேம்பொதிந்தசந்தனமணநதமிழொடுந்திளைத்துப்
பூம்பொதும்பரிற்றைவருந்தென்றலம்பொதியம். ௨௫.

நெறுக்குறும்பாமுனிவருமமரருமேத்தொல்ல
றிருக்குறும்பலைக்கலைகளாமெய்த்திவ்ஞானத்திறைஞ்சு
மருக்குறும்பலையிளைத்தளிர்க்காததனோராயாமன்
றிருக்குறும்பலவுருக்கொளுந்திரிகூடாசலமே. ௨௬.

செங்கதிர்மணிமுடிச்சேரலன்றிகழ்
கொங்குநன்னாட்டிடைக்கொன்றைவார்சடைப்
புங்கவன்குமரவேளுறையும்புண்ணியத்
துங்கவெற்புளசிலசொல்லுவாமரோ. ௨௭.

மழைதவழ்வஞ்சியாரணியத்துமபரும்
விழைபொருட்டருவதுவெண்ணைமால்வரை
[illegible]சைமிறறயங்குசங்கவெண்
குழைபி[illegible]றுவட்டுகொடுமுடிக்கிரி. ௨௮.

சயதவமிரியுமாகருதிநன்னரின்
மொய்தவம்புரிகுறுமுனிநெடுங்கிரி
யெய்கதிாவேலினுன்மருதமாமலை
செய்தவர்வணங்குதென்சேரியத்திரி. ௨௯.

தொல்விடைப்பாகர்பேரூரின்சூழலின்
வில்கெழூடணிமுடிவெள்ளியங்கிரி
நல்லெழினுன்முகநவிரம்பூந்துளாய்
மல்லலந்தொடைப்புயல்வண்ணன்மால்வரை. ௩௰.

சோலநன்மணிமுடிகுலவிமார்பின்முர்
நூலணிந்துலகெலாநுகாந்துநின்றமால்
போலகல்விசும்பொரீஇப்பொலிவுகொண்டதோர்
மாலைவெள்ளருவிதாழ்வராகமாகிரி. ௩௧.

ஆயதோாகிரியுதக்கடுத்தசாரலின்
மாயவனசலமொனறுண்டுவாய்வுதிக்
கேயநால்குரோசமேன்றிசைக்குமாயிடைத்
தூயவெளளோதிமன்சுரும்பொன்றுண்டரோ. ௩௨.

உரைத்தகேழலங்கிரிக்குதக்கினுண்மலா
விரைத்தடநதாமரைப்பொகுட்டுவேதியன்
வரைசதலமதன்குணபாலின்மாமறைச
சிரததுறைசிவனுருச்சிலம்பொன்றுண்டரோ. ௩௩.

தொன்னெடுநாளினிற்சுருதிவேதிய
னன்னரின்வகுத்தனநவிரம்யாவினும
தன்னிகரில்லதுசத்தியென்றொரு
மின்னிகாவரையொடுமிளிர்நதுமேயது. ௩௪.

புயனிவிண்ணலக்கரும்பொலிவுகொண்டுமா
தவாபுகழ்சததியோரிடநதரிததொரீஇ
நவைதவிர்குமரவேணடுவண்மைகலாற
சிவமலைசிவனையேசிவணிநின்றது. ௩௫.

மஞ்சிளமதிநதிவனைநதுமாமறை
யஞ்சனுமனமுறவானமீதுறீஇ
யெஞ்சலிற்சேயொளியிலங்கலாற்சிவ
னஞ்சடைகடுப்பதுதிகழ்சிவாசலம். ௩௬.

பய்யறுபெரியொளிமணிவிளங்கிவான்
வெய்யவனுடுபதிமிளிாகண்மேன்மரீஇத்
துய்யசேவ்வேற்கிறைதோன்றலாற்சிவன்
செய்யகண்ணனையதுதிகழ்சிவாசலம். ௩௭.

குருநிறமணிவனத்தோடுகுண்டல
மருவிமுச்சுடர்நெடுங்கண்வயங்கிவா
னருணதியருவிதந்தருளலாலரன்
திருமுகங்காவதுதிகழசிவாசலம். ௩௮.

அங்கிரியடைந்தனர்க்கருள்சுரந்துவெங்
கைக்கிரியுரியினனினியகாதலன்
சொற்கிரிதரவுயிர்குடித்தவேலினான்
கைக்கிரிவண்ணமான்மருகனவைகுமே. ௩௯.

ஆங்கொருசாரதிருவாவினன்குடிப்
பாங்காமுறுகூறுதொல்பதிபவானிநோற்
றோங்குந்தகூவிளவனமோதிலன்றியுஞ்
சோங்குந்கள்வனமதொன்றுளதுகூறினேன். ௪௦.

பேறுநல்கவுறறுளபெருமையாவையுங்
கூறுறுநுமக்குமேற்கோலமால்வரை
மாறில்சீர்வளம்பலவுளவகுக்கரி
திறினலாநவிர்கிலவிளம்புவாயரோ. ௪௧.

முதலாவது கிரிச்சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௭௧.

திருச்சிற்றம்பலம்.

## ௨-வது வராககிரிச் சருக்கம்.

மின்றிகழுவேணியும்வென்றிவேலனு
மென்றும்வைகியவெழிலேனவெறபையோர்
குன்றொருசிவணியகூறற்பாலதோ
தென்றிசையிரசதச்சிகரியன்பவே. ௧.

உருவெழுதருமையினுயர்ந்துபூசுரா
பொருளவழிபயிறெறும்புனிதநல்கிவா
னிருங்லநிலைபெறவிசைவிளங்கலா
லருமறைப்பொருளொடவ்வசலமொத்ததே. ௨.

செய்யசெம்பொன்னிறந்திணிந்தசன்று நீண்
டய்யவைமுதலதந்தசைதலினறியே
வெய்யவெம்பாந்தண்மேல்விளங்கிமேய்தலால்
வய்யகரிகாவதுவராகமால்வரை. ௩.

ஏரிருலலவன்வான்மீனினஞ்செறி
சாரறலளிபுனவனங்கலநதழு
போவளங்கொண்டுதண்டலைபிறங்கலால்
வார்புனனேர்வதுவராகமால்வரை. ௪.

அறுதொழிலினரிடமாதலால்வளர்ந்
தறுமுதிரையனமுட்கோடலாலுள
மறுவிலகுறமணேவழங்கலால்விலை
தெறுமெரிபுரைவதுசிகரமால்வரை. ௫.

சேயுயாவிசும்புபார்செறுமிநிற்றலா
லாயபல்லுடற்குயிராயளித்தலா
லோய்வருதிருக்கோட்டிரகிரியூர்தலால்
வாயுவைநிகாவதுவராகமால்வரை. ௬.

கந்தரநிரைநிரைகவிணிக்கங்கைநீர்
சந்திரமுறநணிதோன்றிவானவ
ரிந்திரன்முதலியபதங்களெய்தலா
லந்தரமணையதவ்வணிகொண்மால்வரை. ௭.

சொண்டல்பொற்கச்செனமருங்கிற்கொண்டது
மண்டபமென்கவர்காட்சித்தாயது
முண்டகன்முடியினுமுடிவின்றாதலா
லெண்டருமதர்கமொருசேணியென்பவே. ௮.

வேறு. முத்தொழிலினாபேரெழிலுருவரசுமுதலறப்புனைந்தநெறிதான்
மாமுனர், சத்திகைப்பலாபபூங்கடுக்கையுந்திருச்செங்காட்டில்வீற்றிருந்ததா
ந்தியு, மொத்தசிநகையாய்ப்பதிநெருகோடியுருத்திரர்வழிபடுமருது,
மத்திகளவனமெண்ணுவலுங் கூடலணாகர்விளங்குபூங்கடம்பும. ௯.

ஒற்றியூரமகிழுங்சற்பிணையொருவர்க்குதவுமாமருவுபாதிரைய
நற்றவர்சல்யாநயநசருநருலுவுநலங்கெழுபாரயத்துறைப்பராயுஞ்,
சற்றருவெனச்சங்கரனுறைகுருந்துஞ்சம்புவையின்றபைங்கழையும்
பொற்குறும்பலவுஞ்சண்பகாடவியுமபொதியமேறசந்தனுடவியும். ௰.

மன்சருலூரீர்வஞ்சியுங்கரையூரவன்னியுப்பொன்னிசூழ்நண்ணுத
லென்பதியதனுள்வதரியுமபெருர்ச்சித்தமூலியுநதிகழெழுகினு
முன்பிகாஞ்சியினிநசாஞரிநுணமருங்குமுதல்விரோறறிருந்தசேமாவும்
பின்பவள்கன்னிகாரநீளவனததிற்பெருநதவம்புரிநதகூவிளமும். ௧௧.

மாமணிக்கதிர்வென்முருகனதுருவாலரிச்சனைவேங்கையும்பூந்தண்,
டேமலர்சதிரடோட்செச்சையுஞ்செங்கேழ்க்கோடலுஞ்செழுமலர்க்குர
வுந், தாமவேணயனருளைபினாபோலுந்தண்ணிழற்காஞ்சியுமுதல, கா
மருதெய்வத்தருக்களுமசயான்சற்பகவனஙகளுநெருங்கும். ௧௨.

அன்றியும்பசுங்காய்காற்றிளங்கமுகுமசருவுமறிதகிர்நெறிவுந்
துனறுமுப்புடைகலாய்ததாழையுங்குருக்குந்துருக்கமுமிரவெரிதருவு
மின்றவழ்சினைநெட்டாயுமாசினியும்விளவுமாமலைமுருக்கும்
பொனறருமபலாசமதிங்சமுப்புல்சுபுன்னையுருசாதியுமதவும். ௧௩.

சாலமுஞ்சிறுமாரோட்டமுந்தேருந்தமாலமுங்கதலியுங்களவுங்
கோலமுங்காயத்திரியுமர்கடியுங்குடசமுந்திலகமுமுனிய
மேலமுங்கோவிதாரமுமொடுவுமிரத்தியுங்கனகமுநதகரு
மூலமாயுளதாவரங்களுங்கொடியுமுண்டகாதிசருமங்குளவாம். ௧௪.

தைத்தவத்திரஞ்சத்திரந்தணித்திடுசல்லியகரணியுந்துணியாக்
கைத்தனசநதுபுறைந்தசந்தானகரணியுமிரணமுந்தழும்பு
மொய்த்தனநீவித்ததைகமைசெய்சமானகரணியுமுடிந்தபல்லுயிரு
மெய்த்தொகைதோறும்வந்துயிர்ப்பனபுரியுமிரதசஞ்சீவினிமருந்தும்.

விருந்தர்நல்லிளமையாவதுமிளைஞர்விருத்தராவதுமடியிநக்க
தருகசளுடம்புகலும்வளளியுமுதிர்ந்தசருகுகல்லெனவலிபுனலும்
கருத்திணினிளைந்தவரநதருமரியமூலியுங்காயமேவலியத்
திருத்துபன்மருந்துங்குருதியந்தடமுமுதலியதிகள்வனசெறிந்தே. ௧௬.

ஆயவரைமேல்விசையைகாரியவருர்திகளுசாவிவிளையாடுமொருசார, மாயனவிழிகூரணையும்வாகனமும்வேன்முருகனவாகனமுமேவுமொருசார், தூயமதிவேணியுடையாயதுமவெள்ளேறுமுறைசூழவொருமேயுமொருசார, மேயபரன்மார்பணியும்வேழமுகனூர்தியும்விராவியவைசேருமொருசார. ௧௭.

ஆதவனடத்திரதமேழ்புரவியூடுசெலுமல்லததின்மீதுநடவாச்
சீதமதியோர்புடையகற்பொழுதிஞவினமோடுசிவணித்திகழுமான்மீது
செறிசேரலையில்விண்மீனினருவொழுகுவீயெனவிளங்கிவதியு
மாதவருநீடுறவாணருமகிழ்ந்தொருமைகூரவனவாசமுயல்வார். ௧௮.

தானநிலைகாறுசுரமாமணிவராகநெடுமாமுனிகடாம்வளர்தலாற்
கானமடவாரகுஞ்சாவரறமாமகளிறகாமாசுனையாடவருவா
ரேனவிடியோவினிதிஞனறவமோவினிதியாமுமுணவேண்டுமெனவே
வானமுதைவாரிவிலைகூறியிடுவார்கவருவாறுகருவார்தினமுமே. ௧௯.

வேறுநறுமாமணியிஞரமணியீர்மறுவிளங்குகுருவிந்தமணியீர், கூறை புனையீர்புனைகுவீர்தழைபொன்மாளிகைகுலாவியுறையீரிதனின்மீ, தேறு விரொருமணிபொருநடைநல்கியெம்மில்வருவீரெனவிகழ்ந்துநகைகூர், மா றில்குறமாதரையணங்கினரியற்கையரிதென்றிவைவகுத்துரைசெய்வார.

கொய்தினைநறுங்குரல்விழுங்கிளிவருந்தமணியின்குழுவைவாரிநடுவே
பெய்துகவணைச்சியொருசாரிடமருப்பரைப்பிறங்குறநெருங்கநிறையே
யய்யனவிடிப்பாசிறையீயலையவிபபருமழையினறசையரிந்துசிறுக
நொய்யெரிமடுப்பாநறவந்தனினைபபர்குறவாணருடனேறுகருவார்.

மன்னிறமரிக்குருதிபெய்துதினையொடலரின்வண்டுமிநருவிரவியே
கன்னரொடுபனனமிசைவைத்தனபடைத்தழலிலையவிநறும்புகையடாச்
சென்னிறவிழிக்கவிரிதழ்ப்பொருவுசெந்தலையசேவலொடுதூவிமயிலும்
பன்னிருபுயக்கடவுண்முன்னரினவிடுக்கெதிர்பராவிவெறியாடல்புரிவார்.

சீறடியாவெண்கவடிமாலையர்சிறாகள்சினவெமபுலிமடங்கலுழையை
வீறுகுருளைத்திரள்கயந்தலைபிடிப்பர்கொடிவீக்குவாவிடுப்பாபழகி
மாறுபுரியாதுவிளையாடுவர்களாகுளிமுழக்குவர்கைகால்விழிகொள்வா
ரேறுபொருவித்திரிவாகாளையருடுப்பளையெனப்பிணியெடுப்பர்விடுவார்.

கல்லருவியோதைபுனலாடுனர்தமோதைகரையேறுனர்தமோதைமு திரைக், கொல்லையினெழுங்கிளியிணோதைகடியோதைநெடியோதைகவ ணோதைகுதலைச், சொல்லினர்தம்மோதைதினைகொய்யுமவரோதைதுறை தோறுமிபவோதையெதிரே, செல்லசனியோதைமுரசோதைவரையோ தைமலைவாணர்சிலையோதையுமரு. ௨௪.

பூசலெனின்மேவலரைவென்றுசினமாறுவாபொருரிடைவிடார்தடைப டார, நேசமுறவேயடைவிலாரமுதமேயனையர்நீடுலகுவாழ்வுமுடையார், தேசுபொலிதேவர்சிறைமீளவடிவேல்விடுசெவ்வேளலதுதெய்வமறியார, வாசமலர்தூவிவழிபாடுபுரிவார்பணியின்மீள்வாமலைவாணர்திறனே. ௨௫.

அன்றுசிவஞானவிழிசெனீர்சொரியவாளிகொடகழ்ந்ததமதங்கண்ணி வார். வென்றிபுனைதிண்ணாகுலமேன்மையுடையாதிருவிசும்புமடமான்ம களைமுன். மன்றல்புரியும்படிசெவ்வேண்முருகனுக்குதவுமாமர்பராசரவ தியவாா, நன்றறமலாதுபுரியாாதவமலாதுமுயலார்நலமிலாததுசொலார்.

**வேறு.** ஏனமால்வரையடைகுனர்யாவரேயெனினும்
வானநாடவர்வழுத்தவும்வாழ்த்தவுந்தகுவாா
ஞானவாலகில்லியாமுனிவரர்சித்தாநாகர்
சானவிஞ்சயர்கின்னரர்கடவுளாதொகுவார். உஎ.

இயக்கர்சாரணரக்கரர்வசுக்கள்யோகீசர்
மயக்கமொன்றிலாமுதலியர்வைகுவர்தேவர்
வியக்கமாநதிச்சரையில்வெண்பளிக்கரைமீதி
னயக்கநாண்மதிச்சடயனையரிச்சனைநவில்வார். உஅ.

உண்ணலஞ்சினசரங்களுமுளவுளவருவித்
தண்ணதிக்குழாமபலவுளவுளதடஞ்சுனைக
ளெண்ணியாடினர்க்கருணனிவழங்கிநாடோறும்
வெண்மதிச்சடைவிளங்கியகங்கைவீறறிருக்கும். உகூ.

இமயமீன்றவெம்பிராட்டியோர்புடையில்வீற்றிருப்பச்
சமரவேற்கிறைநனந்தலைச்சுடரெனத்தயங்கச்
சிமயமால்வரைக்குவடுசடொறுந்தொறுந்தினமு
மமரருக்கருள்வழங்கியாயிடைவைகுமமலன். ௩0.

சூகராசலச்சேணெறிகாண்பினுந்துன்ப
நாகராசிகள்பீதாத்திடுநவிலுதற்கெளிதோ
மோகராசிசண்முனிந்திடுமுனிவாகாளென்றான்
யோகராசிமுற்றெருருங்குணாசூதமாமுனிவன். ௩க.

உ-வது வராககிரிச் சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௱ய.

**திருச்சிற்றம்பலம்.**

## ௩-வது மாயாத்திரிச் சருக்கம்.

முற்றெருருங்குணர்சூதனைமுனிவர்கைகூப்பிழாச்
சொற்றரும்புகழ்சூகராசலசிறப்புணாந்தோ
நற்றவத்திரேயதனதுதோற்றமுநவிற்றி
மற்றதன்பெயாவந்ததுதந்துரையென்றார். க.

மேயமாற்றமாதவன்செவிதாழ்த்துமெய்முனிவீா
நீயிர்சொற்றதுகுய்யமேநிகழ்த்துதற்கரிதா
லாயினிநதவத்துயர்ந்தவர்க்கறைதலேயறனாற்
றாயவக்கிரிநெறிவரக்கேண்மெனச்சொல்வான். உ.

ஆதியாற்பராசிவையருளாற்சிவமுதலா
யோதுபாரிறுவாயவைதோற்றிவைதொடுக்கிப்
பேதமின்றியெம்பிராற்கொருபிராட்டியும்பெற்ற
மாதுமாகியகுடிலையிலொருசத்திவடிவில். ௩.

மாற்றருஞ்சதாசிவனுமாய்மயேசனுமாய்ப்பின்
றேற்றுருத்திரக்கடவுளுங்கடவுள்பாறறேன்றி
யேறறமாயுறையிருவருமிதயமூடெழுதிப்
போற்றிநிற்றலுஞ்சகளையாய்முன்னரிறபோந்தாள். ௪.

போந்தபேதையைப்பழிச்சினர்புதுமலாபொழிந்தார
பாந்தளாயிரம்பஃறலைப்பணுமுடிச்சுடிகை
யேநதுபாரிடையிடம்பலவிருப்பினும்யாங்க
ளோர்நதுணைத்தொழநல்கலாயோருருவென்றார். ௫.

சொற்றவாய்மொழிகேட்டதுமெமதுதோல்கலையி
லுறறசத்திகளனநதமுண்டோரொருபேத
மறறவற்றினுககளவிலைவரன்முறைவழாமை
முறறுமைந்தொழினடக்குமெஞ்ஞான்றுமூவுலகும். ௬.

ஐந்தொழிற்கும்வித்தாயிருந்தனமவையாற்றள்
கைந்தெனும்பெயர்நும்மையும்வகுத்தனமடைவே
யைநதுசத்தியும்யாமெனவைகினமன்றி
யைந்தவித்துயாந்தோரகத்திருந்தனமன்றே. ௭.

நித்தமாய்த்தனுவாதிகணிகழ்த்தியெவ்வுயிருந்
துய்த்தொழிந்துமீளவுதிப்பதற்கொன்றெனத்தோன்று
மத்தமாயைமால்வரையெனவருதுமென்றரனோ
டுய்த்துமற்றையோரிருவர்க்குநதிரோதமாயுறைந்தார். ௮.

ஆயகாலையிலசலமுமாகியெவ்வுயிர்க்குந்
தாயுமாயவண்மாயைமூவுலகமுந்தயங்க
மேயநின்றுதித்தசலமாய்விளங்கினன்யாரு
மேயிலானுமங்கிருந்தனனிருவருமிறைஞ்ச. ௯.

மூவருமொருவனென்றேமுதல்வியையிறைஞ்சிநின்றன்
மேவரும்பாரியாகவிரவினன்விகாரமின்றித்
தாவரவிருவரோடத்தடஞ்சிலம்புறையாய்வந்தான்
யாவனென்றறிகிற்பாமெம்மிறைவிளையாடலம்மா. ௰.

ஆதலினுலகமூன்றுமான்றளித்தழிக்குமாயா
பூதரமெனும்போமுற்றும்புனைந்ததெவ்வுலகுமபோற்ற
மாதவிரந்தவெற்புவராகவெற்பெனும்பேர்பெற்ற
தோதுவன்கேண்மினென்றான்சூதனென்றுரைக்குமேலோன். ௧௧.

௩-வது மாயாத்திரிச் சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௱௨௧.

திருச்சிற்றம்பலம்.

## ௬-வது பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்த சருக்கம்.

செருவின்றிறனாற்றியசீயம்வழங்குகானில்
வெருவின்றியொரைம்புலன்வென்றவியாதனென்போன்
பொருவின்றியருந்தவம்போற்றிவிளங்கிவைகுங்
குருவின்றுறையெனபதொன்றவ்வழியுண்டுகூறின்.

தொன்மாநகராயிடையோர்முனிதோன்றிமோன
நன்மாமரபிற்சலியாதடையோகநாளும்
பன்மாமறையோர்ந்துணர்ந்தெண்பொருட்பான்மைநேர்ந்த
முன்மாதவமைந்தழனுப்பண்முயங்குமேல்லை.

சுகலன்சதுத்தொல்குலத்தோன்றன்முன்றுல்லையீன்ற
விகலந்தருபன்னிருமைந்தர்தீவினைகளாறறும்
புகலொன்றுசெருக்கறப்புண்ணியமோனிமெய்யை
யிகலொன்றவசைத்திடையூறுறுமின்னல்செய்தார்.

மோனம்புரிமாமுனியோனன்மோனநீங்கி
மானந்தல்புரிந்தசிறுருவன்மைநோக்கி
யூனம்புரியுங்களிநெஞ்சினீரோங்கல்வைகு
மேனங்களதாகுதிரீவிரெனச்சபித்தான்.

இரங்கிவித்தியாதரனெனும்விற்சயற்கிறையுந்
தரங்கொள்கற்புடைத்தலைவியுமுன்பெறுந்தவத்தா
லுரங்கெழுந்துணைக்கேழலினுருவுகொண்டடைந்தா
வரங்கிடந்தமாயாசலத்துறைந்துவைகினரால்.

குன்றிமாமணித்தெறுவிழிக்கோலவெங்கேழற்
பன்றியாயவர்கட்டுழிப்பன்னிருசிறுருஞ்
சென்றுதித்தனர்முனிவாசொற்றிறம்புமோமறங்கூர்
வன்றிறற்சிறுமழலையம்பறழெனவளர்ந்தார்.

முதிர்பசுங்கடம்பரும்பொருட்சுருதிகண்முழங்கு
மதுரைமீனவன்வேட்டைமேன்மனம்புரிவித்துச்
சதுவிதப்பெருந்தானையுந்தலைத்தலைதயங்க
விதுவிளங்குமாயாசலச்சாரனமேயினனால்.

சாரலிற்சிலதானைமாவேட்டையினடந்து
போருடற்றிமாகுலங்களைச்செயித்திடும்போழ்திற்
காரிலைடந்தெனவல்லுழிக்கணங்கணுந்தரசன்
வீரவன்றிறற்றானையைமுருக்கிவென்றனவால்.

வெற்றிகொண்டநம்மாக்கணம்வேட்டைநன்றெனவெங்
கொற்றவன்கொடுபோங்குழைத்தசெரங்கோரத்து
முற்றும்வென்றுத்தாங்கொடியோமொழுங்காணப்
பெற்றவன்பறட்டுமாடவிடப்பெயாநெதிர்ந்தனனால்.

முத்தவெண்பிறைக்கோடுகொண்டுபடைமுழுது
மத்திடுந்தயிரெனவுடைந்துயிர்தபவதைத்துத
தத்துவாம்பரிச்சவுரியர்தலைவனைச்செருவி,
மத்தமாக்கரியெனப்பொருதினதுணைமாவும். ௰.

இரண்டுமாவின்றெருழ்வலியென்சொல்சேமெமது
திரண்டதானையைச்செருத்தனவெனவெதிாசென்று
முரண்டருஞ்சுடர்வாளியான்முதல்வருமாவைப்
புரண்டுவீழ்தரவெய்தினன்புரவலாபெருமான். ௧௧.

சருவுமற்றையோாகேழலைச்சரசரனென்னும்
பொருதடஞ்சிலைப்புளினனெய்தகன்றனன்சாப
மொருவிவிஞ்சயன்றுணைவியோடொளிர்விமானத்திற்
கருணையங்கடல்வளாதிருக்கயிலையையடைந்தான். ௧௨.

இருந்தசூகரமென்பறழிடம்பிரிதின்றி
யருந்துதாய்முலைதேடினின்றலம்வருமஞ்சும்
வருந்தும்வீறிடும்வாய்பிளநதலரிடும்வரிக்கண்
பொருந்துருதுயிர்போமெனும்போலிளைப்பூறும் ௧௩.

பதங்களுத்தலமுறைத்துளம்பதைத்துடல்வெதும்பும்
விதநதுதாயணைப்பின்றியுண்மெலியுமவ்வேலைக்
கதம்பநீள்வனததண்ணலைக்கயற்கணுயகிபார்த்
திதங்கொடாருயிர்க்கிரங்குதனீயலதுண்டோ. ௧௪.

ஆதிநாளுதித்துயர்ந்தமாயாசலச்சிகரி
மீதுதாயிழந்தனமெனக்குருளைகண்மெலித
லீதுநின்னருட்கிசையுமேயெனக்கரமுகிழ்த்த
மாதுமென்முகமிளநகைவரமுறுவலுத்தான். ௧௫.

ஆசிலருமறையோநான்கடிகளாரணமுடிவின்
றேசுபொலிமெய்ஞ்ஞானததிரட்சியோதிருமேனி
பேசரியகருணைநதிபெருக்கோபேரொளிவசன
மாசிலாமணிசேழல்வடிவுகொண்டதெய்வாரே. ௧௬.

**வேறு.**

இன்பாலன்பாலொழுகுமிளமுலையாமளைவடிவோ
முன்பாறருதவமாயாசலம்பெறுபொய்வரமேயோ
பின்பான்பறழினமுன்பிழைக்தபெருந்தவமேயோ
வன்பாளன்கோலவடிவாகியெழுந்தருளியதே. ௧௭.

நொந்தழுகைநீங்கிமுகநோக்கியிளம்பறழினம்
வந்ததுதாயெனச்சென்றுமுலையுண்ணமகிழ்ந்தளித்தா
னந்தமுமாகியுமில்லோனுனலுமெவ்வுயிர்க்குந்
தந்தையுந்தாயுந்துணையுந்தமருமெனச்சமைந்தோனே. ௧௮.

துந்துமியார்த்தனநறும்பால்சுரந்துணநல்கியகாட்கி
யந்தரர்காண்டொறுமலர்தூஉயருச்சித்தாரருந்தவாக
ளெந்தையருளிருந்தவாவெனவிழிநீரிழியநின்றூர்
பைந்தமிழ்மாறனும்பாரிற்பரிந்துபரவசனுனன். ௧௯.

உண்டமுலையருள்வான்கொண்டிழிகேழலுருவமொரீஇ
யெண்டருமீராறுகுமரரெனவெழில்பூததிறைஞ்சினார்
வண்டமிழ்மாறனுக்கமைச்சராய்வாழ்மினென்றருளி
யண்டர்பிரான்கதம்பவனதெழுந்தருளினான்விடைமேல். ௨௦.

மைத்தலைவானுருஞ்சுகிரிமணிமுடியில்வழுதியர்கோன்
மெய்த்தலைநின்றரிச்சித்தானொருகுறியவ்விமலனைவெம்
பைத்தலைமாசுணம்புனையும்பாண்டீசரெனப்பகர்வ
ரத்தலநேத்திரபுரியென்றறைந்திடுமார்கலிஞாலம். ௨௧.

இன்னுமிதுவன்றிநுமக்கியம்புதுமொன்றெழின்முனிவீர்
மன்னியகாசிபன்றாயவழித்தோன்றல்வராகமுனி
மின்னிவர்மாயாசலத்தின்மிசையொருவன்னியினீழ
றன்னின்மழவிடையோனைவணங்கியருந்தவம்புரிந்தான். ௨௨.

புரிகின்றதவமுனிமுன்புரிசடையோனெழுந்தருளி
விரிகின்றசதுமறையோய்விளம்புதிவேட்டதுவென்னச்
சொரிகின்றநறவிதழித்தொடையோய்சூழ்பவந்தொலைய
வரிகின்றசிவயோகமருளின்றுளடையவென்றான். ௨௩.

இயமமுதலானசமாதியினுருவயன்விரிவின்
மயாவறநல்கினன்மாயாசலமிதனைவராககிரிப்
பெயாபெறவோதுகவெனுஞ்சொற்பெய்துவரம்பலவருளி
யுயர்மழவெள்விடைமிதெம்மிறைவனுமையொடுமறைந்தான்.

மாமுனிவன்யோகலிங்கமொன்றுவரைமிசைநிறுவிக்
கோமுனிவரொடும்வழுத்திக்கொட்புறும்வெவ்வினைப்பிறவி
போமுனிவுதரும்யோகம்பொருவறச்செய்தருமறையோர்
தாமுனிவந்தனைபுரியுந்தலைவனதுசரணடைந்தார். ௨௫.

பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்த சருக்கமுற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௱௪௬.

**திருச்சிதம்பலம்.**

## ௫-வது அருச்சுனன் சருக்கம்.

காமமாதிமுக்குறும்பெறிந்தைம்புலக்கள்வரூர்நெறிதூர்த்துத்
தூமவொள்ளழற்கருத்தினோன்பாற்றியேதுய்க்குமாமுனிவீர்காண்
மாமலர்ச்சுரும்பிமிர்பொழில்வராகமாமலைப்பெருமையைமுற்றும்
யாமுரைப்பதுகேண்மினென்றிசைப்பதெனோர்க்கொருநகையாமால். ௧

யாவரக்கிரியாற்றலைவரையறுத்திசைப்பவர்தமிழ்க்கூடற்
றேவர்கடேவன்வெள்ளியம்பலத்தினாடகந்தெரிகாறும்
பூவருஞ்சதுவேதனுமாயனும்புலவரும்புடைபோற்றக்
காவருஞ்சதமகன்சிரங்குவித்தசெங்கையினனெதிர்போற்றி. ௨

பாலலோசனமாசுணப்பூணினபாய்நறைவிடைப்பாக
காலகாலபாரப்பனமடவார்வளைகலைகவர்காபாலி
சூலபாணிநீருடிபேயாடியசுடலையிலெரியாடி
மேலையோரமுதுண்ணவெண்பாற்கடற்கரியவெவ்விடமுண்டாய். ௩.

ஏனவெள்ளெயிறென்புதோலாமையொடெருக்குமத்தணிந்தாய்வெங்
கானவேடுருத்தரித்தனைபஞ்சவன்கைப்பிரம்படியேற்று
யானவாறுகண்டிறைஞ்சிடேன்காண்குறுமுறுதியோருன்றொண்ட
ரூனவெம்பவந்துடைப்பவர்யாரினியுய்யலாம்வகைநன்காய். ௪.

என்றிறைஞ்சலுந்தண்பிறைக்கண்ணியோனிளநிலாநகையாடி
யன்றவன்றனக்கருள்சுரந்தளித்திடும்போதிலங்கயற்கண்ணி
கொன்றைவார்சடையாயருச்சுனனையாட்கொள்வதுகுறிக்கொண்டு
நின்றுநீபொருங்கிராதரூபங்கொளநிகழ்வதென்றினியென்றாள். ௫.

எம்மையாளுடையான்கயற்கண்ணிருளெழின்மதிமுகநோக்கி
மைம்மலாககுழலாயினிமேல்வருங்காலமுமுளவென்று
மம்மையெய்துமப்போதுநீகாண்டிமாயாசலத்தெனப்பூவை
நைமுகிழ்த்தனள்கழிந்தனநாள்சிலகாலம்வந்ததுவன்றே. ௬.

வெந்திறற்றுரியோதனன்முதலியர்மேவினர்விறற்பாண்டு
மைந்தரைவரும்பொருந்தியசூதில்வண்பதியிழந்தருங்கான்புக்
கந்தநீள்வரையியக்கரங்கொடுமுடியதனிடத்தடைந்தெம்பூம்
பைந்துழாய்புனைகண்ணனைக்கண்டனர்பயிறவம்புரிந்தம்மா. ௭.

இறைவர்கண்டடிதொழலுங்கண்ணனுமவரெழிற்றிருமுகநோக்கி
மறையுயிர்த்தமார்க்கண்டயமென்றொருவரையுளததனமீதி
னறையுயிர்க்குமோமுல்லைநன்னீழலினனிதவம்புரிந்தால்வெண்
பிறைமுடிப்பிரான்வரந்தருமருந்துயர்பெயருமென்றுரைசெய்தான். ௮.

செய்யதாமரைக்கண்ணினனகன்றபின்றேமலர்ச்சொடிமுல்லைத்
துய்யநீழலிறறவம்புரிவிசயனைத்தொழும்புகொள்ளுதல்வேண்டிப்
பய்யராமுடிபபண்ணவன்றண்ணளிப்பார்வையோர்புடைவைத்தான்
வய்யமீனறவளுணர்ந்திளநகைவிருந்தளித்தனண்மகுணன்பால். ௯.

வேணியோன்சிகைவகுத்தனன்வாகைமேல்மிலைந்தனனுதல்காதில்
வாணிழறசுடர்விழிகரந்தனன்மறைத்தனன்மழுமானோர்
பாணியிற்சிலைபிடித்தனன்வடிக்கணைபாணியொன்றினிற்கொண்டான்
றாணிவீக்கினன்வெரினிடைக்கரியதோற்கோதைகைதொகுவித்தான். ௰.

நூலொளித்தமார்பிடைவரிக்கவடியினூலணிவருவித்தா
னீலமாசுணக்கச்சொரீஇநீணிறக்கச்சரைவருவித்தான்
றோலடிக்கழறொட்டனன்சிலம்பணிதுறந்தனனுகர்காள
மேல்பரந்தெனக்கருத்தனன்கிராதர்போல்வீறினனிகரில்லான். ௧௧.

குரும்பைமென்முலையஞ்சாயல்கொளுங்கயற்கண்ணிதண்ணஞ்
சுரும்பிமிரளகமபாதிசுவற்புறம்விரிந்துதாழத்
திரும்பவோர்பாதிவாரிச்செருகிமென்குரவஞ்சேர்த்தாள்
கருங்கயலருட்கணேற்றகாட்சியிலிருப்பதானாள். ௧௨.

துய்யபைங்குழைகரந்துசங்கவெண்டோடுசேர்த்தாள்
செய்யவாய்வெள்வாயாளுடெளிபொன்மங்கலங்கழுத்துள்
வைகிடவொளித்துவேங்கைவள்ளுகிரத்தாலிபூண்டாள்
மொய்யிளம்பாசிகுன்றிமணிவடமுலையிற்சூழ்ந்தாள். ௧௩.

மணிவளைமறைத்துச்சங்கில்வளைத்தவெண்சாப்பணிந்தா
ளணிவிரலாழிவஞ்சித்தழுங்குமோதிரந்தரித்தாள்
கணியிளந்தளிர்மருங்கிறகருந்துணியரிவைசூழ்ந்தாள்
பிணிமுகமயிலஞ்சாயற்பிறங்கவேமறைந்துவந்தாள். ௧௪.

பாரினுக்கறங்களாறறப்பணித்ததோவேதநன்னூற்
பரியபொருளினீட்டந்தழைத்தபெட்டகமோபெட்பி
னோகெழுபிரணவத்தைவளைந்தெடுத்ததுவோசண்டற்
காம்கடுகூராலாரமைப்பகொடுங்கையிறகொண்டகூடை. ௧௫.

இன்னணங்கிராதரூபமெடுக்கனன்செருமலைக்கே
மன்னினரிளாசாம்பேயம்மையைத்தனருமலிமான
மன்னிலையுணாக்துகாலனடைந்தனனகேழலாகிக்
கன்னியுமிறையுமாயாசலங்கவின்விளங்கச்சென்றார். ௧௬.

வேறு. விசயன்றவமுயலுங்கிரிமிசைமுல்லைவனத்திற
றிசைதுன்றியகருமாவடுசரந்தோடுமுன்னடப்பத்
திசைகொண்டோடாநதோடிவளைப்பத்திண்ணொளி
யசைகொண்டுநடந்தானைமையார்மேனிறகிராதன். ௧௭.

கிராதன்முனிசிலைசீர்செழுமியவாளிமெய்யுருவி
வராகஞ்சரணெனச்சென்றுழிவளைகின்றசெந்நாய்கள்
விராவுந்தொனிசெவியிற்புகவிழித்தான்றவமொழித்தான்
பராவுந்தொழின்மறந்தான்விறற்பார்த்தன்புடைபார்த்தான். ௧௮.

சாலத்தெருமந்தேதனதாணீழலடைந்த
தூலக்கருமாமீதடுதொழின்ஞானிவிடுத்துக்
கோனுய்த்ததுவரிச்காமுகங்குழையக்கொலைவேடன்
காமிறகடிதடருஞ்செயல்கண்டானுள்வெருண்டான். ௧௯.

வேடாசரணெனவந்ததைவிடுவேனலன்மனத்தி
றூடாதொழியென்றுனிதுான்றென்றுநகைத்தே
நீடாரணியத்தேயுடனெறிதப்பியின்னெறியின
பாடானதுதானேநற்பழுதென்றன்னமொழிவான். ௨௦.

பின்னுஞ்சடைமுடியாய்பிறைமுடியானடியவாபோ
லுன்னுநதவமுடையாயிதுதகுமோவுனையடைந்தா
லென்னம்பொடுவருமாவினையெனபால்விடுவதுவே
மன்னுந்தவமென்றுனதுமறுத்தான்கொறுகொறுத்தான். ௨௧.

ஒருவேடனென்றொறுத்தாய்செருமுடிப்பேறுலகெல்லாங்
கருவேரறநின்னைப்பொருகின்றேனதுகாணென்
றிருகால்வளைத்தொருகாமுகமெடுத்தானகணைதொடுத்தான்
குருமாமரபோனுஞ்சிலைகுழைத்தான்செருவிளைத்தான். ௨௨.

ஓமந்திரமுதலான்றொல்லுருவந்தெரிவரியோ
னாமந்திரவேடன்னெனநடித்தாலறிகுவனோ
மாமந்திரமன்போடுறப்பெய்தானவைமகிழ்விற்
பூமந்திரமன்பொட்டியவாறற்றுதள்போன்ற. உ௩.

உள்வாங்குவில்வளையுங்கணையுமிழ்கின்றனவிரைவும்
விள்வாபெழுநகையுமறைகூவுந்தெருவிறலுந்
துள்வாகுதிசிறுதும்படிபெருகுந்தொழில்விதமு
மெள்வார்சிலரிலதாயிருவருமேற்றெதிர்பொருதார். உ௪.

முடித்தாசெருமுடிவிற்றவமுயல்வோன்வரிவில்லா
லடித்தானடியுண்டானவன்சரணாரறிவார்மற்
பிடித்தான்பிடியொடுங்கீழொடுமேலும்பெருமானுங்
கடித்தார்விசயனும்வீழ்ந்துடனெழுந்தாருமைகண்டாள். உ௫.

அண்டரதிபாமலாதுவிவிண்ணோர்த்தாரருமறைகள்
பண்டாயினதுதிகொண்டான்சருமன்பழவடிவங்
கொண்டான்மலரடிபோற்றினனகுழகன்மழவிடைமேல்
விண்டாவியெழுந்தான்விசயன்கண்டுவிழுநதான். உ௬.

வாயிற்கைபுடைத்தான்முகமலரிற்கையறைந்தான்
தீயிற்புகையெழவீழ்பவாசிவனப்பதைபதைத்தான்
றாயிற்கனிவுடையாயறிவில்லேன்றவரிழைத்தே
னாயிறகடைபடுவேனுய்வதுண்டோவெனநைந்தான். உ௭.

**வேறு.** நைவான்முகமலர்ந்துநகைநிலவுபரப்பியலாய்நளினம்விண்டு
மைவாளொண்சண்ணியொடுமெதிர்ந்துமழவிடைக்காட்சிவழங்கிமன்னு
மெய்வாய்மையுடையவில்லியாதலினால்வினோதமொன்றுவிளைத்தேமஞ்ச
லுய்வாழிவேணவாவுரைத்தியென்றானன்பர்தமதுணர்வினின்றான். உ௮.

புன்மலத்துக்கிடமொருபொருளோபல்லுயிர்க்குதவும்பொருணீயன்றோ
நின்மலாத்தாளுணர்ந்தரிச்சித்தொருபணியும்புரிந்திலேனீயாட்கொண்டா
யென்னறிவுபோயரியவுனதறிவுமெனதறிவுமிரண்டிலாமை
யுன்னதெனக்கலந்தானுலகொழுகுமாறொழுகினுமெந்தாய். உ௯.

வேண்டவிருதன்றியுநின்றொண்டருக்காட்படவேண்டும்விரையியாண்டுங், காண்டொறுங்காண்டொறுங்காட்சிதரவேண்டுங்கன்னன்முதலியரைக்காதி, மூண்டமரிலடல்வேண்டும்பாசுபதம்வேண்டுமமர்மூளுங்காறு, மாண்டகையேவைகவொருதலன்வேண்டும்பவநதொறுநீயாளல்வேண்டும். ௩0.

என்றானவ்வாறுநல்கியிதற்குமாருததிசையிலெழுந்தெஞ்ஞான்றும்
பொன்றாதபிரமகிரியொன்றுளதைவருநீவிர்போயிவாழ்மி
னின்றாடல்புரிதலினாலிவ்விடனுஞ்சாபவில்லியெனும்பேர்பெற்றுக்
குன்றாமல்விளங்குகவென்றானமலன்மீட்டுமொன்றுகூறுகின்றான். ௩௧.

புரியிதனுண்மார்க்கண்டன்முதலினர்க்கும்பகவதிக்கும்பொடிக்குநெற்றி, யெரிவிழியில்வருமுருகனருள்வழங்குமினிமேறறண்ணிழன்மென்முல்லை, வரிமலர்ப்பூங்கொடியிடத்தாறெழுத்தையுமுச்சரித்தவாபான்மஞ்ஞைபூர்தி, தெரிசனநன்களித்துமுத்திவீடுதவுந்திண்ணமின்னஞ்செப்புவோமால்.

வரையிதன்கணைம்பூதவுருவுகொண்டந்தலத்திமையோர்முனிவர்வானோர்,
பரசிவமுழுத்திடவுறைதுநுங்களுக்குங்காட்சிபரிந்தளிக்குவாமென், றுரை
செய்துமையொடுமமலன்மறைந்துபூம்புரையிலுற்றானெழுந்தநால்வ,
ரரசரும்பெற்றுயர்ந்தவிசயனும்பிரமகிரியினைச்சென்றடைந்தாரன்றே.

ஆதலினேனப்பறழைக்கவ்வுருக்கொண்டவிர்சடையோனளித்தலானு
மாதவங்கூர்வராகமுனிசிவயோகமிழைத்துமுத்திமருவலானு
மேதகுகூற்றேனமெனமுனையெழுந்துவிசயனுழைமேவலானு
மேதமின்மாயாசலந்தான்வராககிரியெனவழங்கிற்றென்றான்சூதன். ௬௪.

ஐந்தாவது அருச்சுனன் சருக்கமுற்று.

கடவுள்வணக்கமுள்பட திருவிருத்தம் ௧௮௰.

**திருச்சிதம்பலம்.**

## ௬-வது வராககிரி ஜீவஸ்தானச் சருக்கம்.

தொன்மறைமுனிவர்சூதமுனிவனைத்தொழுதுநோக்கி
நன்மறைவியாதமாணவரினுநன்குணர்ந்தோய்ஞால
மன்மறையவர்சூழேனவரையின்மால்விடையோன்வைகும்
பன்மறைபயிறானங்கள்புகலெனப்பகரலுற்றான். ௧.

பண்டுதம்பணிகளாற்றாதகந்தைவெம்பரவைமூழ்கி
யண்டர்கோனகரின்மேவுதருக்களந்தணராய்க்கேழல்
விண்டொடுகுடுமிவெற்பில்விளங்குமோர்பிலத்தினுற்றுத்
துண்டவெண்பிறையோற்போற்றித்துறகலினிணாகடுவி. ௨.

மூலத்துவாயுவூர்த்தமுகமெனவுதித்தமேனற்
பாலத்திற்பிரமரந்திரத்தின்மீதுருவநிற்குங்
காலத்திற்கடவுள்காட்சியளித்தனன்கருணைபொங்கச்
சாலத்தாங்கருணைபெற்றுத்தருக்களுஞ்சார்ந்ததானம் ௩.

பிரமரந்தரத்துதித்துப்பெருகமிழ்திழிந்ததானம்
விரவுதெனனருவியாகவீழ்ப்பவத்துருகன்மீதி
லரன்முடிவீழ்ந்துமென்பூவாயிடைவிளங்கலாற்போற்
புரவரசமருங்குன்றுபூம்புரையாயிற்றன்றே. ௪.

தவந்தருபுரியுந்தானஞ்சார்குணர்விழைந்தயாவு
முவந்துடனெய்தவன்போடளிப்பர்யோகீசாபாசப்
பவந்தெருமுனிவாவைகிப்பழமறைதெரிதற்கொண்ணாச்
சிவந்தனையடைந்தார்யாரேயதன்பயன்றெரிகிற்பாரே. ௫.

அன்னதன்பாங்கர்விண்ணோக்கலைகடலமுதைவாங்கிப்
பன்னருஞ்சிறப்பினல்கும்பசுந்துளாய்ப்படலைமாயன்
முன்னரசியற்றுந்தானமொன்றுளததனைமுன்னோர்
மன்னவனென்பர்யாவர்வரைவளம்வகுத்துச்சொல்வார். ௬.

புண்ணியநதியுந்தண்ணஞ்சுனைகளும்பொலன்பூங்கொன்றைக்
கண்ணியனருள்பூந்தண்டார்சடிமலாகதம்பமார்ப
னண்ணியகோயின்மற்றுமளப்பிலநணுகுமேனும்
'வெண்ணிலாமுடியோன்றனைமைந்தனவிசேடித்தோங்கும். எ.

ஐம்பெருந்தலத்தினாற்றல்கேட்பினன்கறையிறசென்னி
கம்பிதநகொளினுட்கொள்ளிற்கதிதருங்கதிவந்தெய்தும்
வெம்பவவிருளையுள்ளவிளக்கினுலெரித்துவீட்டின்
செம்பொருளுணர்வீரையந்திரிவின்றித்தெளிந்துகேண்மின். அ.

சூழ்மலர்ப்பொதுள்பைங்கானிற்றேகைமேகாரமாலுங்
கேழ்கிளர்மேககாரகிரகமொன்றுளதொன்றுண்டு
தாழ்வரச்குறிஞ்நீமாதவந்தினைத்துருவந்தாங்கி
வாழ்வுறவழிபாடாற்றிப்பிருதிவிவணங்கிற்றன்றே. கூ.

பிருதிவிவணங்கலோடும்பிறைநறுங்கண்ணிவேய்ந்தோ
னருளினைங்குனெந்திகழ்ந்தகாட்சிநன்கருளிச்சென்றான்
பொருவிறேனமறைகளுன்சூம்போற்றுமக்குறிக்கெஞ்ஞான்று
மிருடிமிபிருதிவீசனெனும்பெயர்விளங்கிற்றெங்கும். ம.

**வேறு.** ஓதுதொல்வாயுவின்றிசையிலும்பரெண்
வேதகூபத்துறைவேங்கைநீழலிற்
காதலித்தப்புவோாகடவுட்கன்னியாய்த்
தீதறநோற்றதொராறுதிங்களே. கக.

தேவர்கோனாற்குணந்திகழத்தோன்றிநின்
றோவறுகாட்சியும்வானுமீய்ந்தொரீஇ
மேவியதொருகுறியதனைமேலையோர்
யாவருமேற்றுமப்புலிங்கமென்பவே. கஉ.

பூவனனுழியனகந்தைபொன்றமுன்
மேவனலுருவினதடியின்மீதரோ
மாவனநீவழிபாடிழைத்தலாற்
சீவனவனமெனச்சிறநததவ்வனம். கங.

**வேறு.** வாழ்தலனேர்பகற்றென்கீழ்த்திசையிலிசைமறைபயிலு
மேழ்விதகாவெரிக்கடவுளேழ்பிரமசாரியர்போற்
பேழ்வன்வெண்மதிமவுலிக்குறிநிறுவிப்பூசைமுற்றித்
தாழ்விலொருபருவமருந்தவம்புரிந்ததுபோழ்தில். கச.

மூன்றுகுணங்கெழுங்காட்சிமுதல்வழங்கப்பெற்றருளா
லான்றுவடமீன்கற்பின்கன்னியரோரெழுவரைவேட்
டான்றபுகழ்திகழ்தவனையக்கினீச்சுரமென்பர்
வான்றெழுமக்குறியதற்குப்பெயரதுவாய்வழுத்துவார். கரு.

**வேறு.** கூறுமத்தலந்தனக்கொருபாற்குணதிசையின்
மாறின்மாதவம்புரிந்தொலிநந்திதன்வடிவும்
பேறுஞானமும்பெற்றதெம்பிரானிடத்ததுமுன்
னீறில்வந்தனைபுரிகுருஞானலிங்கம். கசு.

காசினமாமலைமிசைபிரகற்பதிபுரியிற்
றேசுசூழசுராசுரர்குருததேசிகரேனை
மாசிலநாரதன்முதலியருடன்வான்பூத
மேசினமாதவம்பருவநான்கியற்றியபின்னர். கஎ.

குருமுதற்றவமுனிவராகுழுமியகுழாத்திற
பிரமசாரியவுருச்சொடிபிறங்குவான்வணங்கிச்
சுருதிமாமனுத்தினைத்திடுமெல்லையிற்றெல்லோ
ரொருகுணப்பரமபிரமமாயுதவினன்காட்சி. கஅ.

**வேறு.** நானந்தநோன்பிழைக்குமுனிவீர்காளவ்வரையைநவிலப்பாற்றோ
னூனந்துபவமொழிகருஞ்சிறபராகாயமுளதோங்குமாங்கண்
வானந்தமினறிநிறையொளிவான்மறுதியுங்காணுதஞான
வானந்தநடம்புரிந்தானிரந்தரமாய்ப்பொற்பொதுவிலாடுங்கோமான்.

புராதனனங்கணன்பங்கனிருவிகற்பன்மலரகிதன்பொருவிலாத
நிராமயநிற்குணனிராதாரனிரஞ்சனனிராகாரன்ஞான
பராபரன்மாயாசலத்திற்சிற்பராகாயத்திற்பயிலுஞ்சோதி
விராவியநாடகநடமேயிலங்கமங்குலேசனெனவிளங்கிற்றன்றே. உ0.

மெய்ஞ்ஞானசபையைவிழைந்திசைட்பினுங்கேட்பினுமுத்திவிளைக்குமு
ண்மை, யஞ்ஞானமகற்றியவைம்பூதலிங்கமான்மியமீதன்றியாங்க, ணெ
ஞ்ஞாலமும்பரவுந்தக்கணகேதாரமென்றோர்தலனுண்டெய்தின், மெய்ஞ்
ஞானம்விளைவிக்குமடைவிக்குங்கதியதனமான்மியமுங்கேண்மின். உக.

வஞ்சந்தபமாதவமுஞற்றும்வராசமிருதனெனுமுனிவன்
புஞ்சங்கெழுபொன்முடிக்கேழற்பொருப்பில்வதிந்துபொறிபுலன்போக்
கஞ்சலறவென்றறையுதகம்யாக்கைவலியுமாறயின்று
நெஞ்சிலணிமாமுதலவியமாதிநிகழுமாபயின்றான். உஉ.

உலகுதொறுஞ்சென்றுண்டுளபல்லுயிருமொழுகுமாறொழுகி
யிலகுபுதுமையாவுளமற்றவையெல்லாமேறபனவியற்றி
யலகின்மறையுமறைபயிலந்தணருஞ்சுரருமருந்தவரு
மலாகமேவிவழுத்தியதொல்வடகேதாரவரையடைந்தான். உங.

சென்றுசினவெள்விடையோனைச்சேவித்தொருசார்மலர்த்தடக்கை
பொன்றவெடுத்துப்பணிந்துமனதுருகியுருவந்தருதீர்த்த
மன்றநுகாந்துமுன்வைகும்வராககிரியைமருவியிவ்வா
றென்றுமொருவாதிருவரையும்வரையாதிறைஞ்சிவருநாளில். உச.

கோலவரையிறகுறிசிருங்கமுடியிறகுடிலவடிவரையிற்
சீலமுனிவர்சிவயோகாசெறிவதனைக்கண்களிவரக்கண்
டேலவிவர்வைகிடன்வைகியிவரோடொழுகியிருந்துதவஞ்
சாலவிழைப்பிற்பானுபவமுதிக்குமெனவத்தலைசாரந்தே. உரு.

எழுதுமணியொண்சுடரினிருந்தெழுதாமறையின்சிரப்பொருளை, முழு
துமுணர்ந்தோரொடுமுயல்வோரொருநாண்முனிவர்தொடர்பொருவர்,
தொழுகிவரவுங்கேதாரந்தொழுது வரவுமுளம்வலிக்கும், வழுவையுரி
யோய்புரிவதியாதெனவுட்கவன்றுவருந்துதலும். உசா.

தாதாரிதழிச்சிகழிகைதாழ்சடிலன்விசும்புதடவுவட
கேதாரத்தினளிததபெருங்காட்சிகேழல்வரைமீதில்
வேதாமுதலினோபரசவிடையினுமையோடளித்தெதிர்ந்தான்
மாதாபதாவீழ்ந்தெழுந்துபரவசராய்விழிநீர்வாரநின்றார். ௨௭.

வாசத்துளவோன்முதலினருக்கரியைநினதுவழித்தொழும்பி
னேசித்திடுமன்பினர்க்கெளியையெனபதறிந்தேனிறைந்தபெருந்
தேசிறபொலிநின்னுருவுதருதீர்த்தமளித்திரசருமவரித்
தூசிறபொலிவோயெனத்தாழ்ந்துதொழுதான்வராகமுனிவனென்போன்.

பிறைவார்சடையன்விடையிழிந்துபெறுதற்கரியபிரணவங்கூ
ரறைமீதரியசிவயோகமாற்றுமுனிவரெதிர்போற்ற
மறையோலிடமேலவர்தாழவாணன்மணிமாமுழவார்ப்ப
விறையோன்காணவராககிரிபெறும்பேரிறைவனடம்புரிந்தான். ௨௯.

புரியும்போழ்தின்மழவிடையோனருளாற்புனிற்றும்பிறைநிலவு
விரிசெஞ்சடையிற்பரந்ததிரிபதகையிழிந்துவெண்கூவ
லுருவநிகழ்ந்தாணிறைநடனமொழிந்தான்வராகமிருதன்முதற்
செருமுமுனிவாசுதரிசனவினுமஞ்சிறப்பித்திறைஞ்சினார். ௩0.

நறுவெண்கூவற்சுதர்சனவினுமந்திகழுங்கேதாரோ
தகநீர்மூழ்கிநுசார்ந்துசதாசிவராய்வராகமிருதன்முதற்
புசழ்தாபதருமடைநதனரப்புனலையிவையோர்யாரேனு
மகனுளறிந்துமறியாதும்புரிமாபாவமதுதீரும். ௩௧.

பெறுதற்கரியபிரணவொண்பாரையதனுற்பணிமவுலி
யுறுதக்கணகேதாரமெனும்பெயாபெற்றுயர்ந்துவிளங்கியது
மறுவறரெலிமங்கலசிருங்கமுளதொன்றருமாமறைக்கடலின
றுறையிறபடிவீரதனதுமான்மியமுநுமக்குத்தொகுத்துரைப்பாம். ௩௨.

துயிலாயன்றுறந்தயன்மாதவாசுரரோடயல்போற்றக்
குயிலாயமொழியிமவான்கொம்பொருபாற்குழைநதுவரக்
கயிலாயனயிலோனைங்கரனிருபாறகலந்துமொய்ப்ப
மயிலாயஞ்செறிகயிலைமருங்கணைந்தான்மழவிடைமேல். ௩௩.

தளர்நடைவந்திளஞ்சிறுகாலடிவருடத்தளவணிலா
விளவரும்பேடவிழ்நதுமணமிறைப்பவிமசலந்துளிப்பக்
களபநறும்பளிதநறைகமழவருசான்ஞ்மிறு
விளரியின்பாட்டயர்விஞ்சையோர்வீணைவிரலிசைப்ப. ௩௪.

கோகிலங்காளங்குறிப்பக்குளிாமதிவெண்குடைநிழறறப்
பூசநறும்பொதும்பரிற்பூங்கணையுமுடல்குழைந்தவில்லு
மோகமதன்றரிததிருகைமுகிழ்த்தொருபால்விளையாட
வோகைபலர்தரவுமையோடொருதவிசின்மிசையிருந்தான். ௩௫.

நடைபெறுபல்விலங்கொடுபன்னகவைரிமுதலபுள்ளுந்
தொடைபெறுவேணியன்மலர்த்தாடொழுதனசூழ்வந்தபணி
விடைபெறுமால்புரிந்தபெயராயிரமுமென்சீரை
யுடைபெறுமாதவர்புரையவோதுவநின்றுருகுவான். ௩௬.

வருவினைசஞ்சிதவினைமாவடிவினைவாய்ந்துயிர்பருகு
பொருவினைமூவினையுமொருவினையுமாறெவ்வாயா
லிருவினையொன்றுமளவுமெவ்வுயிரும்புரியும்வினைக்
கருவினையாயவனுறைந்தானஃறிணைசெய்வினைதனையே. ௩௭.

அவ்வேலையடுதிறற்சூரவுணவுயிர்குடிப்பவடற்
செவ்வேலைவிடுகுழகன்றேவருயிர்பருகவெழு
மைவேலைவிடநுகர்ந்தாய்வேட்டமெனமனம்புரிந்த
திவ்வேலையருளெனமாயாசலஞ்செல்கெனச்சென்றான். ௩௮.

பிரணவவொண்பாரைவைகிப்பெட்புறமுன்னுறைந்துமலர்ச்
சரணமிசைதாழ்முனிவர்தமைநோக்கியாதிரனி
லரணநமக்கெனவதைந்ததிதுவென்றனதுகொண்டு
மரணமின்மாதவாமூலத்தானமெனவழுத்துதலும். ௩௯.

பூந்தார்வண்குரவனருள்புரிந்தொருவிப்பொருவில்புட்ப
சாந்தாரத்தெழுந்தருளிக்கனல்விழிப்பேழ்வாய்மிருகம்
வேந்தாதிவிலங்குவணமுதலியபுள்ளினமிடைந்து
தாந்தாமாதிரிந்துபதந்தாழ்வகையருளினான். ௪௦.

அணிக்கோலவரைமுனிவரமரர்தமக்கரியசெருத்
தணிக்கோலமெனவிசும்புதடவுதடஞ்சிலைமலர்த்தண்
சணிக்கோலம்புரிந்துமுதற்காட்டியசெவ்வேணில
மணிக்கோலவள்ளிதிருமணக்கோலம்வழங்கினான். ௪௧.

வெள்ளியங்குன்றொருவிவள்ளிமென்கொடியிற்சிமிழ்ப்புண்டு
பள்ளியங்குன்றெனமுருகமழகளிறுபரிவுறலாற்
றுள்ளியங்குன்றருவிநெடிதுவைத்தெழுமக்குளிர்துவடு
வள்ளியங்குன்றெழிற்செழுமங்கலசிருங்கமெனவழங்கும். ௪௨.

முல்லைவனத்தயில்வேற்கைமுருகனெழுந்தருளிமுன்னி
யெல்லையின்மாதவம்புரிமாக்கண்டனுக்குமீர்ந்தொடைப்பைங்
குல்லைபுனைபகவதிக்குங்காட்சிகொடுத்தருளிநித்தந்
தொல்லையபல்லுயிர்க்குமருள்சுரந்துபூம்புரைவதிந்தான். ௪௩.

மைத்தவழ்மங்கலசிருங்கமான்மியமிதனையன்போற்
கொத்துதழியோன்றனம்பலவுளவன்றியுங்கோல
வத்திரியினிற்றெய்வநதிகளுமுண்டாடினரை
முத்தியினுய்ப்பிக்குமெனமுன்முற்றுமொருங்குணர்சூதன். ௪௪.

௩-வது வராககிரி ஸ்ரீவஸ்தான சருக்கமுற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௨௨௪.

திருச்சிற்றம்பலம்.

## எ-வது நதியுற்பவித்த சருக்கம்.

விதியிணங்கிநான்மறைவழிவிழைவுறமுயல்வோர்
துதிபுரிந்திருகரஞ்சிரங்கொண்டுசூதனையே
மதிமிலைந்தபொனமணிமுடிவராகமால்வரையி
னதிவருஞ்சரிதையைநவிற்றுதியெனநவிலும். ௧.

தொலைவின்மாதவர்சொலும்பெருங்கயிலையிற்றூய
கலையிலாயமூலப்பிரகிருதிசன்னிகையாயத்
தலைவணங்கிநீடலையெறிகடல்வளயத்தி
னிலைபுரிந்தவந்தனைக்கிடநிகழ்த்துகென்றுரைத்தான். ௨.

ஒஞ்சுபல்லுயிருயிர்ப்பதற்கேதுவாயிருந்த
வஞ்சுளாடவியெனுங்காப்பபுரியினைமருவி
விஞ்சுதேனுவினுருக்கெழிவிழைந்தெமைப்பூசித்
துஞ்சிடும்படியுலகெலாந்தருதியென்றுரைத்தான். ௩.

கண்ணுதற்பெருமானருட்கடிநகாபோகி
யுண்ணிகழ்ந்தவாபுரிந்தவகேழலோங்கலின்மே
னண்ணிநோற்றனளாவெனமாவெனநணுகு
மண்ணிறேவர்கோன்பிழைத்தனளிஙழுத்திடுநாளில். ௪.

கொந்தராநறவக்குளிர்பொன்னிதழிப்
பைந்தராபுனைபண்ணவனேவலினால்
விந்தராசலம்வென்றவன்வெரிநறுஞ்
சந்தராபொதியந்தனிலெய்தினனால். ௫.

பண்பாலுயிருய்ந்திடமுன்பரவை
யுண்பாவலனெண்சிகரத்துறையு
நண்பார்பொருணைநதியின்புனலைத்
திண்பாருலகஞ்செலவுய்த்தனனால். ௬.

ஒருசீருணவெற்புழிநின்றுயர்பார
வருநீர்மையுமவ்வடிவங்கொளலாற்
பெருநீர்வருதாம்பிரவன்னியென
வருள்சேரொருபாதியடைந்ததுவே. ௭.

ஒருபாதியுதக்கினடந்துபிலந்
தருமோர்நெறிசார்ந்துவராசகிரி
வருதேனுவுமாழையும்வைகிடமீ
தருள்கூறவெழுந்ததளக்கரினே. ௮.

விண்ணந்தருகார்வரைமீதுவிராய்த்
தண்ணந்துறையைந்திணையுந்தழுவி
வண்ணந்தருபலபொருளும்வாரிக்
கண்ணன்றுயில்பைங்கடல்கண்டதுவே. ௯.

திரையிற்செறிசித்திரநன்னதியென்
றுறையிற்புகழ்கொண்டொழுகொள்ளருவி
குரையிற்பொலியுந்திரிகூடசல
வரையிற்கலையொன்றுவழங்கியதே. ௰.

கலையொன்றுகணந்தவழுஞ்சிகரத்
தலையொன்றருவித்திரடாழுமணி
மலையொன்றிவருந்திகழ்வைகையென
அலையொன்றுவராழியினாக்கதுவே. ௧௧.

நீராழிநிலம்புகழுங்கலையொன்
றோராழியுதக்கெழல்போலொழுகிப்
போராழிபுனைந்துபெருங்குடபாற்
சாராழிபுகுந்துகலந்ததுவே. ௧௨.

பொற்பாரபொதியம்பொருவிற்குமர
வெற்பானவைமின்மிளிருஞ்சிகரத்
தப்பால்வருநன்னதிதன்பெருமை
நற்பானமையையாவர்நவிற்றுவரே. ௧௩.

வேறு.
ஆனமாயைவெற்படைதலாலருட்பிரகிருதி
தானமெய்தலாலநதமான்றடம்பொழிற்கருவூர்க்
கோனவற்குநன்பாலுடனூட்டலாற்கொணர்ந்து
மாநிலத்திலம்பாநதியென்பர்நூன்மரபோர். ௧௪.

மாழைசூழல்போந்தாம்பிரவதியெனவழங்கி
யேழைதேறுவினுருவுகொண்டினிதுவீற்றிருக்குஞ்
சூழல்போதலின்றுளம்பமான்பொருனையென்றொருபே
ரேழிருங்கடலுடுத்தபாரிசையபமேவியதே. ௧௫.

மணிமுத்தாறுகாவிரிவரிவாளைபாய்பொருனை
யணிமொய்த்தோங்குமுக்கூடலினணிமணியீசன்
றிணிமொய்த்தோங்குமெண்டோட்டிரிகுலேசன்வீரேசன்
பிணிமொய்த்ததேறுவநதேறுமெம்பிரான்பிரமேசன். ௧௬.

தாரகேசுரன்றயங்குகொங்கணேசன்வாகீச
னறணிந்தகாளீச்சுரனருள்விசாலேச
னேருறுங்கரசேசனேடகத்தியவீசன்
சீரிணங்கனந்தேசன்வைகிடங்கரைதிகழும். ௧௭.

இன்னநம்பதிமற்றுளபுடைபுடையிலங்கு
முன்னருந்துறைதொறும்பலதீர்த்தங்களோங்கு
மின்னடுங்கிடையுமைபசுவுருக்கொடுமேவு
மன்னெடுங்கொடுமுடிபசுமலையென்பாகண்மாதோ. ௧௮.

முன்னையானபொருணைநதியன்றிமாமோழ
னன்னெடுங்கிரிமீதுசண்முகநதியுளவா
லன்னவற்றினன்சரிதைமேலறைதுமன்றி
முன்னருந்திரிவேணிசங்கமமுளவுரைப்பாம். ௧௯.

வேறு.

கீற்றிளம்பிறைமுடிக்கிரீசனைப்பரா
யேற்றவேழ்மகளிர்குற்றேவலாற்றமுன்
யேற்றடங்கட்டளிரமேனியம்பிகை
யாற்றினடவமிமயாசலத்தினே. ௨௦.

அரியமாதவந்தெரிந்தணங்கையாய்வுழி
வரிமலர்க்கொன்றையோன்வதுவையாற்றினன்
பிரிவுறுதொழுகுமேழ்பேதைமார்குழீஇப்
புரிசடையோனடிபோற்றிநின்றனர். ௨௧.

ஆங்கவர்சடிவிழைவறிந்தரண்கனி
றோங்கலின்வேதகூபததிஞெண்ணுறா
வேங்கைநீழலிறறவம்புரிதிர்மென்மலர்ப்
பூங்கொடியீரவரந்தருதும்போமினென்றான். ௨௨.

அருளியவாற்றினேழ்பெயருமாதிடை
மருவினர்தென்றிசைநோக்கிமற்றவர்தீர்
நிருமலனிருபதநினைவினெஞ்சினர்ந்
துருகினரருந்தவமுஞற்றலுற்றனர். ௨௩.

கள்ளவிழ்குழலியருளங்சவற்றிவன்
றள்ளிலைச்சூலிறையருளின்வாரியுந்
துளஞுசாவித்திரிப்புனலுஞ்சூதீர்
வெள்ளமும்வெகுண்டொலிவிழைத்தவேலைபோல். ௨௪.

வளைத்தனநெருங்கினவளரிளம்பிறை
முளைததனுநுதலியர்முகிழ்த்தநெஞ்சினின்
டிளைத்திலரெம்பிரானிணைமலர்ப்பதந்
திளைததனாவலங்கொடுசென்றநீததமே. ௨௫.

பைந்தொடியோர்புடைவிளங்கப்பால்விடை
யுந்திநின்றிறையவனும்பரேத்தவேழ்
செந்துவாவாயினாதிளைப்பக்காட்சியு
நந்தலில்வரங்களுநல்கியேகினான். ௨௬.

ஆதலின்வைகுமப்பீசர்நாமமு
மாதரீச்சுரமெனவழங்கிற்றவ்விடத்
தோதுமாயாசலத்துடனுதித்தலாற்
றீதின்மாயாபுரிப்பெயர்சிறநததே. ௨௭.

மன்றலங்கோதையர்பொருட்டுவல்லுழிக்
குன்றினின்னதிகளோராமூன்றுங்கூடிய
மின்றருதலந்திருவேணிசங்கம
மென்றனருணர்வினரின்னங்கேட்டிரால். ௨௮.

விளம்புமாயாபுரியதற்குமேற்றிசை
யளந்திடுமூவிருகுரோசமற்றபின்
களங்கொள்காளிந்தியுங்காமர்வாணியும்
குளிர்ந்தவான்பொருநைநன்னதியுங்கூடுமே. ௨௯.

மேவிடனுந்திரிவேணிசங்கம
மாவயினிருமலன்சகளனாகிமென்
பூவைவண்ணனைமலர்ப்புண்டரீகனைத்
தாவரவிருபுடைதரித்துநின்றனன். ௯0.

வடிவுடைமுதலைமாப்பிரபுவென்பனீண்
முடிநெடுமுகுந்தனுமுளரிச்செம்மலுங்
கடிமலாபொழியானன்கருளிக்கன்மிசை
யடிமலர்நிறீஇயறிவரியனாகினான். ௯௧.

அருவடிவிலனுருவம்புயச்செழுந்
திருவடியமலருட்டினைத்துக்காண்பது
கருவடியினினுறுஞ்சமலாகாண்பதற்
குருவடிவறிவரிதுண்மையாமரோ. ௯௨.

வேறு. சீதமலர்த்திரிவேணிசங்கமத்தெண்ணீர்செழும்பொற்றசும்பிற்
பெயதேழ், மாதர்வழிபாடிழைக்குமாதரீச்சுரநாடியருளவுய்ப்பின்
மேதினியெவ்விடனுமிருவிசும்புசொரிதருமாரிவியந்தெஞ்ஞான்றுஞ்
சோதிபதச்சுவடுவைகுஞ்சூழல்தலனைச்சோதிபதத்தானமென்ப. ௯௩.

வேறு. மைத்தடம்பொழில்சூழும்வராசவெற்
புத்தரத்தினொண்மாந்திமேற்கரை
சித்தவொண்கிரியுண்டதிற்சித்தர்கண்
முத்தர்மொய்த்திருப்பார்முத்திமுனனியே. ௯௪.

அன்னநற்கிரிமீதுண்டரனரு
ளென்னுமேழ்பெருந்தீர்த்தமவற்றினுட்
பன்னிரண்டுபருவந்தொறும்பரன்
றன்னுவேணிச்சுரநதிதோன்றுமே. ௯௫.

நெய்வநன்புயலாயவத்தீர்த்தத்தி
லய்யநெஞ்சினுருநுசென்றாடினோர்
வெய்யவெம்பிணியாவும்விளிந்திடு
மொய்யெனக்கதிசேருவருண்மையே. ௯௬.

அறையுமக்கிரியானபொருனைகோா
சிறைவலாரிதிசைச்சந்திரகிரி
யுறையுமொண்புனற்றண்ணளியுண்டது
பொறைஞர்போற்றுமப்புண்ணியதீர்த்தமே. ௯௭.

தண்ணந்திங்களோர்சாபத்தினுற்றிடக்
கண்ணதாங்கயரோகங்கடிதலா
லென்னருஞ்சசிதீர்த்தமென்றெங்கணு
முண்ணலங்கொடுரைக்கவிளங்குமே. ௯௮.

வாலவிந்துவளரவளர்ந்திடுங்
கோலமேனிகுறையிற்குறைந்திடு
மேலுமோாபுனலெவ்வந்தொலைக்குநோய்
சாலும்வெய்யபவமுந்தணிக்குமே. ௯௯.

துய்யபூரணையிற்சுனைதோய்ந்திடிற்
பய்யுடீரகங்கைதோயும்பலனெய்து
மய்யமில்லையதகம்பலவுள
தெய்விகம்பலவுண்டச்சிலம்பினே. ௪௦.

அதன்மருங்கிலொன்றூழ்மடுவாடினோர்க்
குதவுஞானமதற்கொருசார்வைகுஞ்
சிதைவில்சூலசிருங்கததோர்வாவியற்
பு: முறும்பலபுதுமைகணல்குமே. ௪௧.

கிளைக்குமக்கிரியின்வடகீட்டிசை
துளக்கமன்றிநுமக்குமுன்சொற்றிடு
மளக்கரும்பிரமாசலமாங்கதன்
விளக்கமுற்றபலன்யாரவிளம்புவார். ௪௨.

ஆங்கணுச்சியினைங்கரன்வைகுமீ
தோங்குபலகுகையுண்டவற்றினடுத்
தாங்கரும்பராசத்திவதிந்திடும்
பாங்கரிற்சித்தர்பண்ணவர்நண்ணுவார். ௪௩.

சிற்பராபரைதீர்த்தமுமாதவர
சொற்பராவன்னதீர்த்தமுஞ்சூழுமா
வற்பராபரையைத்தொழுநான்முகன்
சற்பராயனெனுமுருச்சார்ந்தரோ. ௪௪.

அன்னதீர்த்தம்படிந்தைங்கரற்பராய்ச
சின்மயப்பரையைப்புரைதீர்த்தமு
மன்னுபானலங்கொண்டுவந்திப்பவ
ருன்னலங்கதியெய்துவருண்மையே. ௪௫.

பூரணையிற்புகர்மகமெய்துநா
ளோரணையஞ்சொற்றவியற்கையிற்
சிரணையுஞ்சிவையைவழுத்திய
பாரணையபரபதம்பற்றுவார். ௪௬.

அரவெனச்சதுர்வேதனமர்தலாற்
பிரமவொண்கிரிப்பெயர்பெறறுயாந்தது
மரபினோபுடைமற்றொருவெற்பினமேற்
பரவுதெய்விகப்பன்மடுவுண்டரோ. ௪௭.

முற்றகொற்றவர்முற்றுணர்கேள்வியர்
பற்றுநீத்தவாபாங்கரிற்பற்றுவார்
மற்றதன்றென்குணக்கில்வராகமா
வெற்புதக்கிலுளதரிவெற்பரோ. ௪௮.

காசைவண்ணன்கபிலையுருவுகொண்
டோசைதீர்சத்ததீர்த்ததிறெண்கரை
யாசைதீர்சித்தரும்பாக்கருணல்கிப்
பூசையீசனைப்போற்றிப்புரிந்திடும். ௪௯.

மாயன்வைகலினுற்பெருமாள்கிரி
யாயதந்தவசலத்துதக்கினிற்
சேயசத்திசிவகிரிரண்டுள
மேயவற்றைச்சொல்வாமினிமேலரோ. ருO.

சூகராசலத்தொல்வளங்கூறநா
வேகரானவருக்கெளிதோவுமை
பாகராரமென்றேதப்பயன்பெறு
நாகராயனவிற்றினவிற்றுமே. ருக.

வன்றிறற்பன்றிமால்வரைச்சாரலி
ன்றுமுத்தரத்துள்ளதுதென்றலங்
சன்றுலாங்கன்னிகாரவனந்தனிற்
கொன்றைநாறுங்குறிகுய்யமென்பவே. ருஉ.

அரியயன்றெழுமவ்விலிங்கத்தையுட்
பரிவினேத்திப்பணிந்தரிச்சித்தவர்
தெரிவருங்கதிசேருவர்திண்ணமே
துரியமாதவிரென்றனன்சூதனே. ருங.

எ-வது நதியுற்பவித்த சருக்கமுற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் உஎஎ.

**திருச்சிற்றம்பலம்.**

---

## அ-வது கன்னிகாரவனச் சருக்கம்.

---

சுருதிவேதியர்சூதனைத்துதித்துநீர்சூழ்புவியிருள்சீய்க்கும்
பருதிபோலுளவிருள்கெடவிமைத்தசெம்பருதிநீபகர்காதை
பெருகுமின்சுவையமிழ்தினைக்கருணையாற்பெட்புறவினிதாறு
மிருசெவிப்புலனுகர்வதற்குவசைபூத்தின்னமும்விழைகின்றும். க.

புனிதமாதவாபொங்கொளியிலிங்கமொன்றுள்ளதுபோறறினருள்அங்
கனியுமாறுபேரின்பமேதருமெனககழறினைபவநோயிற்
றுனியுறுதியாமறியுமாறதனதுபெருமையைத்துகடீாக
நனிவிழைந்துரையெனத்தொழுதாபெறநவிலுவானெதிாபோற்றி. உ.

மருளிலிங்கநீருளம்புரியாதுமாதவம்புரிந்துயர்ஞானத்
தெருளிலிங்கதுவீதெனும்பான்மறைதெரிவருஞ்சிவரூப
வருளிலிங்கமற்றதன்றிறமறைகுதலறநெறிதனவேசிற்
பொருளிலிங்கநெஞ்செழுதிமுன்பார்த்தபின்சேணமெனப்புகல்கின்றுன்.

அண்ணலுக்குநஞ்சருத்தலிற்பத்திநாந்தாங்குதலறனென்று
வெண்ணருநசவமிழைத்திருநிலநின்மீதெறிதிரைப்பாலாழி
விண்ணெடுங்கிரியுருவெடுத்தாங்கொளிவிளங்கியவேதியர்விண்ணோ
ருண்ணிகழ்த்தமாமறைப்பிழம்பெனநிமிர்ந்தோஙகுமோர்வேதண்டம். ச.

அந்தநீளவரைச்சிகரியிலாயிரங்கோடியர்தவரொன்றாய்
வந்துதித்தனசினகரதசரியயன்வானவாமுதலேனோ
முந்துறச்சிரமிசைகரமுகிழ்ப்பவெண்முடங்குழையரிமான்சூழ்
தந்தமாமணியாசனத்திறைவியோடிருந்தனன்றனிநாதன் ௫.

அருளுருப்பொலிநந்தியெம்மடிகளைக்கைப்பிரம்பொலியவைநாப்பண்
டெருளுறுநெஞ்சினன்சுரர்குருச்சென்றெதிதாழ்ந்தெழுந்தனன்சென்னி
மருமலர்க்கரங்கூப்பினனிருகண்ணீர்வாரருவியினமுழுகி
யுருகினன்பரவசத்ததைந்தனன்விழித்தொருவனதடிபோற்றி. ௬.

குறிகுணங்களாயினையவையொழிந்தனைகோதின்மாமறைச்சென்னி
யறிபழம்பொருளாயினையறிவருநகரியையாயினைமூல
நெறியினின்றகன்றனையுயிர்தொறுந்தொறுந்தருப்பணநிழல்போலச்
செறியநின்றனையிறைவநின்றிருவுளசசெயலறிகுநர்யாரே. ௭.

அற்புதத்தினைமறைகட்கணுகொணாவருவுருவெனநின்றாய்
முற்புரிந்தமுச்சொழிலினைதொழில்புரிமூவராயினைமூவாய்
சொற்பொருட்டெரிவோருளர்செரிநரனைசூக்குமதூலத்தோய்
சிறப்பருஞ்சுடருருவநின்றிருவுளச்செயலறிகுநர்யாரே. ௮.

எனைத்துதித்தருட்கடைவிழிபெயாதிமையவர்குருதொழுமேல்வை
மனத்துதித்தகம்பரன்பினளொருபுறம்வாழந்திருப்பவளவானோ
சினத்தநீடபொறியமிழ்திறுகட்பெரியகிம்புரிக்கோட்டுக்
கனத்துதிக்கைமாலியானைவிழுரியினன்கனைகழறபநமபோற்றி. ௯.

பாலலோசனமானமுதலியர்கடம்பருவம்வீயினும்வீயாக், காலகால னைமெயதமோகநீக்கன்கழறியவற்றுட், கலசகுமவுருவினையெனநினைத் துதித்துத்தேசரினமாறின, றெலவோமெனவிரண்டுமொராதொடர்புகொண் டிருக்குமெனறனனெனநதை . ௰.

துண்டவெண்பிறைநுதலிச்செட்டிறைஞ்சித்துணைவருக்குமதூலமென்றி ரண்டுங், கொண்டதோர்தொடர்பெலறமைபிரிதலுசகுவலயத்தருச்சிப் போர்க்கருள்வாய், விண்டொனக்கிரிமுழுவதுஞ்சொய்யமெங்கோபுரஞ்சி கரமும்பலிதூ, மெண்டருந்திருப்பீடமுமவுமிலர்தூலமாமிலிங்கமற றதுமவ. ௰௧.

அவ்விலிங்கமரற்றேழ்வகைத்தாகுமதறவைறறுண்மரமெருகாரணமினறிச் செவ்விபெறறெருசுடர்சகிரியடிவாதிகழ்தபாருலகைசூழ்ந்தவேரோடிப் பவ்வநீணிலத்தருட்கொழுந்துருவம்படைததுநாலிரணடொன்றெனுமிய ல்பிற, சய்வநன்னெறிதழைத்திறநதொல்லாய்ந்தநயங்கியோங்கொளியாய துசயம்பு. ௰௨.

இலங்குமச்சிவகிரியிலொருபோதேனுநீப்பரிதெனவுறைகுவம்யாம்
விலங்கலஞ்சுடர்ச்சிகரியானகொழுந்துமேயவருங்குறிதெய்விகலிங்கம்
புலன்களைநதையுஞ்சளைந்தொருங்குணாந்தபொதயமாமுனிமுதலமாமுனி
வா, தலங்களெங்கணும்வழிபடல்புரிவான்சாரிலிங்கமந்தாரிடலிங்கம்.

செய்யதாமரைக்கிழவனுநதுளபத்தெரியன்மார்பனுங்குலிசருஞ்சுரரும்
வெய்யசொறறைததியருமறறயரும்வேணயாவுறல்காணவரலிங்கம்
வய்யமாமனுமுதலியங்குபர்வழிபடுங்காரிமானிடலிங்க
மய்யராகியமேனோர்பெறதிறுவிடலரிமைசுதியதுநரலிங்கம். ௧௪.

உயிர்பிரிந்திடுங்களேபரங்கழியவுண்டுதேக்குமொள்ளெரிதவழ்சாணி
ணியமமுற்றாயாசினகரங்கோலிநிறுவுமக்குறிமயானநீடிலிங்கங்
கயனெடுங்கணாயீராறுபருவங்கழிந்தபின்பதிற்கவினிவீற்றிருப்பேம்
பயில்வுகொண்டுமுன்பகர்சயம்புவினிபரிந்துவந்தனைபுரிந்திடுகென்றான்.

நீலவாட்கணியுளங்குமிழ்த்திறைவநினைச்சயம்புவிலரிச்சினைபுரிவா, னேலவோர்தலனருள்கெனததென்பாலேனமால்வரைமூவிருகன்னர், கோனா முத்தரங்கொங்குநீள்வனத்திற்குரவனுந்தளவனும்புரிகினறதவததான் மூலமாயுதித்தனமவணெய்திமுயன்றுவந்தனைபுரியெனமொழிந்தான்.

**வேறு.**

கேட்டாளுமைமீளவுஞ்சேழலனைப்போற்றிமாலுந்
தாட்டாமரைச்செல்வனுநதாழ்ந்துதவங்களாறறி
வேட்டாயிடையுய்ந்ததெனக்குவிரித்துவாக்காற்
காட்டாயெனக்கார்மிடற்றெந்தைகழறுகின்றான். ௧௭.

கேளாயதுமுன்புகிரேதாயுகத்தில்வையந்
தாளாலளநதோனுலகநதருமாறுநாபி
நாளார்நளினததிடைநானமுகனைப்பயந்து
மூளாரணத்துட்பொருளாகியமூலநல்கி. ௧௮.

சாராவாய்வியாகிரிதிப்பொருடானும்வீசிப்
பாராவான்முதலாயபடைததியெனப்படைத்தோ
னோவாய்மறைப்பொருள்யானெனுமுள்ளந்தோன்றிச்
சோவாயசருத்தனசநதையிற்றேயலுற்றான். ௧௯.

பூப்பானும்பூதம்யாவையும்பூத்தவண்ணங்
காப்பானுஙகாபபவைமுற்றுஙகடந்துநின்று
ந்பபானுமீளநிறுததிநிறுததுவேதங்
கோப்பானுமபெய்துரங்கொட்டிநின்றான். ௨0.

தண்டாமரையோன்செயருமறைக்கண்ணனோர்ந்துட்
கொண்டான்குறிப்பிறபிறந்தாரகுழைக்காதிரண்டி
ரண்டானவராயமதுகைடவரெனபோ
ருண்டாமறையைக்கவர்நதேகினரோதைவேலை. ௨௧.

தோட்டின்கமலத்தன்றுளாய்ப்புயர்சொற்றிரம்பி
வீட்டினபொருளாரணநான்கையும்வேறுபோக்கிக்
கோட்டுநதிரநெஞ்சுடைத்தாய்ப்பிறர்கொளளநாளு
மீட்டும்பொருள்போக்குமகந்தையரென்னநைநதான். ௨௨.

நானேபிரமப்பொருளெனபதுநைந்துவேதன்
றானேதுதிப்பத்தளரேலெனத்தந்தவேலை
மீனேயெனத்தானவர்செற்றுயர்வேதநான்கும்
வனேழ்நிலம்பண்டையினேங்கவழங்கலுற்றான். ௨௩.

ஆர்த்தானுவகைக்கடன்மூழ்கியறிவின்றாசு
போர்த்தான்சரியோன்செழும்பொன்முடிமீதுபோது
தூர்த்தானவனாயிரநாமமுஞ்சொல்லிசசொல்லி
நாத்தான்றழும்பத்துதித்தானவகீர்த்தியென்றான். ௨௪.

அவ்வாறுதுதித்தவனைக்கதிராழிதாங்குங்
கவ்வானவன்கையமைத்தெண்டிசைக்காவலரு
மெவ்வானுலகத்திமையோர்களும்யானுநீயு
மொவ்வாவொருவன்றனைப்போற்றிடவோதுகின்றான். உரு.

நினாற்றெருழுவோற்றெருழுமாலுமைநீலமேனிப்
பன்னாகணையாய்பசாசென்றிடும்பாலனெடு
மன்னாளடைந்தான்கருமாவரையந்தண்சாரல்
நன்னாண்மலர்கொங்கவனத்தைமுனனாலமுண்டோன். உசு.

சண்பாலின்மலர்த்தடங்கண்டதன்றண்ணந்தீரத்
தென்பார்வையோனைப்பணியாய்த்தவமாறறுகென்று
வெண்பாற்கடற்றனவற்கொல்வினைவிட்டமீனின்
பண்பாற்றவமாற்றினனீருட்படிந்துமாயன். உஎ.

உழைத்தாரணமோதியைந்தாறமைத்துனடிநீத்து
விழைததாரனந்தம்பதப்போதில்விழைந்துகுல்லைத்
தழைத்தார்புயல்வண்ணனுந்தாமரைக்கண்ணியோனுந்
திழைத்தார்தவமெண்ணைந்துநாள்வரத்தெய்வமாண்டில். உஅ.

பாதாளவித்தோங்கலிஞெங்சொளியாகப்பாரின்
மீதார்சிவலிங்கவுருக்கொடுமேற்குநோக்கிப்
போதார்திருப்பாறகடற்போலும்பொய்கைவாயிற்
காதார்குழைக்காரிகைகாட்சிவழங்கினேமால். உகூ.

அஞ்சேலுருப்பாப்புருவாயபுதநேளிர்யாங்க
ளஞ்சேஞ்சிறியோமையாள்பெயோயையென்று
நெஞ்சேறுருவந்தனையாற்றிநிச்சநிச்சஞ்
செஞ்சேவடிபோற்றினரைப்பசித்திங்கண்முற்றும். ௩0.

மழைவெள்விடைவந்தெதிர்கேண்மின்வரங்களென்னக்
குழைவந்திடுதானவறசிந்தியகோதுநீங்கப்
பிழையுளளனவாற்றினுநிற்பிழயாமைநிற்சப்
பழையோய்வரநந்தருளென்றனன்பைந்துழாய்மால். ௩க.

நானென்னுமகந்தைகழிந்துனைநாளும்போற்றித்
தானன்னரளித்தியென்றான்றாமரைத்தாமமார்பன்
மீனன்னநோக்கியிருவாக்கும்விழைந்தநல்கி
யானன்னிகிலேயோய்விலாமேவினமவ்விலிங்கம். ௩உ.

ஆயும்பசுத்தார்த்துளவோனுமம்போருகத்தி
னேயுஞ்சதுாவேதனுந்தத்தமிருக்கைசார்ந்தார்
நீயும்புரிவந்தனைமுன்னர்திகழ்ந்தவாற்றாற்
றீயோன்கரியாகவருங்கடிசெய்துமன்றே. ௩௩.

கரியோன்வேதியன்புரிநாட்கனிந்துசிறியோமையாள்
பெரியோனென்பதினுலும்பிரமமாதலினுலும்
வரியோடுமதர்நெடுங்கண்மடநல்லாய்குறியையரு
ளரியோர்கடொழும்பெரியாவுடையநாயகனென்றும். ௩௪.

அன்றரிவராலெனவந்தனையாறறலானுமய
னின்றுபரவுதலாலுநிகழ்சன்னிகாரவன
மென்றுமதுசபரபுரம்பிரமபுரமெனுநாம
மொன்றிவிரவியதுமூன்றுலகமெனவோதுதலும். ௩௫.

வென்றிவெங்கணிச்சிதாங்கும்விமலனைமீட்டுநோக்கி
யென்றுனைததலைவமுன்னரிசைப்பதோர்மாற்றங்கொண்டு
நின்றெனைவழுவைசெய்வாய்சிறப்புசபூசையென்ற
சொன்றறவுணர்சதெனருளபல்லுலகமீன்றளித்தகன்னி. ௩௬.

தாளிருளோதிசேண்மின்றருகாவனத்துள்வைகி
வாழதனர்மறைநூறகேளவிவழிபிறழ்நசாற்றினூர்தா
முழமுறைகுறியாரன்றொமுக்கமவேறொழுக்கமாசப்
போழுதுமெனறுணரும்பொழ்திறபோந்தனன்பூவைவண்ணன். ௩௭.

தாமரைச்கிழவனேனோர்சார்ந்தோரவ்வனத்தி
ருமுனிகசணவாமெவழ்வியசமபிரமசதிருறறுந
தோமுறுமொழுக்கமபாறசொற்றனர்தொழுதுபோனூர்
சேமலாததுளயோனநரங்குறிபபினைத்தெரிந்துநிற்ப. ௩௮.

விண்டவன்பாற்புன்மூரல்விளைத்தருட்கடைக்கணசோப்பத்
தண்டுளாய்ப்புயலுணாநதுசாபசாவனத்துட்சேரல்
சொண்டதுகுறிபபெணறங்கைமுவிததயல்யெயர்காற்கோலம்
பண்டையையாதிலொனறுகொண்டகாபாலியெனன. ௩௯.

மாசநீணெறிச்செல்சாலைமைதிறமணிநீவண்ணன்
மோகினிவடிவுதாஙகிமூஎபுசைருவித்துநின்று
நாகிளவடிவுமாதர்நவிலபினயமுங்காணு
வாசமுள்ளூறுதகாமநதுயப்பதறசருததிவைத்தான். ௪0.

மாமலரினைசர்சண்மாமலரொடுசொருகுமைம்பாற்
காமர்பொஙகினிமரைசாயறகாண்டனுஙகலவிவேட்டு
யாமுனைமுயனுமெனனமாறபுதிறையகறபுந
தாமுனிவராதமனீறுநசண்ணதபினறமுவுசென்றான். ௪௧.

அஙசதுநிகழ்ச்சபின்னரகல்விசும்பொருவிவேழ்வி
தங்குதல்வனம்பொருஙகிசாமமுத்தாரநசாங்கும்
பொஙசெழினமுலையாமுல்லைப்புறநதலாசெறியப்புகசெஞ்
செங்கணன்முனிவர்சிந்தைதிரைசொரிதரச்சென்றூல். ௪௨.

செருத்தலைசொறுநாமயயந்தேர்தலைமலைவில்சற்பின்
சருதலைவாவாண்டேற்றுக்காதலைகுழையார்சாதற்
பெருதலைடல்போறபொங்கப்பெயாநதலையிலராய்க்கையோ
டுருததலையோடோவென்பாரொருதலைக்காமமுண்பார். ௪௩.

உறுசிறுதொடியொலிக்கோவொழுகியுள்ளாழங்கொள்ளு
மறுவில்சீரொலிககோமம்மாமனங்கொடியைவார்வந்து
குறுநகைநிலவுசொள்ளைகொண்டுவன்சசோரம்போல்வார்
தெறுவுபூணணிசங்கோசஞ்செய்யசெங்கலைகள்சோர்வார். ௪௪.

மல்லியமுல்லைச்சாய்கைபாற்செலவுந்துகாமம்
பிணியநெஞ்சராயெம்பிரானீர்நங்கேழ்வரில்லை
யணியபல்லங்கேட்டுமையமுண்டையமில்லை
யெனவினைவொருசற்றிங்கேயிருந்தெழுந்தருளுமென்பார். ௪௫.

செய்யநங்கரந்தசெவ்வாய்புண்டாஞ்சிறந்தநெறறித்
துய்யவாபொருளாய்த்தோன்றினீர்தொடாமனத்தராகி
மையல்கூர்காமஞ்சூழ்ந்துநுமதுகைவசத்தரானோ
மையமெனறுழல்வீர்மேவீர்வீட்டின்பயன்றாவென்பார். ௪௬.

வேணவாவுடையேங்காமவெள்ளத்தாட்டாழவைத்தீர்
பாவனிசைநீராணீர்சரவனைபறித்தீர்வாளா
நாணிறையாவித்தூசுநலன்கலன்பலிக்கபாலத்
தோணியுட்சுமத்திச்செல்வீர்பழியுநீசுமந்தீரென்பார். ௪௭.

சேண்பலியென்பீர்கொண்டுசெல்கின்றீரவளையோமுற்று
நாண்பலிகொள்வீர்கண்டார்நகுபலியன்றிமாத
ருணபல்கொள்வீரல்லீருயிர்ப்பலிகொள்வாபோலும்
விண்பலிசேர்வீர்போசமிசைப்பலிசேரீரென்பாா. ௪௮.

தொடாவர்பின்றுடாந்துபக்கஞ்சூழ்வாசூழ்போழ்துமோகம்
பிடாபிடித்துநசவோடிப்பிடித்துமென்றடிச்கீழ்வீழ்வ
ரிடரினமுனபிறந்தகோலமெமகசறிவிப்பார்போல்வார
மடநல்லாாதிறனீதாற்றுமாதவாதிறனுஞ்சொல்வாம். ௪௯.

ஏவலின்றலைமைசாரந்தவீரந்துளாய்மவுலிப்புத்தே
ளாவயினழகுபூப்பமோகினியாயசாலை
போவறுவேழவிகதூமமணம்வெறுததுறுவோர்துண்டம்
பூவலரோகிநாணப்புதுமணமோாந்துயிாப்ப. ௫0.

மந்தனமறைநூற்கேள்விநீத்துமாமுனிவர்கேள்வி
கொநதலரோதிவண்டின்குரலின்யாழிசையுங்கோலப்
பைந்தொடிமுரல்வுஞ்செம்பொற்பருவமேகலையினாப்பு
மந்தளிரடியினாசில்லரிச்சிலம்பிசையுங்கேட்ப. ௫௧.

யாவராயினுந்தீதாற்றற்கிடம்பிரிதில்லாத்தாரு
காவனநலன்யாவுநதண்காமருட்சவர்ந்துகொள்ளத்
தூவிழுதுஞ்சுருககுநதொழில்களுஞ்சோாந்துகாமத்
தீவளர்தொழிலராய்மாதவர்மனநதிறப்பச்சென்று. ௫௨.

பொருந்துபாலெலகினப்பேடும்பூணுதற்பிடியும்போற்று
மருந்தவருயிரும்பினபோயடிக்கடிதொட.ரவெங்கும்
பருநதலைநெடுவேலொண்கண்பரப்பிவண்குழையில்வீச
முருக்கிளநிலவுதட்பமுறுவலித்தோங்கிநின்று. ௫௩.

பணைத்தடியிறுகிவிம்மிப்பளபளத்திளகிச்செம்மாந்
தணைக்கவின்முடியிலண்ணாந்தெழில்சுமந்தறவோராவித்
துணைத்தவமுழுதும்வவ்வித்தொழுங்கழைக்காமன்றாவுங்
கணைக்குநன்சொடைவழங்குங்கதிர்முலைததிருவங்காட்ட. ௫௪.

காமர்பைங்குவளைவள்ளைகயிரவஞ்செண்பகஞ்செந்
தாமரைமலர்ந்துகோங்கமுகையிளந்தளிர்தளிர்த்துப்
பூமலாகொம்புபோன்றுபுனமயிற்சாயல்வாய்ந்து
தேமலரன்னமென்னவருவதுதெரியக்கண்டார். ருரு.

கண்டனாகாமமுற்றுங்கண்களின்முகந்துவாரி
யுண்டனர்யார்கொல்லோவானமரர்மாதருமுண்டேயிப்
பெண்டகையார்போலுண்டோபெருந்தவமுடையேமாலெற்
றெண்டைவாயூறலுண்டேமுயங்கலாமென்றுசொல்வார். ருசு.

தலைமலரைம்பால்வைத்தகண்ணியிற்றழலார்வெய்ய
வுலைமலிவேற்கட்பாராவைவலையிலொண்முத்தம்பூண்ட
மலைமுலையொழுக்குவாரின்மாமுனித்தலைவாாய
கலைகள்கோட்பட்டவென்றால்யாவாகாமத்தைவெல்வார். ருஎ.

நிலம்படிவாாகைகூப்பிநிற்பாமுறபரசுவார்போற்
சிலம்படிதாழச்சிந்தைமயக்குறுந்தீர்த்தராயும்
புலம்படியென்முன்பாற்றும்புண்ணியம்போந்தீாகாமப்
பலன்படினுய்வோமென்பார்படிறெழுகலருமானோர். ருஅ.

பங்கயந்தளவசோகம்பானன்மாமலருந்தூய
மங்கையர்முனிவர்மெய்யும்வைகிடந்தொறுந்தொறுந்தூ
யைங்கணைக்கிழவன்போந்தன்றரசுவீற்றிருத்தலாலப்
பொங்கெழில்வனமனங்கபுரமெனப்பொலிந்ததன்றே. ருகூ.

இம்முறைபிறவித்தேன்பான்மாயவனெய்துமேல்வை
மம்மாசற்றொருவியுற்றவாமனத்துணாந்துசாபஞ்
சம்மதித்திடச்சாராமைதெரிந்துசெந்தழல்வளர்த்து
வெம்மையிறபிறந்தயாவும்வெகுளியில்விடுத்துநின்றார். சுo.

வரவரவேற்றும்போர்த்துமருங்கினிலசைத்துமாாத்தும்
விரவுவெம்படைகளாகநிறுத்தியுமிதித்துமாண்டும்
பரவசராயினோருட்பருவரவாறறியும்பீச்
சுரர்முதலினாக்குநன்னாசுரந்தருள்புரிந்தகாலை. சுக.

மோகினியுருவினின்றமுராரிநம்மூரலேற்று
ளோகையனுஞன்யாதுவேணவாவுரைத்தியென்ன
வேகநாயகனீயாணின்றேவியென்றிரந்தானுண்மை
யாகலின்பயனுநல்கியருட்கடிபுரிந்துமென்றாம். சுஉ.

ஆங்கதுநிகழ்ந்ததிவ்வாறந்தமாலெந்தஞான்றும்
பாங்கரின்வைகுந்தேவிநீயதுபகரினுண்மை
யீங்கிதற்கையமில்லையிறைவிநின்கலைபேதத்தொன்
றோங்குமாலெனவேதாவைத்தந்துபாரொருங்குதாங்கும். சுங.

நம்பராபரையுமாதிநாரணன்றானுநீயென்
றும்பருமுணரவேநாமுணர்த்துமாமறையின்சென்னிச்
செம்பொருட்சிவம்யாம்நீயேசிவசத்தியுமாகட்கெல்லாந்
தம்பமாயிருப்பேமன்றிமற்றொருசார்வுமுண்டோ. சுச.

ஆருயிர்க்கிரங்கியன்றேவைந்தொழிலாற்றிமுத்திச்
சாரலினிறுத்தறத்தோர்சிற்பொருட்டணந்துமற்றோர்
சோரினுறபிரமமென்றேதுணிபொருண்மயக்சந்தீர்வா
னேரதாய்த்தொழில்வினோதமிழைத்தருள்வழங்கினோமால். சுரு.

நிசழ்ந்தனமாற்றமுன்னரினையதேநெடுந்தவத்தோர்
புழ்ந்தகொங்கடவியிற்கூவிளநிழற்போதுகென்றைங்
திகழ்ந்தவாமனத்துளண்ணலிசைப்பவேதண்டநீங்கித்
திகழ்ந்தனளாயிடைப்பார்முழுவதுமீன்றதேவி. சுசு.

கருதுதொல்வாமைசேட்டைரவுத்திரிகாளியாதி
தெரியிருநால்வராயசிலதியரேவலாற்ற
மருமலிசனனிகாரவனத்தினிற்பூசைசெய்நா
ளருளியவில்வநீழலருந்தவமுயல்வதானாள். சுஎ.

தய்யலறம்புரிகாலந்தெரிதிரேதாயுகத்தி
லய்யனைவந்தனையாற்றியரியவரந்தரவுயர்ந்தாள்
மய்யறவம்புரிந்ததுவாபரயுகத்திலாயிரவாய்ப்
பய்யுரகபதிபணிந்துதனதுபருவரலொழிந்தான். சுஅ.

ஒள்ளிலைவேற்குரிசில்சவுசலனுலாம்யுகந்தன்னிற
கள்ளலர்தூய்வழிபாடுபுரிந்துபரகதியடைந்தான்
வள்ளல்கன்னிகாரவனப்பெருமைநினைப்பினும்வாயால்
விள்ளினும்விள்ளருங்கதியுண்டெனச்சூதன்விளம்பினான். சுகூ.

அ-வது கன்னிகாரவனச் சருக்க முற்று.

கடவுள்வணக்கமுள்படத் திருவித்தம் ருசசு.

திருச்சிற்றம்பலம்.

## கூ-வது அக்கினியுஞ் சேடனுமருச்சித்த சருக்கம்.

சூதனைமீளவுந்தொழுதுசுடர்மணிவெண்குழைதூங்கு
காதனையங்கியும்பணியுங்கவுசலனும்பணிந்துவினை
வேதனைதீர்ந்ததைவிரைவில்விளம்புதிதொல்வியாதனுக்கு
நீதனயனவனிகரியானென்றாநெறிநின்றார். க.

அறுதொழின்மாமுனிவர்பணிசடைமவுலியவனன்றிச்
சிறுவிதியாற்றியதவத்திற்செறிதேவர்முதலினரைக்
கறுவியெறுழ்வலிவீரன்கடிகாலைக்கதமெரிநா
வுறுகையிழந்துளநாணிக்களதபுதவரையுறைந்தான். உ.

காய்சினவெள்விடையுடையாய்கவிரிதழ்மாதொருபுடையாய்
நீசினவப்பட்டார்க்குநீயலதுபுகலுண்டோ
சேய்சினவவாமனமுற்றிமைத்திழைத்ததாற்பயந்த
தாய்சினவுதொழின்மீளத்தாயலதுதுணையுண்டோ. ௩.

தச்சனுழியடைந்தபெருந்தவறுபொறுத்தருள்கவென்றான்
மிக்கசூகரவரையில்விளங்குகன்னிகாரவனத்
தக்கினிசெல்கெனப்போகியையொன்பான்றினம்பூசித்
துக்ககனல்வல்வினைதீர்ந்தொருதென்கீட்டிசைபுக்கான். ௪.

வன்னிவழுத்தலின்வன்னிநாதனெனவழங்கியது
தன்னிகரில்குறிவனனிபுரமெனச்சார்ந்ததுவனமும்
பன்னசைவேந்தருச்சித்தபான்மையிவ்வாறெனவுளங்கூர்ந்
துன்னருமாதவர்கேண்மினென்றொண்முனியுரைப்பான். ௫.

மதிவீணைக்கிழவன்புணர்ப்பின்மனங்கொதித்தெழுந்து
சிகரமேருவைமறைத்தசணபணத்தீவிழிச்சேட
னிகலிழூதைக்குடைந்துவெள்கியிருநிலத்தொருகா
னிகரினமாதவந்திளைத்துநின்றுநெடுநாட்கழித்தான. ௬.

துளங்காதைந்தவிர்த்துணவுதுறந்துதூங்கியபணிப்பால்
விளங்கொளாதன்மகதியாழினிசைவருவித்துக்
களங்காணுமணிமிடற்றோன்பாடல்கரையக்கரைந்தா
னுளங்காணுமுணர்வொடுங்கேட்டுருகினானுரகர்பதி. ௭.

எதிரிறைஞ்சினோன்றனைப்பார்த்திதுமுயன்றதெவண்கொலெனச்
சதுமறைமாமுனிகேட்பச்சராசதியைவெல்கவென்றான்
கதுமெனப்போகுதிகன்னிகாரவனத்திரமதி
னதிபனைவேணியன்பெரியநாயகனைவழுத்துகென்றான். ௮.

நாரதன்சொற்றதுகேளாநாகபதிமேவுகன்னி
காரவனத்திறைவன்மலரகமலபதநனிவழுத்தி
யாரவரிச்சனைவிதியென்றாறுசிவாவாற்றுதலு
மீரமதிக்கண்ணியன்வெள்ளேற்றிலெழுந்தருளினான. ௯.

ஆயிரமாயிரங்கோடியவிரசதிராதயாவெருங்கு
மாயிரமாயிரஞ்சோதியாதவரில்வீரொளியா
ளுயிரமாரணமோதுமாயிரநாமங்களுமீ
ராயிரநாவாற்றுதித்தானாயிரமாமுடிச்சேடன். ௰.

வேட்கையாவுளகேட்டியனந்தவெனவிளம்பவண்ணல்
பூட்கைவிழுதியரிவைபுனைபுனிதநினதுமலர்ந
னாட்கையாலரிசசிப்பச்சதாசதியைசயிக்கவருள்
சேட்கையாவனவிவைகளெனத்தாழ்ந்துகிளாந்தினன். ௧௧.

இன்றுமுதனமையருச்சித்தெஞ்ஞான்றுமியவணிருத்தி
யின்றுமுதற்பூஞைகநாஞைகவெமையடைதி
யின்றுமுதலுலவைநினககிரையாமநுசாவாயா
மின்றிவைநல்கினமென்றுக்கூறியிலெழுந்தருளினான். ௧௨.

பணிபணியாசலிஞ்சாபரணனெனும்பெயராகாள
மணிமிடற்றோறகாகியழங்கியதுகன்னிகாரவனந்
திண்ணிலத்திறபுயங்கபுரமெனசதுசழ்நததசருமறையீ
ரணிகொள்கவுசலன்பரனையருச்சித்ததிறனறைவாம். ௧௩.

௯-வது அச்கினியுஞ் சேடனுமருச்சித்த சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௩௫௧.

திருச்சிதம்பலம்.

## ௰-வது கவுசலசேரன் அரிச்சித்த சருக்கம்.

கொழுமலர்த்திருவுங்கலைமடந்தையுங்கொற்றந்
தழுவுமங்கையுந்திருவமுந்தருமமும்வயங்கி
யெழுநிலக்கனியாய்த்திசையெங்கணுஞ்சீர்த்தி
முழுநிலாக்கதிரபரப்புமத்திரிகிரியெனுமூதூர். ௧.

கற்றவர்க்கொருதுணைசலிக்கிருநிதிக்கடவுள்
பற்றலர்க்கரிமாவடைந்தவர்க்கருட்பரவை
மற்றைநீணிலங்குளிர்ப்புறவருமதிக்குலவன
கொற்றவெண்குடைக்கோமானங்குசத்துசவரசன. ௨.

இழைத்தமாதவத்துதித்தசேயின்பமன்பூறிக்
குழைத்தநெஞ்சினன்ஞானநூற்கேள்வியன்கொண்மூத்
தழைத்தசெங்கயன்றடவுவாட்படையினன்றரளக்
கழைத்தடஞ்சிலைக்காமவேள்கவுசலனென்போன். ௩.

சரைந்தவுள்ளமுங்கலைமதிக்கண்ணியனருளில்
விரைந்தவார்வமும்பல்லுயிர்த்தொகையின்மேல்விழைவுஞ்
சுரந்தபேரருளுடைமையுங்கண்டுதொல்லுலகம்
புரந்ததந்தையுமமைச்சருமுவகையிற்பொருந்தார். ௪.

மனவணித்திறனூற்றிமாற்றலர்திரைவழங்கக்
சனமணிச்சுடாமாமுடிகவிழ்த்தினன்றாதை
துணைவரைப்புயப்பூசசுமையிறக்கினன்சுதன்ற
னிணைவரைப்புயத்தேற்றினனேற்றுவீற்றிருந்தான். ௫.

தந்தைநல்கியதிருவமுந்தனதுதொல்லுணர்வுஞ்
சிந்தையிற்றெளிந்துலகெலாந்திகிரியொன்றுருட்டி
மந்திரக்கிழவோர்புகன்மனுநெறிநடாத்தி
யைந்தருப்பணிகவுசலனரசுவீற்றிருந்தான். ௬.

இருந்துசில்பகலகன்றபினிருங்களிறுரியோன்
றிருந்துசேதிமம்பரசுவானுள்ளிடைத்தெரிந்து
வருந்துறுதலகளிப்பிரென்றமைச்சரைவைத்துப்
பொருந்திரற்படைபொருனரோடெழுந்துபோயினனால். ௭.

காசியும்பிறதலங்களுங்கடிமலர்தூவி
யேசிறிண்ணர்கண்மலர்புனையிடனுமேனயவும்
பாசிழைப்பரைதவம்புரிபதிமுதலனவும்
பேசருந்தழற்கிரியழம்லைமுதற்பிறவும். ௮.

நடித்தபொற்பொதுமுதனீர்நாட்டுளநகரும்
வடித்தமுத்தமிழ்மதுரையுங்குமரியும்பிறவுங்
கொடித்தடஞ்சிலைகோதைநாட்டினிலெழுபதியுங்
கடித்திகழ்ந்தமென்மலரினூற்கைகுவித்திறைஞ்சி. ௯.

மல்லலம்புகழ்கொங்குநாட்டொருமலைச்சாரற்
செல்லலுந்தருமிடைந்துசிள்வீடுசில்லென்னக்
கொல்சினப்புலிவயப்புலிகுஞ்சரங்கலைமான்
பல்விலங்குறையொருவனமிருப்பதுபார்த்தான். ௰.

பார்த்தவன்புடைத்தூதுவற்பார்த்தனன்றூதர்
சீர்த்தவேத்திரர்வேட்டைமேற்செலவெனத்தெரிந்து
கூர்த்தவைங்கணைக்கொடுந்தொழிற்புளினரைவிளிக்கக்
சாத்தடம்புயலிழிந்தெனக்கடிதின்வந்துறுநர். கக.

வெஞ்சினத்தினர்பொறித்தழல்விழியினர்நீலக்
கஞ்சுகத்தினர்கச்சினாகழலினர்கமஞ்சூன்
மஞ்சிடித்தனவார்த்தையர்மறலியிற்கொடியர்
குஞ்சியிறபுனைவாகையர்கொடுமரக்கிராதர். கஉ.

சூரொழுக்குறத்தொழுதனர்கட்டுடியெறிந்து
வாரொழுக்கினர்மணிவலைபிணித்தனராத்தி
நாரொழுக்கியகண்ணிகணிறைத்தனர்நவிலுங்
காரொழுக்கெனத்துவைத்தனர்கலைத்தனர்விலங்கு. க௩.

செந்நிறத்தவெண்ணிறத்தனகரியதீவிழிய
பின்னெடுஞ்சுருள்வால்வாளெயிற்றடும்பேழ்வாய்
முன்விழுந்ததோர்செவியநீண்முகத்தவான்குரைய
வின்னபன்ஞமலிகள்விரைந்தெழுவனமெங்கும். க௪.

வேறு.

சூழ்கொலைவேடர்துவக்குவலைக்கே
வீழ்குவசிந்திவெருண்டுகைவேழம்
போழ்குவசென்னிபுடைத்தபுணீரின்
மூழ்குவமீளமுழங்குவசிங்கம். க௫.

பெய்வனவாளிபிழைத்துவெருண்டு
நெய்யெரிகால்விழிசீறிநெருங்கி
யொய்யெனவாவியுடம்பிடியோடு
மெய்யுயிர்போயெதிர்வீழ்வனவேங். க௬.

போர்புரிமள்ளர்புறத்தொலிகேளாப்
பேர்வனபொங்கர்பிடுங்குவபின்பே
சோர்பிடிநேடுவசூழ்குலமீள்வ
ளீரெனவாழ்குழிவீழுவவேழம். க௭.

கண்ணியிலாவிகரைந்துகழிந்தும்
பண்ணியநாண்வலையிற்பலவாயுந்
திண்ணியவாளிசிதைப்பவுலர்ந்து
மெண்ணில்விலங்கினமின்னணமெய்த. க௮.

மாய்ந்தகலைக்குலமோடிளமான்கள்
வீய்ந்துமுயிர்த்துயிர்விம்மியுமோய
ரேய்ந்தவரோடுயிர்தோற்றமின்றொரு
மேய்ந்துயிர்கொண்டிடைவாரையுமொத்த. க௯.

வேடர்கைவாளிபிழைத்துவெகுண்டு
பாடுறுநாண்வலையிறபடுமாக்க
ளோடிவினைக்குளமொல்குனர்மீள
வாடிமனைக்குண்மயங்குதல்போன்ற. ௨௰.

நூலுறுநாண்வலைநூறியமாவிற்
கோலியவாளிகுளிப்பமெய்சோர்வ
ஞாலம்வெறுத்தகல்வோர்நனிதன்மக்
தாலலர்வாளியடுந்தொழில்போலும். ௨௧.

சிந்தவராசமுறுஞ்சினமூரி
வந்தவராகமருண்டுவெகுண்டு
நொந்தவராகவெதிர்ந்துயிர்நூறு
மந்தவராகமனந்தமுலாந்த. ௨௨.

வெருவுவவெழுவனவிழுவனமுயல்கள்
வருவனபிரிவனமருள்வனமரைக
ளுருள்வனதிரிவனவுழல்வனவுளியந்
துருவுவவிரிகரிதுடியடிபிடிகள். ௨௩.

செருவிடைசருவுவசிலசிலமிருகங்
குருதிகள்சொரிவனகுரைகடல்புடைமே
லெருவைகள்விரிவனவிரைவனகுருகு
பொருனர்கணிரைநிரைபுரிவனபொழுதில். ௨௪.

நீர்மலிவேணியனீடருளோபைந்
தார்மலிவேந்துதவப்பயனோதண்
சாமலிசாரலெழுந்ததுகாசி
லோமலிகின்றபொன்னின்வடிவோர்மான். ௨௫.

கண்டனர்பின்புதொடர்ந்துகவன்றே
பெண்டகர்போலவணின்றுபெயர்ந்தா
ரெண்டிசைகாவலவீண்டொரிரும்பூ
துண்டதுகேளெனவொண்கைகுவித்தார். ௨௬.

செம்பொனிறஞ்சுதைசேர்நுதல்சென்னிக்
கொம்புமெய்நான்குமுழந்திகழ்கோலப்
பைம்பொறிமான்வெருள்பார்வையதிங்கே
வம்பவிழ்பொங்கரின்வந்ததையென்றார். ௨௭.

வேட்டமிழைப்பவர்மாற்றம்விழைந்தே
சேட்டெழின்மார்பிறைசென்றதுகண்டான்
வாட்டமினவ்வியைவவ்வுதுமென்னாக்
கோட்டுவிலவாளிகைகொண்டு தொடர்ந்தான். ௨௮.

காவதநாலஃதோர்கணமாசப்
போவதுவானகமோபுவியோகால்
பாவுவதோவுழைபார்மனனேவு
மேவதுபோமுனமேழ்வரைதாவும். ௨௯.

நெஞ்சநினைக்குமுனீணிலவேந்தன்
வெஞ்சமாவில்லுமிழ்வெங்கணைசேண்போ
மெஞ்சலில்சாயகமேகுடனேகு
மஞ்சினுமாருதவைப்பினுமோர்மான். ௩௦.

சேழ்கிளராசைகெழீஇயசரங்கள்
சூழ்சருமாவரைதோய்ந்ததுகாணு
னேழ்நிலவேந்தெழில்வில்விடமேந்தி
வாழ்சன்னிகாரவனத்துளடைந்தான. ௩௧.

வேறு. பல்வகைமம்மராற்றும்பைம்பொன்சாரங்கஞ்செம்மல்
செல்கெழுகன்னிகாரவனத்திடைச்சேர்ந்தகாலைத்
தொல்லையவினைப்பயன்களளவிவைதுய்க்குமேல்வை
வலலையின்மயக்கநல்குமாயையிற்போயிற்றன்றே. ௩௨.

அவ்வனத்தொருசாரந்தணீணிழனின்றுபொன்மா
னெவ்வனத்தகன்றுபோயிற்றினிப்புரிவதியாதெனுக்
சவ்வனப்பகழிமன்னன்கவலுறுங்காற்காளூக்கி
மவ்வனக்கிராதரும்போரமன்னரும்வந்துபுக்கார். ௩௩.

மள்ளரைநோக்கிநீவிர்வருந்திரேல்வாவிகூவல்
வெள்ளம்யாண்டுளதென்றூற்குவிரைவினிற்போகிநேடிப்
பள்ளநீர்தசும்பிற்பெய்துபரிசனமீண்டுமுண்ணக்
கொள்ளுநீாகொணர்வான்போன்மேற்கடலினிற்குளித்தான்வெய்யோன்.

தீம்புனல்கொணர்ந்தார்தம்மைச்செம்மலுமம்மலோதிக்
காம்புநல்லிளமென்றோளிக்கணவனைத்தொழினல்லாதி
யாம்புனலருந்தேமுண்மினெம்மொழிவழாதுநீவிர்
தாம்புனலென்றுண்டாரேவலிற்றடையொன்றில்லார். ௩௫.

சாடுறுவேட்டமீதிற்கவலுறுமவலங்கொண்டு
தோடிதழியினுறப்போற்றுநியமமுந்தொலைந்ததென்று
வாடுறுமரசருள்ளத்திளைப்பினைமாற்றுவான்போ
னீடிணர்விரிதுவெய்யோனீர்முகந்தெதிர்வந்துற்றான். ௩௬.

அற்றைநாட்சடிகையைந்தொன்றாம்றுவகடன்களாற்றிப்
பொற்றடம்புயக்கோமானும்போவதற்குளம்வராமை
மற்றதிசயம்பிறந்தகருத்தொடுமனத்தன்பூறி
யொற்றினற்கூவிக்கோயிலுளதெனிற்பாரமினென்றான. ௩௭.

அங்கவரகன்றாரண்ணலகத்தினுள்விழித்திருந்தா
னுங்குலத்தோன்றனுட்டநுதலியைவழுத்தக்கோங்கந்
தங்கியவனத்தடைந்தானென்றுமார்த்தாண்டன்மேல்பாற்
றிங்களுக்குவகைசொல்லச்செல்லலைப்போலச்சென்றான். ௩௮.

ஆலயநேடிக்காணார்மீண்டிறைக்கறையும்போழ்திற்
சோலையங்கன்னிகாரவனத்தினந்தோன்றற்காணக்
காலையிறபெயர்ந்தான்வெய்யோன்யாமினிக்காண்டுமென்னு
மாலையில்வருதல்போலத்தோன்றினன்மதியப்புத்தேள். ௩௯.

மின்னவிர்செக்கர்வானில்விளங்குவெண்பிறையையெந்தை
பொன்னவிர்சடையிற்றோற்றும்பிறையெனப்போற்றிவைகு
டனவற்கன்றுகாட்சிமழுவலான்வழங்குகின்று
னன்னதுகாணப்புக்கான்போன்றுதித்தருக்கன்போந்தான். ச0.

முத்தினமாயகாலைமுத்தினன்சவிசைநீழற்
றத்தினமாலோன்வைகுஞ்சூழலிற்றாமரைப்பூங்
கத்திகைமாபணுஇசைவமாமறையோன்கஞ்ச
னத்தினன்போதினார்க்குநாண்மலர்கொய்யச்சென்றான். சக.

கண்டனன்பணிந்தான்செம்மல்வினாயினான்கலைநூன்மார்பன்
விண்டனனாரும்பேருமடைந்ததும்விரைத்தாரவேந்தன்
பண்டருமறைவலாளன்பார்த்தனன்பணிகளாற்றற்
கண்டிகோனருளிற்போந்தவரயனென்றகனுட்கொண்டான். சஉ.

மன்னவகன்னிகாரவனமிதுஞானபூமி
பன்னருமிலிங்கமாகிப்பரப்பிரமந்தானோங்கிற்
றன்னிலைக்கண்ணெனென்றான்முன்னிகழ்ந்தனயாவுங்கூறிச்
சன்னதித்திகழ்பாலோடைதனிற்படிவித்தான்றக்கோன். சங.

ஞானநோக்கருளிஞானவாய்மையுநவிற்றுவேத
ஞானதேசிகனால்ஞானநகுமணிக்கோயில்புக்கு
ஞானநன்குறியைஞானநாட்டமோடருச்சித்தோதை
ஞானவாரிதியடிந்துமூழ்கினானொருவிநின்றான். சச.

மெய்மயிர்பொடிக்கவுள்ளம்விதிர்விதிர்விதிர்த்திரண்டு
கய்மலருச்சிகூப்பிக்கண்கணீரருவிதாழ்த்தி
நெய்மலிநெடுவேலண்ணனினைப்பறநினைந்துநின்றான்
மய்மலிமிடற்றோனேற்றில்வந்தெதிர்காட்சிதந்தான். சரு.

காட்சியிற்கலந்துமூலமாமனுக்கழறிநெஞ்சு
ளாட்சியிற்சீருருத்ரமாயிரநாமத்தானு
மாட்சியிற்றுதிப்பான்வேட்டவரம்பலவழங்கிவள்ள
னீட்சிநன்னெறியிலானார்நெறிநின்றார்நெஞ்சுளானார். சசு.

வெள்ளைமால்விடையுகைத்தோன்மிளிர்குறிமறைந்ததற்பி
னுள்ளமார்வங்கெழுமொள்ளிலைவேலோனோங்கலருள்
வள்ளைவார்குழையுன்னைவைகிடம்யாண்டுளதுமன்னோ
தெள்ளுநான்மறைமுனிவவருள்கெனச்சேவடிதாழ்ந்தான். சஎ.

பூபதிகேள்பவானியும்பொன்னியும்பொருந்துநன்னாவிற்
றாபதர்சோன்றுருவாசன்றமணியனின்னவர்வைகு
மாபயனன்கழைத்தேவல்லிழைப்பவாய்மறைநெறியின்
மாபரனைவழிபாடுபுரிந்துவைகுஞான்றொருநாள். சஅ.

காலமறிந்தடைவதொருகடிகைபிரிந்தடைந்ததென்னாச்
சீலமுனிவரன்சினவித்தேனுவேசிவபூசைக்
கேவலிடையூறிழைத்தாயேலாதுன்பணிபாவங்
கோலினையென்முனைவாராதேகுதிரீகொடியையென்றான். சகூ.

அம்மாற்றமதுகேளாவழுங்கிரெடிதுயிர்த்திதனுக்
கெம்மாற்றமிசைப்பதெனுவிடைந்தறியாமையினிழைத்த
மைம்மாறறுமுனிவமுனிவொழிந்தளியான்வாழ்வுறவோர்
செம்மாற்றமருள்கெனச்செஞ்சேவடிதாழ்ந்ததுதேனு. ௫௦.

ஏனவரைநீழல்வைகுமேர்கொள்கன்னிகாரவனந்
தானடைதியெனச்சார்ந்துதபனதிசையொருதடங்கண்
டானதவமுயன்றமலனருளொடுவிண்ணடைந்ததந்தத்
தேனிமிரபூந்தடந்தேனுதீர்த்தமெனச்சிறந்துளதால். ௫௧.

தீர்த்தமதன்றென்கரையிற்செறியலர்க்கூவிளவனத்திற்
பாதகிபமாசெனவுலகம்பரித்தபாப்பதியரிய
மாதவநாளும்பயினறுவைகுநாளதுகொண்டு
சோத்தமறைத்திருக்காமக்கோட்டமெனக்கூறியது. ௫௨.

இதுகுய்பமியாவருமெய்துதற்கரியதென்றோனை
விதுவென்றொல்குலவேந்தன்போற்றுமினிரவிமலைபதப்
பதுமங்காண்பதற்கொன்றுபகாகெனத்தாழ்ந்தனன்கமல
மதுமென்றார்மறைமுனிவன்வருந்தலையென்றருள்வழங்கி. ௫௩.

வேறு. சாலுமகாகோடமேசத்திகாமஞ்சக்கரமேபுவனையாகாசஞ்சத்தி,
சோலியகாமஞ்சகளம்புவனைசத்திகோடமாதங்கோடசக்கரமேபுவனை,
வேலுடைச்செவ்வேள்விளம்பவிளங்காநின்றவித்தியாமந்திரமாமிவற்றை
ததேனு, வாலியதீர்த்தக்கரையிற்செவிக்கிலுன்பான்மாதொருமண்டல
ஞ்செல்கால்வந்துவரந்தருமே. ௫௪.

வேறு. ஆயமறையோனருளுரையேற்றாயிடையவ்வாறிழைப்பத்
தாயுமுதுபார்ப்பனக்கிழத்தியுருவுகொண்டுதண்டேன்றிப்
போயிறைமுன்யாரையுன்னிப்புரிகின்றாய்நீதவமென்றா
ளாயுலகமீனறளித்தவிறைவிதனைநோசகியென்றான். ௫௫.

நன்றுவரவுங்கேள்விநலனுமாதவத்திறனுந்
தனறுணைக்கேழ்வனைத்தழுவத்தவம்புரிகின்றானன்பா
லின்றுவெளிவரவரியளளியுடையையாயினிமேன்
மன்றலணிகாண்டியெனமறைந்தாண்மாமறையுணின்றாள். ௫௬.

அன்னைபெழுந்தருளினளென்றுணந்தபரவசமுந்
தனனுணர்வுங்கமலப்பொற்றாரைவிழிநீர்தாழ
வென்னையுமாண்டனண்ஞமலிக்கினித்தவிசுமிடுவெளன்றே
முனனிமணங்காணமொழிவேன்மாதவமுயன்று. ௫௭.

சில்பகல்செல்காலமசதித்திவ்வியாழ்முனியேழ்வர்
கொல்புலத்தாபதாகோங்குவனங்குறுகிக்குழகனடி
தொல்பவந்திரததொழுதார்தமிறசிலர்காய்மலர்கொய்ய
வில்வவனந்தனிற்றேனுதீர்த்தமினிர்கரையடைந்தார். ௫௮.

கெக்கமலர்கொய்வார்கன்னியர்பலர்வைகிடங்களுஞ்செங்
கைக்கதிர்வேற்குரிசிறவம்புரிந்ததுங்கண்டதிசயித்தார்
தெக்கணநோக்கினரமுதசீதளவொண்ணிலவொருங்கு
புக்கெனவோங்கொளிவிளங்குபொலிவுகண்டுவெருவினார். ௫௯.

தருணமணிநிலவுமிழுந்தபனரளவில்கோடி
பெருகொளிவாலுழைமடங்கற்பிடரினருமறைமுடிவி
னொருகுடிலைவடிவினொளியொழுகுவிமானத்தினிடைக்
கருணைதிருவுருவுகொண்டுகன்னிமுயல்வதுகண்டார். ௬௦.

அஞ்சினார்நோற்றிருந்தாரன்னையெனச்சேணிடைநின்
றஞ்சிநாமுய்ந்தோமென்றிறைஞ்சியேயுவகைகொண்டு
பிஞ்சுநாண்மதிவேணிப்பெருமான்வைகிடம்போகி
விஞ்சைநாரதன்முதலோருளங்குளிரவிரும்பினார். ௬௧.

முழுத்தலங்கூவிளவனத்தின்முதல்விமுயல்வதுசேளாச்
செழுத்தவம்பெற்றனமென்றேதிசைநோக்கிநறுமலர்தூய்
வழுத்தினர்பின்மழவிடையோன்பரிந்துமணக்கோலமனத்
தழுத்துவமின்ஞான்றெனநின்றார்க்குணர்த்தினனமலன். ௬௨.

உம்பர்பரசிடும்பெரியாவுடையநாயகனுவந்து
செம்பவளவாய்மலர்ந்தவகைதெரிந்துநோற்றிருந்தார்
விம்பவிதழமுதமென்சொல்வேல்விழிக்கொல்வளையுமையை
வம்பவிழ்சேயிதழியண்ணல்மணம்புரிந்தவாறுரைப்பாம். ௬௩.

௰-வது கவுசலசேகரன் அருச்சித்த சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௪௨௨.

**திருச்சிற்றம்பலம்.**

## ௧௧-வது மணம்புரிந்த சருக்கம்.

வான்றரைமுதலவின்றுட்குமாலயன்
றோன்றவுந்தோன்றிடாத்தோன்றலார்க்குமின்
றேன்றவாறெழின்மணமென்றெழுந்துதொன்
மூன்றுலகமுமணமுரசமார்த்தவே. ௧.

கரம்பயின்மழுவினோன்வனத்திற்காஞ்சன
புரம்பயில்புலவரும்பிறரும்போந்தனர்
சரம்பயில்விழியுமைதவஞ்செய்கானிடை
யரம்பையர்முதலினோரடைதன்மேவினார். ௨.

மருந்துவானவருணவாரிவெய்யநஞ்
சருந்தினோன்வனங்கயிலாயமேயது
கருந்தடங்கண்ணிநாட்கருதிமாதவ
மிருந்தகாந்தாரநீடிமையமேயது. ௩.

மரகதனளகையென்றயிர்ப்புவானவன்
விரவுபொன்னுலகெனமயங்கிவெள்குறச்
சுரர்புரிமயன்புரிதொழில்வனப்பினா,
லரியயன்குயிற்றமற்றழகுவேண்டுமோ. ௪.

பைந்தருவைந்துநீள்பந்தராய்மலர்க்
கொந்தவிழிணர்களாற்குளிர்நிறைத்தன
சந்தனமணமுறைத்திளகுந்தண்டமிழ்
மந்தமாருதமளாய்வந்துலாயது. ௫.

வாயுவுமல்கிடுதொழிலின்வாய்ந்தவத்
தோயதண்டுளிசுராலூர்திசிந்திடத்
தேயுமென்குய்ப்புகைசெறிவித்தும்பரி
னேயவெங்கணுஞ்சுடரேற்றிநின்றதே. ௬.

மாசுணவேந்தினம்வனம்வனந்தொறும்
விசுறுநறுமணிவிளக்கஞ்செய்தன
பூசுறுகலவைபூணணிநிறைத்தன
காசிறெள்ளமுதபொற்கலசமேந்தின. ௭.

தேனுவினம்பணிவேட்டுச்சென்றன
வானுறையிருநிதிமருங்கிறேங்கின
மீனுறுமுவாமதுவிழிந்தவீரைக
ளானவையைந்துமற்றடைதன்மேயின. ௮.

விண்ணுளாராபரதலமிடைந்துளார்புவிக்
கண்ணுளார்காட்சியிற்கண்ணுளாரெனப்
பண்ணுளாரணத்தினுட்பயின்றபான்மொழிப்
பெண்ணுளார்வம்பிரான்பெருக்கினரோ. ௯.

திப்பியலிங்கமுட்டிகழ்ந்துபோந்துசெந்
துப்புவார்சடைமுதற்றோன்றத்தோன்றினான்
மைப்பிறழ்கண்ணியைவதுவையாற்றுவான்
மெய்ப்பெருந்தவிசின்மேல்வீற்றிருந்தனன். ௰.

திருவுளச்செயலைவச்சிரவணனன்றெரிந்
துரியகண்புடைத்தலமுனான்றநீர்மையா
லருளுருவாயினும்வதுவைக்காவன
பொருவில்பூணணிமுதற்புனைந்துபோற்றினான். ௧௧.

இந்துகாந்தத்திடையிரவிகாந்தமொன்
றுந்தியாங்கொருமழவிடையுகைத்தனன்
றந்தமினிரைநிரைசாரதக்கூறள்
கொந்தவிழ்மாலைவெண்குடைநிழற்றவே. ௧௨.

விசனிசாய்மரையிளாத்தூயவெண்
சேணிகதலிகைதுவன்றிச்சூழ்தரக்
காசணியடப்பைகாளாஞ்சிமற்றுள
தேசணிபரிசனமிடைந்துசென்றவே. ௧௩.

பண்டையநான்மறைப்பரியுஞானமே
கொண்டிரண்டாயிரக்கோட்டுவேழமுந்
தண்டுளாய்மால்விடைதனிப்பதாகையு
மெண்டிசைப்பெருங்களிறினமுமீண்டின. ௧௪.

புங்கவர்பதிஞொருபுங்கவங்களு
மெங்களீசானன்வெள்ளேறுநதாமரைச்
செங்கணனென்கணூர்தியுஞ்செழுந்
துங்கவெள்விடைவலஞ்சூழ்ந்துபோதவே. ௧௫.

உரவியபுரத்தவன்றவளவும்பலு
மிரவிகளிரதமாறிரண்டுமபூண்டபைம்
புரவியினீட்டமும்புரந்தானபடாம்
விரவியநான்மருப்பிபமுமேவர. ௧௬.

தட்பகலாமதிததனதணித்திலட்
புட்பகவிமானமும்புலவரேனையர்
விட்பகல்கெடமிளிர்விமானர்புஞ்சமு
மெட்பகவிடம்பிறிதின்றியெய்தவே. ௧௭.

நாரதாமகதியாழ்நரம்புதைவரச்
சிரதரேழிசைதெளிப்பவிஞ்சையர்
காரதரரவுசேகரக்குறுஞ்சடைச்
சாரதர்வெள்ளமுந்தழங்கிச்சாரவே. ௧௮.

நனிதவரெழுவர்தாபதாநலங்கெழு
புனிதர்புள்ளடியாகிம்புருடாசிததாகள்
பனிதரவிம்மியபவளவாயருட்
சனிதரவுருகியவிரதர்கைதொழ. ௧௯.

அங்கமாமறையொலியருணந்திசர்கைசந
துங்கவேத்திரவொலிதொண்டராடவொலி
சங்கொலிமுழவொலிதழங்கவாகியம்
பொங்கொலிபுணர்ப்பவாய்புதைத்தொலிப்பவே. ௨௦.

சிலைமலிவாணுதன்மணத்தினசெய்கையுங்
கலைமலிகவுசலன்கருத்துமுற்றவ்வ
கொலைமலிமழுவலனகொணடவெப்பிரா
னிலைமலிகூவிளவனஞ்சென்றெய்தினன. ௨௧.

மதிநுதலணங்குகுறறேயனமங்கையர
புதுநறுஞ்சுண்ணமும்பூவுந்தூவினா
துதிவரமங்கலச்சுடர்கைசுறறின
ரெதிரெதிர்புகுந்துபல்லாண்டிசைத்தனர். ௨௨.

**வேறு.** தொல்விடையிழிந்துவிண்ணந்தொடுமணிமண்டபத்தின்
மல்லல்வாலுழைமடங்கலாசனத்திருந்தான்வள்ளல்
செல்கெழுபூவைவண்ணன்றிருமணப்பந்தரினசீ
ழொல்லையிலேவலாறறற்குரியரையுருற்றிநின்றன. ௨௩.

சேயரிபரந்தபுன்கட்சிலதியாவிரைவிறபோகி
மாயிரும்புவனமுற்றும்வயிறுவாய்ந்துயிர்த்தகன்னிக்
தாயருந்தவங்கனிநதத்தையல்சீறடியிற்றாழ்ந்து
தூயலர்தூயினாசோபனஞ்சொல்லிநொழுதுநின்றார். ௨௪.

கொண்டவோசையிலெருத்தங்கோட்டுவாண்முகமுஞ்செவ்வாய்
விண்டபுனனகைமுகிழ்ப்பும்வேட்கையுங்கருணைதாங்கு
கெண்டையங்கண்ணுமுள்ளேகிடந்தபேரன்புநதன்பா
லண்டாகோனபோந்தகேள்வியார்வமுந்தோன்றநினறுள். உரு.

அன்னையாடுவநீராட்டினாரணிவனவணிந்தார்
துன்னலாமாலைமற்றுஞ்சூடுவசூட்டினார்செம்
பொன்னறமாதர்மாதுபூசுவபூசினார்பைங்
கன்னல்றகனிமெனசொல்லாளகமழ்வனகமழச்செய்தார். உசா.

மாககன்னியருநசெய்வவரையரமகளிர்தாமு
நாககன்னியரும்வீணைநரம்புளர்நங்கைமாரும்
போககன்னியருமேனைப்புனங்கெழுமனங்கனாரும்
யோககன்னிகையைச்சூழ்ந்துவலம்புரியோனசங்கொத்தார். உஎ.

இரதிமேனகையரம்பைதிலோத்தமையிந்திராணி
யருமுருபபசிபணித்தக ரிசையிற்பணிசளாறறத்
திருமகளசலைமடநதையிருபுடைசெங்கைநல்கப்
பறையொருகுமரியாகிப்பயப்பயவடிபெயர்த்தாள். உஅ.

நொய்யபஞ்சிடச்சிவந்துபரிவுறநொந்தயாமேல்
வெய்யசன்மிதிக்சுலாற்றோமென்றுநீர்வெருவலய்யன்
கய்யதுபடும்பேற்றெனனக்கருதுகவென்றுபய்யச்
செய்யதாட்சறைதலேபோறசிலம்பொலிபுலம்பமாதோ. உகூ.

பொற்றசும்பிணைமெனசொங்கைப்பொறைசுமந்தொழிந்துமாழ்குஞ்
சிறறிடையிருந்துபாதுகாததனமவிரைவிற்சென்மி
னொற்றைவெண்குழையோன்பாற்செல்லுகளதாட்கமலங்கேட்கு
மறறதுபுகலுமாபோன்மணிக்கலையொலிப்பமன்னோ. ௩0.

தாய்சைநீண்டினமெம்மாள்கைதொடவினிப்பெறுதுமென்னா
வாய்திறந்தறைசல்போலவரிவளைமுரலத்தாது
போயிறைசெல்விநோக்கிமீள்குவாளெழுதலேபோ
லாயிசையோதியோதியெழுந்தெழுநதளிகளாட. ௩க.

நீறறினன்சிர்த்திநோய்ந்தாய்சாண்குதுபின்முனென்னாச்
சாறறுசல்போலவொண்கண்குழைமுகந்தடவிமீள
வேற்றிமையவாகைகூப்பவெய்தினமிறையையுள்ளே
போற்றினள்பண்டுபோலோபுடையில்வீற்றிருந்தாளனனை. ௩உ.

அங்கியுந்தாமமுஞ்செயலரியும்புயலும்போலும்
பைங்குவளையுஞ்சிவந்துபசுந்தொளிர்மணிகளுஞ்சூழ்
சொங்கவிழ்தருவும்பைமபூங்கொடியுமோருழிக்கண்டாங்கு
திங்களங்கண்ணியோனுநதேவியுமுடனிருந்தார். ௩௩.

உறையிருவோருமொவ்வாவுவசையங்கடலினுப்பண்
முறையெழிலமுதுகண்களான்முகந்துண்டாமுற்று
மறைசமுறபிரானுமெங்களம்மையும்புரிவிநோத
மறைகுறமுணராவின்றும்டாவர்மற்றுணரவல்லா. ௩௪.

தாமரைக்கிழவன்வேதச்சடங்குசெந்தழலினூற்றக்
காமர்பூங்கொடிசெங்கைப்பூங்காந்தளுங்கடுக்கைமார்பன்
மாமலர்த்தடங்கைச்செந்தாமரையையுமடுக்கிமாயன்
பூமலர்ச்சிகரநீர்பெய்தடிமலர்போற்றிநின்றான். ௫௫.

வேறு. வான்முழவைந்துமதிர்ந்தனவால்வளைபொங்கிமுழங்கின
நான்மறையங்கநவின்றனநாண்மலரன்பாகைசிந்தின
மோனிகள்சிந்தைகனிந்தனமூவுலகுங்களிகொண்டன
வானுயரந்தணனம்பிகையாமிவாமன்றல்சிறந்தன. ௫௬.

எம்பெருமானையுமன்றலிலெம்பெருமாட்டியையுந்தொழ
நம்பெருமாதவநன்றிதுநன்றிதுநாமநவின்றெதி
ரம்பலர்மாரிவழங்கினர்மந்திரமோதிவணங்கின
ரும்பருமாதவரும்பிறரும்பெறுமோகைமலிந்தன. ௫௭.

நன்னெடுமாலனும்வேதனுநாரதருந்தவரேழ்வருங்
கன்னியருந்தவநீளபெருங்கவுசலகோமகனுந்தொழ
மன்னியகாட்சிவழங்கினன்மால்வடிவாகியமாதுமை
முன்னியவாறுமுயன்றனள்மூலமுமீறுமிலாதவள். ௫௮.

என்னுடையன்னையுமெந்தையுமின்னணநன்னரின்மாமண
மன்னினாபால்வழிபாடுகளாற்றிவரம்பெறுமன்னவன்
கன்னவிலுந்திரடோளினன்கவுசலன்மாசில்வளம்பெற
முன்னகாகண்டதுகேண்மெனமூதுணர்சூதன்மொழிந்தனன். ௫௯.

௧௧-வது மணம்புரிந்த சருக்கமுற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௪௯௧.

திருச்சிற்றம்பலம்.

## ௧௨-வது நகர்செய் சருக்கம்.

அந்தநீரமையாளுடையாண்மணப்
பந்தரிற்றுளவோனமுதற்பண்ணவா
நந்தமக்கருணல்கிமணடாங்குகோன
சிந்தையாரவந்தெரிந்துகண்டேத்தினான். ௧.

ஆயகாலையரசனெம்மண்ணறன
சேயதாமரைச்சீரடிதாழ்ந்தெழீஇத்
தூயநான்மறைசூடிததுதிப்பநின்
னேயம்யாதறையென்றனனேரில்லான். ௨.

சீரமணஞ்செய்சிவபுரமீதிந்தப்
பார்வரும்பல்லுயிரும்பணிந்துய்மா
றோர்வளம்பதியாற்றவுவந்தருள்
கூராகெனப் புரிகின்றனன்கோதிலான். ௩.

காடசியும்வானும்பெற்றகாவல
ஞட்சிறந்துநகரங்குயிற்றவா
ஞட்சியாநதன்னளிநகாகசோலையுஞ்
சூட்சியொற்றுந்துணைவரபபோககினுன். ச.

ஒற்றுடன்சேனமடங்கலையுள்ளுனாந
வுற்றதோாததனுணைவரோண்மாநிதி
முற்றுநாளைமுதலசண்டோயயெனக்
கொற்றவற்பணிந்தொன்றெனக்கூடினுா. ரு.

சேரும்யானையுமாவுந்திறறபடை
யொருநகசேர்ச்சிததுணைவருமொக்கலும்
பாருமுப்யும்படிமன்னன்வல்வினை
யீருமெநததைககுறறேவலனுயினுன. சா.

கூறுமோர்திசைக்கைந்துகுரோசங்கொண்
டேறினுனகுதிசையுமியமபிடின்
மாறிலபுண்ணியமாததலமாயிடை
யூறில்பல்கலையொண்மதிதோன்றலே. எ.

கன்னிகாரவனமுங்கனங்குழை
மன்னும்வில்வவனமுமமறறேனையும்
பொன்னினீணகர்போலபபுரிவித்தான்
றளனதனபுதழைததுவிளங்கவே. அ.

நகாமெங்கணுமந்தணனன்குறப்
புகரினுறுபொருவில்கிாமமு
நகரில்வேழமிகளாறறுபுநீணமறை
பகாாவிாறுபள்ளியுங்கண்டனனே. கூ.

நன்னரிறறிருநாவிருமங்கலம்
பொனனகாககினைபொறபக்குயிறறியே
அன்னிகாத்தகுறியைத்தலநதொறு
மன்னுவித்தடிபோற்றினனமன்னவன். ய.

ஆங்கவாறறுளளிமுரான்ருய்பிழி
தேங்கமழ்நதுண்டுதேக்கும்பொன்னுண்மலர்க்
கோங்குநீளவனத்தின்குணபாறறிசைப்
பாங்காவைகுமோர்பண்புடைததொண்கிரி. கக.

போதவிழ்ந்தபெண்ணைப்பொலன்ருர்ப்புய
னுதாங்கொண்டரிச்சிததிறைஞ்சலாற்
றுதுகுந்தண்மலாததடஞ்சோலைசூழ்
சோதைமங்கலமென்பாசொற்கூறினர். கஉ.

தொக்கசேழற்கரும்பினுதக்கினீர்
நக்கசாமநதிக்குணதிாத்நத்தின்
மிக்கநீள்குறிவெவ்வெரிபோற்றலா
லக்கினேசனென்றேதுபவாய்ந்தவர். கங.

மாதவந்தனின்மாமறையோர்குழீஇ
யோதலின்புற்றொருங்குணர்ந்தோதலிற்
போதலர்ந்துபொதுவயல்சூழ்சதுர
வேதமங்கலமென்பர்சொன்மேதையோர். ௧௪.

பவ்வநேர்நன்னதிக்குடபால்வைகு
மெய்வயில்குறியெல்லவர்வந்தனை
செய்விதிற்புரியச்சிறந்தோங்குவ
சவ்வியத்தசோதிப்பெயரானரோ. ௧௫.

விரவிமங்கலமேருவலங்கொளும்
புரவிமங்கலத்தோர்போற்றவவ்விடன்
பரவிமங்கலம்பாடகராடல்கூ
ரிரவிமங்கலமென்றுவிளங்குமே. ௧௬.

விமலைவில்வவனத்ததின்மேற்றிசை
கமழும்பானதிதீர்த்தத்திற்காமர்தெள்
ளமுதலிங்கமாதுவைகுமவ்விட
னமுதமங்கலமென்பரறிஞரே. ௧௭.

**வேறு.** மங்கலஞ்சூழ்தலினட்டமங்கலட்சேத்திரமென்னுஞ்
சங்கரனேவலிற்றணிவெண்குடைநிருபன்றருதலினுற
சங்கைபுணர்காசிநிகர்கவுசலமாபுரமென்றும்
பொங்குபெரும்பெயர்புனைந்துபொலிந்ததுபுண்ணியநகரம். ௧௮.

பய்யணைமால்கிரிபிரமகிரிசிவபூதரஞ்சத்தி
சய்யமுயரியகருமாவரையெனுந்தென்கயிலாயந்
துய்யபரையோநதிசண்முகநதிசூழ்தருந்தொடர்பாற்
செய்யகவுசலபுரமேசிவபுரமெனபடுதிண்ணம். ௧௯.

கதிர்மணிமாளிகைநெருங்காமரெயிலுடுத்தோங்கு
பதியுமாபதிதிருவிளர்ப்பொலிவும்படைகுடிசூழ்
மதியமைச்சுமுதலியமாண்புறமகவுக்கரசுநலகி
யதிர்கழற்காவரசரெமையாளுடையான்கழலடைந்தார். ௨௦.

மறைபயின்மாதவிர்வில்வவனஞ்சிவமாமலைநாப்ப
ணிறைவனறுமுகன்றிருவாவினன்குடியென்றொருதலமற்
றறையினுங்கேட்பினுமுத்தியடைவிக்குமதனுற்றற
சிறிதறிந்தவாறுசொல்கேமென்றனன்சென்னெறிச்சூதன். ௨௧.

௧௨-வது நகர்செய் சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௪௮௨.

திருச்சிற்றம்பலம்.

## கக-வது திருவாவினன்குடிச் சருக்கம்.

தேனிமிர்போதக்குரவன் றெரிவரும்போதக்குரவன்
ஞானத்தவாரணத்தான்றழுவுதெய்வவாரணத்தா
னானகரவச்சிரத்தானுருவச்சிரத்தான
வானபரங்குன்றத்தானவனாகதபரங்குன்றத்தான். க.

நாகவிற்கோலங்கையானவைதவிர்கோலங்கையான்
வேகமுடனூறூரான்விரிபொழிலினூறூரான்
மோகமொழிவாயினனைமோனமொழிவாயினனை
மாகமலைவாய்க்கரையானமருவுமலைவாய்க்கரையான. உ.

வனபணநாகரவரையான்மதலைசூகரவரையா
னின்பமயில்வாகனத்தானேறுமயில்வாகனத்தா
னன்பருளமலைவேலானணிகொள்சிவமலைவேலா
னன்கெழுமாவினன்குடியானலங்கெழுமாவினன்குடியான். ௩.

சீலர்தமக்கறமறைந்தான்செய்படிறற்சறமறைந்தான்
மாலவணின்பமருமகன்மறைவரரன்பமருமகன்
கோலமலர்க்கதம்பத்தான்குழையினர்மிக்கதம்பத்தா
னூலவரினேரகத்தானுவலவருமேரகத்தான். ௪.

மெல்லியலாள்பழநிமலைவிமலைசெய்பழநிமலை
செல்வியர்மேகாரவனஞ்சிறந்தகன்னிகாரவன
மல்லல்வளநாட்டினன்வைசாலூர்நாட்டினனை
கொல்சினவேலாடலானகுன்றுதொறுமாடலான. ௫.

வெவ்வியவாசகத்துறையான்வேதவாசகத்துறையான்
மவ்வணமாருணனத்தான்வாழ்த்திடுமாருணனத்தான்
பவ்வமாவினைக்கொன்றான்பவமுறுமாவினைக்கொன்றான்
றெவ்வாபுரமலைக்குமரன்செய்சோலைமலைக்குமரன். ௬.

வாரிசுடுஞ்சரவணத்தான்மருசவேள்சரவணத்தான்
சூதபமுன்பொருமயிலான்சுரேசர்விரும்பொருமயிலான்
சீருணாவுதருமடிகள்தேவரோதருமடிக
ளாரவமுறப்பணிவாரேயமரர்சிறப்பணிவாரே. ௭.

மீட்டுமுனிவர்மகிழ்தூங்கிவிரைவேலைபுரண்டனநீர்
நாட்டமுடையராகவுளங்குமிழ்த்துநவிலுந்தொறுஞ்சரிதை
வேட்டகருத்துப்புலநெறியில்விழாமைநிறுத்திச்சிவகரணத்
தோட்டிமுகுர்த்தமொன்றுறங்கிவிழித்தார்சூதனுடனுரைப்பார். ௮.

வேதமுனிவாவழுத்துமறைவியாதமுனிபாலொருங்குணர்ந்த
சூதமுனிவநீயுணர்த்துந்துகடீர்சரிதையுபதேச
மாதலுணர்ந்தோம்வழியின்கணுதவிமாரிக்களிக்குனர்யா
ரேதமசலநதெருட்டுதனின்சடனென்றுரென்றலுமுனிவன். ௯.

பகர்ந்தசரிதையபதேசமென்றீரன்றேபரிந்தொருசா
லுகந்துதிருவாவினன்குடியென்றுரைத்தோர்முததியடைவருண்மை
யகந்தையிதுவன்றுமதுபொருட்டடியேனறையப்பெற்றனனீர்
முகந்துகொளப்பெற்றீரெளிதோவென்றனதனைமொழிகின்றான். ௰.

சூழ்கிரேதாயுகந்தோன்றுநாளிற்சூசராசலத்திற்
றாழ்வெள்ளருவிமனுச்சிருங்கமுடிமேற்றுளவத்தடமௌலி
வாழ்நஞ்சிவயோகீசரைநேர்ந்தமலன்சரணமலர்ப்போதில்
வீழ்வண்டெனச்சென்றடைமாறுவினவும்விடையுமிகவிருந்தான். ௧௧.

இருக்குமேல்வைநிலமகளுமெறிவெண்டிரைப்பாற்கடற்பிறந்த, மு
ருக்கினிதழ்வாய்ச்செழுந்திருவுமுகுந்தன்முளரிப்பதம்போற்றிப், பெருக்
குந்துதிகொண்டருகுசென்றாபிரிதொன்றுரையான்முகநோக்கான், கு
ருக்கும்பணிவேண்டியனறெண்டார்கூறுங்கூற்றுக்கெதிர்கூறும். ௧௨.

நின்றுவருந்திநெடிதுயிர்த்துநீங்கியொருசாரஃறலுமக்
குன்றிலுறைபுண்டரிகனெனும்பாகவதனைக்குவிந்தெதிர்ந்து
சன்றியிதயங்கவன்றனையீர்வருவதெவண்கொல்கழலுகென்று
னன்றுநிகழ்ந்தவாமுழுதுமறைந்தாரவனுமகந்தெரிந்தான். ௧௩.

அனையீரோதற்கரியபரம்பரன்சேவடிகளகந்திழைக்கு
நினைவோர்வழியினொழுகியலந்நேரநீவிரடைதலினுற்
புனையீர்ந்துளவோனீத்தனனென்றுரைத்தபுண்டரீசனைப்பார்த்
தினையதரியாமையினிழைத்தேமினிமேல்யாதுபுரிவதென்றார். ௧௪.

மாதாமலர்ச்சேவடிபாகவதன்றாழ்ந்தனையீர்வடகீழ்பால
சீதமலிதீம்புனற்சித்ததீர்த்தக்கரையுங்கூவிளஞ்சூழ்
போதுவனத்தென்கீழ்பாலாமலகவனத்தும்புரிதிர்தவந
தாதுமலிதண்டுளவனும்மைச்சாருமெனச்சாற்றினனகன்றான். ௧௫.

விண்டவுரையுட்கொண்டுசித்ததீர்த்தக்கரையின்மேதினிமான்
பண்டைமகுணனடைமாறுபயிறற்கரியதவம்பயின்றா
ளண்டர்முனிவர்தொழுங்குழகன்மாமூதாராமலகவனங்
கண்டுபுரிந்தாளருந்தவஞ்செங்கமலத்தவிசிலரசிருந்தாள். ௧௬.

வருதிரேதாயுகந்தனிற்கோசிகன்போர்வலியும்வன்படையுஞ்
செருவிலுடையப்பொருதுமனஞ்செருக்குங்காமதேனுவைமா
லொருவுவசிட்டன்முகநோக்கியசந்தையுடையாருலகிலுய்மா
றரிதுநீயுந்தவம்புரிந்தாலடைவைதுறக்கமெனவறைந்தான். ௧௭.

மாற்றமதுகேட்டுளம்வெருவிமறைவல்லோய்நின்பணிவிடைநீந்
தாற்றுவேன்யாண்டருந்தவமென்றலுநின்கலையிலொன்றதுகொண்
டேற்றபணிநீபுரிதிகலையாவுமுருவுகொடுசேழ
றேற்றுகிரிகூவிளவனத்தின்வடபான்மடுவினிடைத்தோன்றி. ௧௮.

அறிவோடலர்மான்றவம்புரியாமலகவனஞ்சென்றரியதவ
முறுதிவரநின்றிழைத்திடுங்காற்றேன்றுமூன்றாம்யுகந்தன்னின்
மறுவிலருமாதவம்புரியும்போழ்தில்வரதன்வழங்குமருள்
பெறுவைநீயுமெனுமாற்றங்கேட்டுப்பிறழாநடைந்ததுவே. ௧௯.

புரிசில்காலங்கழிதலுமுனபுகன்றவாறருள்புகந்தோன்றக்
சரியமணிவண்ணனுந்தண்ணங்கமலத்தோனுங்கடவுளரும்
விரிநீருலகவிருள்பருகிமிளிரும்பருதிவானவனுந்
தெரிமெல்லிழைபங்கினன்மலர்த்தாள்பணியவெள்ளிச்சிலம்படைந்தார்.

கடவுட்கயிலைதனையடைந்தோர்குழுவிற்கதிரோன்முகநோக்கி
யிடனெங்கணுநின்றசவஞ்சென்றிலதெனமெலியாதிருக்குமோ
மிடையுமுயிர்களெனமகதிவீணைக்கிழவன்விதந்துரைப்ப
வடலுந்தளவாவகந்தையுங்கொண்டலரியடிகளடிபணிந்தான். ௨௧.

எந்தையுணர்ந்தவலந்திகழ்கண்ணிமைத்துவிழித்தானதுபோழ்தில்
வந்ததிரவிகாலமளவில்சென்றனவந்தனையாக
நந்தவுலகமெலிவதுபாரென்றனிரவிநடுநடுங்கிப்
பந்தவினையேனகந்தையெவ்வாறொழிப்பேனென்றுபணிந்திரந்தான். ௨௨.

கோங்குவனத்தென்குணபாலாமலகவனத்திற்சோகநதந்
தாங்குமலர்ப்பொன்சுரபிதவந்திளைக்குந்தானத்தந்தணனு
யாங்குவிரதம்புரிசருதும்வரனென்றமலனருளியவா
றோங்குமிரவியகந்தைதபமுயன்றன்மழுங்குமொளிவீற. ௨௩.

ஈறுமலர்பெய்தரியதவநவைதீர்கூரநாடொறுமியற்றிப்
பேறுபெறுவாணிவனுணர்வுபிறழாதுழலும்பெற்றியினு
லீறின்முனிவரிருவிசும்பினிமையோரிறைஞ்சுமெழின்மூதூர்
வீறுதிருவாவினன்குடியென்றுலகமென்றும்விளங்கியதால். ௨௪.

எந்தஞான்றும்பரசிவனெவ்வுயிருமீளாருருடனிருந்து
மெந்தஞான்றுமொருதனிவேலிறைவனரசுவீற்றிருக்கு
மெந்தஞான்றும்பொறிபுலன்போக்கெறிந்தோரிருக்கையாயிருக்கு
மெந்தஞான்றுமடைகுநர்பேரின்பமிசையுநுகர்விக்கும். ௨௫.

மூவாபெயரானிலையின்மூதூரின்முருக்கினிதழ்ச்சூட்டுச்
சேவலிமையாக்கருங்கணிறைசெறிபைஞ்சோலைசென்னியினுண்
டேவிமயிற்கூர்முதறடிங்கசுடர்வேற்குழகன்றொல்லையினன்
காவிவிரிபூங்கயிலையினின்றடைந்தவாறுகழறுவாம். ௨௬.

சுருதிவண்டியிராயிரந்தோட்டிதழ்க்கமலப்
பொருவினுன்முகக்கடவுளையடைந்துபுத்தேளி
ரிருக்கராதன்மகதியாழொண்கையிலேந்தி
விரலுளாழ்ந்தனன்யாவரும்வியப்பவேதுதிப்பான். ௨௭.

முண்டகச்சதுமறையவன்முடிமுறைதுளக்கி
வண்டிருக்கையிலிருந்துமாதுளங்களியொன்றப்
பண்டுநல்கினன்பரமனுக்கென்றனள்பதுமத்
தண்டர்கோனுநங்கருத்துமற்றேயெனவறைந்தான். ௨௮.

மகதியாழ்முனிவிடைகொண்டுகளிவலகயிலைப்
பகவன்முன்புவைத்திறைஞ்சினனெடுத்ததைப்பரம
னிகல்கடந்தவைவேற்படைச்சேயினையானைப்
புகாமுகத்தனைநோக்கினன்புன்னகைமுகிழ்த்தான். ௨௯.

யாவராயினுமிச்சனிவிழைந்துளோர்சனைத்திற
பூவலங்கொடுவருதிரேலவாக்கெனப்புசலத்
தூவியம்பசுத்தோகைமாமஞ்ஞைமேற்றோன்றித்
தேவர்சேனைகாவலன்கிரியிழிந்துபார்சேர்ந்தான். ௯௰.

ஆயகாலையிலைங்கரனுயிராமுதலீன்ற
தாயையெங்குமாந்தந்தையைவலங்கொண்டுதாழ்ந்து
சேயதாமரைச்சீரடித்துணைசளிற்றீந்தேன்
பாயுமாமலாமாரிதூய்ப்பரவியொன்றுரைத்தான். ௯௧

அண்டரண்டமுமப்பிரமாண்டமுமப்பாற்
பண்டைநானமறைச்சிரசின்மேறபடரொளிபரப்பும்
விண்டிடற்கரிசார்வியாபகமுமாயுயிரா
யுண்டொரோண்பொருளெனபதுநீயலதுண்டோ. ௯௨.

என்றலுங்கரத்திருநதசெங்கனியையீர்ந்துளவோன
றன்றடங்கணிறபாப்புருச்சாபநீக்கியபூங்
கொன்றையஞ்சடையொற்றைவெண்கோட்டுமால்யானைக்
கன்றினங்கையில்வழங்கினனகளங்கனிமிடற்றோன். ௯௩.

**வேறு.** கூருளங்கிழியவென்றவேன்முருகனிறைபுகனறபடிசூழ்வலன்
பாரிடம்புரியவிரைதலங்குழூஉமுபாரிடமபுடைபரந்தன
வீரவாகுமுதலியசொல்வீரசண்மிசைந்தொருங்குமருங்குறச்
சாரநதல்வரமிசம்வெள்ளம்வளைதாரனந்தலைபெயாநதன. ௯௪.

ஆரநீள்சவிசைநீழல்வானிலவெள்ப்பமிராய்த்துயிளிரமிசசநீ
டாரினவிசணியசோதயிச்சுளவைசாய்மறைதிரளசளவீசிடச்
சீருறுங்கவிரலர்நதசெந்தலையசீவலநறுவசமீதெழக்
காரிநீடுமுதுகூடுபீலிதிமிழ்கதலிசைச்கொடியுரிஞ்சவே. ௯௫.

தெண்டிரைக்கடலிஞானமறைச்சுருதிகிசைதொறுந்தொறுமொலிப்பவே
வண்டுபானமுரலவிணடவேரிமலாகொண்டுவானவாவழுத்தவே
பண்டையின்னிசையாநரம்புளாழ்நதிசைச்தும்பவிணைமுறைபாடவே
தொண்டாகண்டுதுளிதூங்கவிநசருள்சுரநதுநெஞ்சொடுமிறைஞ்சவே.

பாலுசம்பிரணவவலம்புரிபதாதிவாரியின்முழங்கவே
ஞானவானாருடமுழவுநான்முகமுமொத்துநள்ளிடைபுரப்பவே
வானதுநதுமிவிணணசனிடேறறெதிராமலைதுபேரொலிவழங்கவே
யேனைமொந்தைதுடிபதலைகல்லவடமிரலைபேரியுமிரங்கவே. ௯௭.

மின்னிவர்ந்தகதிர்வேலன்வந்தனன்விசாகனாறுமுகன்வந்தன
னன்னையம்பிகைகுமாரன்வந்தனனலங்கலனகுரவன்வந்தன
னென்னையாளுடைகுழகன்வந்தனனெமிறைவன்வந்தனனெனுமணிச்
சின்னமுன்புபணிமாறமஞ்ஞைமிசைசென்றனன்குணதிசைக்கணே. ௯௮.

சீதவெண்டிரைவழங்குதெள்ளமுதுகொள்ளைகொண்டுநுகர்தேவரு
மோதுமண்டர்களுமாரணங்கினருமுள்ளுவந்துதுதிகொள்ளவே
போதுகொண்டடிபணிந்துவெண்பகடிவாந்துவிண்கெழுபுரந்தர
ரூதரங்கொடயல்பெயரவேலமுருகனங்கியந்திசையடைநதனன். ௯௯.

அவிசொரிந்தெரிவளர்த்தருந்தவமிழைத்தரும்பொருடிளைக்குமஞ்
செவிகவர்ந்தசதுமாமறைததலைசிறந்ததாபதர்சிரங்கரங்
குவியவந்தடிவணங்கியங்கிதிரிகோட்டுமேழகநடாத்தவே
கவின்விளங்கியசிகண்டியூர்கருணைவாரிதென்றிசைகலந்தனன். ௪0.

அம்பரத்தகடுறுஞ்சுசென்னியெரிகுஞ்சிபிஞ்சன்மெய்யாரழற்
செம்பொறிச்சிதறுகட்படைத்தொகைசெறித்தகைப்படாநெருக்கெனும்
பைம்பணிக்கடனடுச்சமன்பரவிவெஞ்சினப்படாமருப்பிடை
வெம்பகட்டுமிசைபோதமேதகுதெனமேலைமாதிரம்விராயினான். ௪௧.

கங்குல்வெண்பிறைசெவ்வானணிந்துநடைவந்தியங்குதல்கடுப்பவே
வெங்கண்வாளவுணரெயிறுசெஞ்சிகைவிளங்கவேலையின்வளைந்தெழப்
பொங்குபோர்நிருதிபோறறிவீறுநரவாகனத்தினமிசைபோதரப்
பங்கயன்பொருண்மயங்கவென்றவனகன்றுபச்சிமமடைந்தனன். ௪௨.

வந்துவந்தனைபுரிந்துசூழ்குனாமலங்கடிந்தருள்புரிந்திடுஞ்
சிந்துதெண்டிரையிரங்குகங்கைமுதலளவிறெய்வநதிமொய்கொள
வந்தநீர்வருணனடிவணங்கியடன்மகரமீவரவலங்கல்வேற்
கந்தன்விண்டொழுசிகண்டியம்பரிகடாவிவாயுதிசைமேவினான். ௪௩.

விரிதலைப்புவனமுழுதுமொக்கவிரவியவொலிக்கடவுளெதிர்கொளா
முருகுயிர்த்தநறுமலரிறைத்துமுறைபரவிமொய்த்தபரிசனரொடே
கருநிறத்திருகுபுரிமருப்பிரலைகடிதினுய்த்தருகுதொடரவே
யருள்படைத்தவிழியளகைபெற்றதவமயில்படைத்தகரனருளினான். ௪௪.

கானவிஞ்சையரியக்கர்கிம்புருடர்கருடர்காந்தருவாமுதலினோர்
வானநாடரசுரேசரேனையர்கலாவவச்சிரவனன்றொழ்
மீனுலாமணிவிளங்குபுட்பகவிமானமீதுவரமேலையோர்
சேனைகாவலன்வடாதுபாலொடுசெறிந்தகீட்டிசையுறைந்தனன். ௪௫.

சிருருத்திரர்வசுக்கள்மாமுனிவர்தீரத்தாபூத்திரணிறப்பவே
மேருவாதிகிரிபுவனமெண்களிறுவிண்டுவாதிபுடைமணடவே
சாரதத்தலைசிறநதுளோரொடுமீசானனஞ்சலிதிருத்தவே
கார்மயிறபரிநடாவியோய்வினோர்கணந்தணிற்கயிலைமேவினான். ௪௬.

**வேறு.** தந்தைமலர்க்கைச்செழுங்கனிதன்றமையன்றளிாக்கைதனிற்கா
ணச், சிந்தைதெளிநதாண்டொருவியுயர்தேவகிரிச்சேதிமம்வைகி
யந்தவரைசசாரலினெடுநாளாற்றுமரியதவமுனிவர்
தந்தநெறிவநதனைபுரியத்தாமேபெறுநல்வரநல்கி. ௪௭.

பாயும்விடையூர்பகவனுக்குந்தனக்கும்பழையபதியென்றே
வாயதிருவாவினனிவரையளித்துமென்றேவேனவரை
யேயசாரலுறுந்தவமோயாதோயாவரறிகிற்பார்
சேயதிருவாவினன்குடியிற்சென்றான்குன்றுதொறுநின்றான். ௪௮.

போற்றியரியதவம்புரிசெம்பொதியாவினனின்றோர்தமக்குந்
தோற்றவரியகாட்சிநனிவழங்கிவடிவேற்சுடர்நிதியா
லூறறினிமிர்ந்தநறும்புனலொண்டீர்த்தமொன்றுவருவித்தா
னாறறலுறநின்றிருபயனும்பெறுமாறுடினாரன்றே. ௪௯.

ஒருகன்னலினான்மறைக்கிழவனுவணமுயர்த்தோனுருவுகொள்ளு
மிருவருணரவரியவடிவெடுக்குமகேசனெனவைகு
மருவுமுருவுமருவுருவும்வாமத்தொழிலாற்றிடுமீளப்
பொருவிலுருவுகொளும்விளையாட்டொன்றோபலவும்புரிந்திடுமால். ௫௦.

எண்டிச்சளிப்போருடன்பணிப்பநோக்குமிசைக்குமுடன்கருணை
கொண்டுசிறுபுன்னகைநகைக்குமிதுவேகைலைக்குவடென்னு
மண்டர்தொழவீற்றிருக்குமெங்களடிகள்செயலீதன்னகரிற
றொண்டையிதழம்பிகையோடுந்தோன்றலடைந்தவாபுகல்வாம். ௫௧.

எமதுமுருகனோபிரியுமென்னாவிரங்கியிமையமக
ளுமைபங்குலவமூவரிடத்தநதரதுந்துமிகளுமொலிப்ப
வமரரிறைஞ்சப்பூதகணநெருங்கவயன்மால்புடைவணங்கக்
குமரனாரையாவினன்குடியிற்குடிகொண்டானங்குடிவாழ்வே. ௫௨.

செஞ்செவ்வேற்சேய்சினகரத்திற்சிவபிரான்வெள்விடையிழிந்
தஞ்சலுமையோடெழுந்தருளுமளவிலளக்கரோடளக்க
ரெஞ்சலறவெற்பனபோல்வந்தெதிர்ந்துகலரத்தொகுதியிடை
விஞ்சுவிறன்மொய்ம்பினனந்தியடியர்கரவேத்திரமொலிப்ப. ௫௩.

இன்னவாயவவையினிடையிகல்செவ்வேலோன்றாதையையு
மன்னையையுந்தாழ்ந்தனனெனமையாளமலனிருகையாலெடுத்துத்
தன்னதகன்மார்புறப்புல்லித்தழுவியுச்சிமோந்துமணிப்
பொன்னந்தவிசிலினிதிருந்துபுடைவீற்றிருந்தாள்கரங்கொடுத்து. ௫௪.

முருகவருகவருளுததிமுத்தேவருகமுராரிதிரு
மருகவருகவெமதுகுலமகவேவருகமுலைநறும்பால்
பருகவருகவெனவெடுத்துப்பருவங்கூறிமடியினில்வைத்
திருகையான்மீளவுமிறைவனெடுப்பவளித்தாளுலகீன்றாள். ௫௫.

ஈசனுருகிமடியினில்வைத்தென்றுமிளையோயறிவுடையை
தேசுதருநம்வாணுதற்கண்மணிநீசிறுவனோபெரியை
வாசநறுமென்கனியுமொருகனியோமதுரமொழிவாயாற்
பேசவரியமறைஞானப்பிள்ளைபழநீயெனப்புகன்றா. ௫௬.

**வேறு.** இவ்வாறுமாற்றமிசைத்தோதுபிதாவையின்சொன்
மைவாட்கண்ணனைதனையுந்துதிவாய்மையின்வழுத்திச்
சைவாகமத்தின்வழிபாடுபுரிந்தேதாழ்ந்து
மொய்வாசம்வீசுமலர்தூவிமுயன்றுநின்றான். ௫௭.

நின்றானைநம்பன்வருகென்றுநெமுங்கப்புல்லி
மின்றாவுசீயப்பிடாரதன்மீதுநாப்ப
ணொன்றாயமைத்துப்புரிபூசனையுண்மைநன்று
நன்றாயவீய்துமவையாவுநவிற்றுகென்றான். ௫௮.

மூவாதமுன்னைப்பொருளாகியமுக்கண்மூர்த்தி
யோவாமையெஞ்ஞான்றுநின்னோடிவண்வைகலானு
மாவாதவன்போன்றுயர்தீரவடையினீண்டுத்
தாவாதியாருங்கதிசார்கவுந்தந்திடென்றான். ௫௯.

வேறு. பூமேவுவரிப்புரிமீதுபொருவில்வேலோய்
யாமேவுமூதூரிமையோர்களிறைஞ்சிவாழ்த்தித்
ாமேவுமாமுதலாயவர்தாழ்வுநீங்கி
மேவுஞான்றிங்கிலத்துய்த்தனர்நீக்கல்யாதே. ௬0.

நதித்துநம்மைக்குகநீமலர்தூவுமூதூர்
ந்திததபேர்களகதிசார்குவர்தக்கதன்றே
நதித்தவெய்யகொடும்பாதகரேனுநின்னைச்
நதிக்கின்முத்தியளிப்பேமதுதிண்ணமாதோ. ௬௧.

ணிநெடுவேலிற்றோட்டசரவணத்தீர்த்தமூழ்கும்
ணிநர்நங்கயிலைவைகும்பொருவினங்கணங்களாவர்
ரியநின்றூமங்கூறிக்காரத்திகைத்திங்கண்முறறு
ணியவன்னீரிறதோய்ந்தோரெம்முருப்பெறுவர்திண்ணம். ௬௨.

றறிலைப்பசுங்காய்நெல்லிவனத்திடைத்திறம்புசிந்தை
வாறறிவுடையரேனும்விருச்சிகதிங்கடன்னி
ாறவம்புரிவோர்க்கேவலாற்றிநன்கியற்றினாலும்
யாறறருவிசும்பில்வைகும்புலோமிசைப்போகந்துய்ப்பார். ௬௩.

ம்மதியினினிற்பூசையாறறியோராறெழுத்துங்
மமறிவொடுநினைப்போரதாபதாக்கடிசினல்கிச்
சம்மையினிலைத்துநெல்லிவனத்தினிற்செறியுந்தக்சோ
மும்மையுமுணர்ந்துமூலமலமொரீஇமுத்தராவர். ௬௪.

டுறுநெல்லிநீழலயினியிட்டயின்றோரன்றோர்
ாடமதொருவித்தெள்ளாரமுதுணுஞ்சுரேசராவார்
றுசிரார்த்தஞ்செய்தோர்பிததாகணமணிபுனைந்து
நறச்செபித்தோராயாருமுலகடைவாமன்றே. ௬௫.

நச்சிகமதியில்வெள்ளிபூரணையதுமேமேவி
ச்சனைமுதலமுன்னரறைந்தனயாவுமாற்றி
ரிச்சிகைவளாப்போக்கூட்டியெழிற்சினகரம்புக்கன்று
நசசூடார்த்திபகல்கிரகுரைகழலடைவர்திண்ணம். ௬௬.

டொருகணம்வதிந்தோரெண்டிசையிறைவரேனை
ண்டருமயன்மால்வைகும்வாழ்க்கையிற்கழித்துநந்தரு
ண்டருபுரியில்வாழ்வோரென்றிடிறறினமுமேவிப்
ணடறமபுரியோர்பெற்றியாமன்றிப்புகல்வாயாரே. ௬௭.

நிற்பூசையோர்நாட்கடிநகரதனிலாற்றி
தமாஞாலமாதிபுவனங்கடொறுமெஞ்ஞான்றும்
ணைபுரியிலுண்டாம்பலனெய்துமனுவொன்றிங்ஙன்
ணைபுரியிலோரேழ்கோடியுஞ்சித்தியாமால். ௬௮.

ளருவிகடாழ்கேழற்சிலம்புதென்கயிலையிந்த
ர்ளியபதியொவ்வாதுசிவபுரியுறையும்யாமே
ளிலைவடிவேற்சேயிம்மேயினர்கணங்களீட்டம்
நீரமுழுதும்பாசிரதிமயிற்பரிவல்லோயே. ௬௯.

புள்வரைபொடித்தவைவேற்பொறிபயிற்குழகன்கேட்ப
வெள்வளைதோளிபங்கன்விளம்பிவேண்டியவரங்கள்
வள்ளிதழ்க்கமலைகாமதேனுவிண்மணிக்குநல்கிக்
கள்ளலர்செறியும்வில்வவனந்தனிற்கலந்தான்மன்னோ. ௭௦.

ஓதைநீராடநங்கையுறுதவமுணர்ந்துவேட்டு
மாதவன்புராரியாக்கான்மலர்மிகுள்வறுவையாற்றிக்
கோதில்கூவிளவனத்தின்குடதிசைப்பராத்துவாசன்
போதுமாச்சிரமத்தோங்குமகிழின்கீழ்ப்பொருந்தினானால். ௭௧.

இன்னறும்பாற்சேதாமீளவுமிறைவனைச்செவ்வேளைப்
பன்னரும்பூசைமுற்றியடைந்ததுவசிட்டன்பாங்கர்
மின்னவிரொளிவிளங்கிவெயிலுமிழ்பருதிப்புத்தேண்
மன்னியதிருவிசும்பில்வந்துவந்தருச்சித்தம்மா. ௭௨.

கூறுடையாளுங்குன்றக்குணப்பெருங்குன்றுஞானப்
பேறுடைப்பழனியென்னப்பெயரதுமருவியெங்க
ளாறுமாமுகவன்வைகுநகரமுமன்றுதொட்டு
வீறுதொல்பழனியென்றேவிளம்பியதுலகமூன்றும். ௭௩.

தளிரியலியமமீன்றதனையைதன்றனையன்பைம்பூங்
கிளிமறைபயில்குறிஞ்சிக்கிழவன்வீற்றிருந்துவானோக்
களிபுரிநகரிலாதியுகந்தனிலகங்குழைந்து
தெளிபிரமேந்திரன்சென்றடைந்ததுசிறிதுசொல்வாம். ௭௪.

௧௩-வது திருவாவினன்குடிச் சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௫௫௩.

**திருச்சிற்றம்பலம்.**

## ௧௪-வது பிரமேந்திரன் சருக்கம்.

பொங்கிராநீர்மணமாமலப்புன்மைதன்
பங்கிராவானமெய்ஞ்ஞானவாட்பற்றிமேற்
சங்கிராமன்சதுமாமறைத்தாபத
னங்கிராவாறுசெய்யக்கினித்தாமரே. ௧.

தோன்றுநால்வேதமுஞ்சொற்றவாறுற்றதோர்
மூன்றுநன்காற்றியேமுற்றினான்முற்றவே
தான்றனைத்தேர்ந்தனன்சன்னியாசதினா
னென்றநாமம்பிரமேந்திரனென்பவே. ௨.

அன்னவன்செய்யகற்றோய்ந்ததூசாடையோன்
சொன்னவேய்த்தண்டினான்றூங்குகுண்டிகையினான்
பன்னுநுண்சகுனவின்பாலின்வெண்பல்லினான்
றன்னைநேரின்மையோன்றன்மையார்சொல்வரே. ௩.

ஒத்தமாணுக்கருமோர்த்தநோன்போர்களு
மொய்த்துமாடேசமூவாண்டுபூவலனுநீஇ
யத்தனுள்பொருணைகாவேரிமுத்தாறுசூழ்
கொத்துலாஞ்சோலைமுக்கூடல்வந்தெய்தினான். ௪.

செய்யமாமணியிலிங்கேசனைச்சிந்தைதேர்ந்
தொய்யெனச்சய்யமால்வரையிலோமண்டல
மெய்திமுத்தாறுதாழ்சேரவெறபெய்திமீண்
டய்யன்முக்கூடல்சென்றண்ணலைப்போற்றினான். ௫.

சாலகாலன்கருவூருமூர்காவிரி
யேலநெடுங்கரையூருமற்றேனவுங்
கோலமாவூறுநீர்ககோலமாண்பொருநையின்
மூலமுஞ்சென்றுகைகூப்பினான்முனிவனே. ௬.

ஆதிதாள்கோங்கநீளடவிசென்றேத்தினான்
மாதினைக்கூவிளாடவியில்வந்தனைசெய்தான்
கோதில்சீராவினன்குடியில்வந்தலர்கடேஉய்க்
காதலித்தறுமுகக்கடவுளைப்போற்றினான். ௭.

வைகியோருழியுடன்வந்தமாணுக்கர்தா
முய்குவாராவினன்குடியினோன்காதையு
மெய்குழைநதேனவெற்பாற்றலும்வெண்டிரை
மொய்கொளாண்பொருணையின்சரிதையுமொழிசெய்தே. ௮.

மைந்தாகாண்முத்திவீடருளுமிம்மாநகர்
தந்தைதாழ்செவியின்மந்தண்மொழிப்பொருடருங்
கந்தர்தாளடையலாமெனமனுக்கழறியே
யைந்துமோர்நெறிநிறீஇயரியநோன்பாற்றினான். ௯.

சில்பகல்சேரலுஞ்சிற்றுயிர்த்தன்மையிற்
பில்குறுந்தத்துவப்பேதம்யாவையுமொரீஇத்
தொல்குணந்தோன்றிடத்தோன்றும்வெள்வேலினான்
மல்வளங்குலவுதாள்வனசவண்டாயினான். ௰.

ஆதலாலாவினன்குடியையாரணமுதற்
கோதிலாமுத்திநற்றலனெனக்கூறுமான்
மாதவத்தலைவிர்காள்சேண்மினோர்மாதவன்
காதைசொல்லுதுமெனக்கழறினான்சூதனே. ௧௧.

௧௪-வது பிரமேந்திரன் சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௫௬௭.

திருச்சிற்றம்பலம்.

## ௧௫-வது நித்தியநாதன் சருக்கம்.

வேறு.

ஆனதோரிரண்டாம்யுகத்
தானமில்சிவயோகரின்
ஞானநித்தியநாயகன்
னாலத்தோர்தன்மையோன். ௧.

மூன்றுகாலமுமுன்னினோ
னூன்றுமோராபவமுண்டதிற்
றோன்றும்வீடெனச்சூழ்வினோர்ந்
தான்றுமாதவமாற்றிய. ௨.

விளரிவண்டுமிளற்றுதார
னளணியற்றிடுநற்றவம்
வளருருக்கொடுவந்ததென்
றுளம்வியப்பவுத்தினன். ௩.

இராசராசனெனும்பெயர்
விராவிவெண்குடைவேந்தர்கள்
பராவிவீறுபணாடவித்
தராதலந்தனிதாங்கினான். ௪.

எண்ணருந்தவனெங்கணும்
பெண்ணிடங்கொள்பிரான்கழற்
கண்ணிடங்களிகொண்டுகண்
டண்ணல்கோங்கிலடைந்தனன். ௫.

ஆயநாட்டிடையங்கணன்
கோயிலுள்ளனகொய்மலர்
தாயினான்பரைதொல்பெய
ரேயும்யாற்றருகெய்தினான். ௬.

நிகரிறன்பெயர்நீட்டுவார
நகரநன்கினியற்றிவெம்
புகர்கடிந்துயிர்போற்புவி
திகிரியொன்றுசெலுத்தினான். ௭.

ஏறறம்பொருளின்பம்வீ
டேறிலாமையுணர்ந்தன
னாறுசூடியினடியலால்
வேறுசிந்தைவிருப்பிலான். ௮.

மூலஞானமுளைத்துமுக்
காலமுங்கரைகண்டுதன்
சீலமேன்மைதெரிந்துநீர்
வேலைஞாலம்வெறுத்தனன். ௯.

ஆவினன்குடியன்றுபோய்
மேவினன்கதிர்வேலர்தாட்
பூவினாருள்பூண்டற
மோவிலாமையுளூற்றினான். ௰.

சென்றயங்கியசெச்சைவே
ளான்றதேசிகனாகிமுன
பென்றயோசமிமைப்பவே
தோன்றினானெதிர்தோன்றினான். கக.

கண்டுபன்னிருகண்ணுடை
யண்டர்கோனிவனாமெனாச்
தண்டுபோற்படிதாழ்ந்தெழீஇ
விண்டுகண்ணீர்வீழ்த்தினான். கஉ.

**வேறு.** கூதாவென்றார்புனைதோட்குழகபசுந்துளவோனும்
வேதனுங்காண்பரியதந்தைதனக்கினியமிளாற்றுமிளங்
காதலனுந்தேசிகனுங்கடவுணீயொருவனன்றோ
பேதமையனன்றோநினசீர்பேசுதுமெனவெழுந்துணிவே. கங.

பிறங்கியபல்லுயிர்க்குயிராயுறைவைபிறழாமையென்று
மறங்கெழுசெங்கதிர்வேலோயருட்புணையொன்றுடைமையாற்
சறங்கெனச்சூழ்தருபிறவிச்சலகடலிலடுத்தடுத்தாங்
கிறங்குதலெனகடன்கரையினேறுதனின்கடனாமால். கச.

இந்தவாறிசைத்தகுருசிலையிகல்வேற்கிறையீண்டு
வந்தவாறறைதியெனவணங்கிவினைவலிப்பவநோய்
சந்தவாறிஃதிதுமேற்சாராதுனருளடைய
மந்தவாறடியேனுக்கருள்கசிவயோகமெனறன. கரு.

என்றலுங்கவிழ்தலைச்சூர்மாவினின்னுயிரைவாட்டுங்
குன்றமுங்கொன்றவைவேற்குழகன்கோமகனைநோக்கி
வென்றவன்புலனைந்துமவெலகுவதானீஞான
மூன்றனக்குணாதநுவாமென்றுரைததருட்கடைக்கண்சேர்த்தி. கசு.

மூவகையாயமாதத்துவத்தின்முத்திறனுமுற்று
மேவனுருபாதிவிசற்பமும்விளக்கிமேலோ
னுவறுவடிவுசாண்டனுணர்த்தியொணபிரமனாதி
யாவுமோதரியயோகத்திருத்தவிதென்றுநல்கி. கஎ.

ஆனந்தவுருவத்துள்ளேயனுதினம்விடாதுதாங்கி
நானந்தியொன்றுமின்றிரவிலருஞ்சிவானுபூதி
தானந்தலின்றிச்சோதிதயங்குறலூமன்கண்ட
யூனந்துகனவையொத்தலிவைசிவயோகமாமே. கஅ.

நீணிலம்புறக்கப்பூண்டமணிமுடிதிருயணிக்த
மானூறுசிவயோகத்தையியற்றிஎல்லுறிவீடிதன்பும்
வேணவாவுறத்துய்ப்பாயென்றருளிவேனடுவிகிமூங்
நானுமாய்ந்தயங்கும்மேசெய்நனறுபொற்கோயிற்சார்ந்தான்.

சேய்கழறியவாறுற்றிச்சிவகதியடையலாலுண்
காய்கறிவதியூர்யோகவனமெனக்கவினியோங்கிற
றுய்சதிரவேலோன்காட்சியளிப்பவேதுவாபரதரோர்
நாய்கனவீடெய்துமாறுகேண்மெனநவிலலுற்றுன். உ0.

கரு-வது நிர்த்தியநாதன்சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ருஅள.

திருச்சிதம்பலம்.

## கசா-வது சொர்ணகுத்தன் சருக்கம்.

அந்தநாட்டிடைவணிகர்தொல்குலத்துளோனளிசூழ்
கொந்தவிழ்ந்ததார்ப்புயன்சொன்னகுத்தனுமவன்றன்
சிந்தையனபுடைக்காதலியருந்ததிசிவனி
வந்தமாநனிமகேசையுமனையறமபுரிவார. க.

நறைமுதுக்குடைந்தாறுபாய்நாரிகழ்க்கொன்றை
பிறைமிலைச்சுகோமரனைப்பினைநெடுநதடங்கட்
பொறைமலர்க்குழறபூந்திருமாாபனைப்போறறு
முறைநெறித்தலைநிலைப்புறுமுயற்சியின்மிக்கார. உ.

செல்லொழுக்கெனத்ரருநிதியொழுகசமுந்தெய்வச
சொல்லொழுக்கையுமுறைநமையுநதலைநிகாமுல்லை
நல்லொழுககமுநாடொறுநாடொழுஞ்சிறநத
வில்லொழுககினாமைநதரிலலாமைமையநிகொந்தார். ங.

மற்றுமற்றுளதவநதிபடிந்துமாநிலத்தின்
மற்றுமற்றுளதலங்களில்வணங்கியும்வனத்தின்
மறறுமறறுளநோனபுகளாறறியும்வருந்தி
மறறுமற்றுளபுரிநதுமோாமகவின்றிமெலிந்தான். ச.

மைந்தருள்ளவாநோற்குமாதவங்களேழுயங்கள்
மைந்தருளளவர்பெருகின்றவரன்களேவாங்கண்
மைநதருள்ளவரில்லறவாழ்க்கையேவாழ்கைகை
மைந்தருள்ளவரிருமையும்வருபயனுகாவார். ரு.

உரியவாழ்வினுக்கழகுமாண்புடைமனைவாழ்தற்
பரிவுகூர்மனைக்கழகுகற்புடைமைபாரித்த
லரியகற்பினுக்கழகுதொல்லறத்தொடுமொழுகற்
புரியறத்தினுக்கழகுநற்புதல்வரைப்பெறுதல். சா.

என்றுசண்முகாதிக்கரைகுணதிசையெய்தி
மன்றல்வாழ்பரத்துவாசன்றனியிருக்கையில்வைகிப்
பொன்றயங்குதோளிலக்குமிநாரணற்போற்றி
யன்றுசித்திரைத்திங்களிலரியநோன்பிழைத்தார். எ.

அறந்தவாகிளைப்புறவளித்துளாய்ப்புயலணைந்து
சிறந்துளீர்மகப்பேறுமக்கிலைதரித்திரியும்
பிறந்துவீய்ந்துபோமாயினும்பெறத்தருகென்றா
மறங்கடந்தவண்டிகிரியான்வழங்கினன்மறைந்தான். ௮.

மாலிடம்புரிவலம்புரிவளையினைநோக்கிப்
பாலவளாய்த்தவம்பயில்வணிகாக்கொருமகவா
யேலவாவறப்பருவமீரைந்தெய்திமீள்கென்று
னீலமேனியன்பணித்திடும்பணியினின்றதுவே. ௯.

மன்னலந்திகழ்நேமியோன்வரந்தரவாங்கி
யின்னலங்கடலொரீஇக்கரையேறவைகிடுநாட்
பொன்னலங்கெழுவணிகர்கோன்புணர்முலைத்துணைவி
கன்னலஞ்சொலாள்யயற்றினிற்கருப்பமுற்றதுவே. ௰.

தோறறுமோர்மதிக்கோர்மதிசுவைமுதற்றிரிந்து
வேறறுருத்தழீஇயாவுநொய்மருங்கினில்வீங்கி
யீற்றுளைந்துசூற்சலஞ்சலமுத்தமீன்றென்ன
ஆற்றமிலொருசிறுவனைவயறுவாய்ந்துயிர்த்தாள். ௧௧.

உதித்தவோரையிலந்தணர்க்கொண்ணிதிக்குப்பை
விதித்தவாறுவேணவாவுறவீசிநெய்யாடி
மதித்தவொக்கலுக்கறுசுவைவழங்கினன்றேவர்
பதித்தலந்தொறும்விழவணிநடப்பவேபணித்தான். ௧௨.

அயனுமாயனுமிளிர்சடைப்பிரானுமாறிரண்டு
நயனநாயகனெனத்திருநாமமுநவிற்றி
வயவைவேலினேய்மகவினைக்காத்தியென்றிறைஞ்சி
நியமமுற்றலாபெய்துநிற்றலுஞ்சென்றுநோவார். ௧௩.

நாடொறுந்திதிமதிதொறுநவிலுறுமயனம்
நீடுறும்பருவந்தொறுநிகழ்வனபுரிந்து
சூடுறும்பணிமுதலனசூட்டியேவளர்ப்பச்
சேடுறுஞ்சிலதிங்களிற்சிறந்துசேய்வளர்ந்தான். ௧௪.

பன்னருஞ்சிறுமதலைகேட்டுருகியும்பாலன்
றுன்னுறுமவிளையாட்டினுட்சூழுதல்கண்டும்
பின்னருஞ்சிலபுரிவதுநோக்கியுமபிதாவு
மன்னையுங்களியடைர்திடப்பருவமைந்தடைந்தான். ௧௫.

பூந்தடஞ்சுனையும்வாவியும்பொருந்திரையாறுந்
தேந்தண்மாமலர்ச்சோலையுஞ்சேதிமம்யாவும்
வேந்தராதியர்சிறாருடன்போய்விளையாடி
வாய்ந்தகேழினஞ்சூழ்கொளவளர்கின்றநாளில். ௧௬.

ஒருபகற்சிறுமைந்தரோடியாவில்வவனத்தி
னருகுதேனுமாதீர்த்தத்தினுடுறுமேல்வை
கருதிமுதுணாவுதிப்பவக்கான்முளைவளையாய்த்
திருமுயங்குமாற்செங்கையிற்சேர்ந்ததுவன்றே. ௧௭.

ஆயதாய்வுறூர்மகனறலாழ்ந்தனனென்னுப்
போயறைந்திடப்பயந்தவாவேரறப்பூவிற்
சாயுநீண்மரம்போல்விழுந்தயார்ந்துகண்டருநீர்
பாயுமயாறறினுந்துயரபெருங்கடலினும்படிந்தார். கஅ.

வீழ்ந்துவீழ்ந்தடிக்கடியெழுந்துமின்வாளாற்
போழ்ந்தநெஞ்சினராயினாபொய்கைவாய்ப்புகுந்து
சூழ்ந்தகேளொடும்புனலிடைத்துருவியுங்காணு
ராழ்ந்துபூழ்தியின்மாழ்கிவாய்விண்டரற்றினரால். கசு.

சாவியோடிச்சிறுவாதம்பால்விளையாடி
மேவியோடியொர்கனனல்வருமுன்விளிந்தாயோ
பாவியேனோறறபயனிதுவோபாலாநீ
ராவியோகூறறேநின்னுவியளளியுண்டதுவே. உ0.

பேராயெமைநின்பிராயத்தாராயமினிச்
சாராய்சிறிதுநதனிபிரியாயிப்போதெம்
மாராவமுதேயென்றூர்வத்தழைக்கினுநீ
வாராயெங்குற்றாய்மகவேமகவேயோ. உக.

பொன்னையிழந்தாலும்புவியிலோர்கோலோச்சு
மன்னையிழந்தாலும்வணிகர்குலமரபு
சனனையிழந்தாலுந்தமியேன்றவசதீன்ற
வுன்னையிழந்துமற்றுய்யேமுய்யேமே. உஉ.

பூணுடுமாரபுமழலைவாய்ப்புன்னகையும்
வாணுடுசோலமுகமும்வடிக்குழையுந
தாணுடுகிண்கிணியுந்தண்டோட்சிறுதொடியுங்
காணுமலாவிகழிவேயோகண்மணியே. உங.

ஈன்றோம்பெரிதுவகையெய்தினோம்யாவருநிற்
சான்றோனெனச்சொற்றருமுன்றனிபிரிந்தா
யூன்றோயுயிர்தாங்கியுய்யோமுனைநேடி
யான்றோய்நிலைநின்வருகின்றோமழகளிறே. உச.

வென்னிரயவீரைநடுவீழாதுமீமிசைச்செம்
பொன்னுலகிலேற்றுவதுபுத்திரனென்றஃதுணர்ந்து
பன்னெடுநாணோற்றுப்பயந்தோமுனைநீங்கி
யின்னுயிர்கொண்டாறியிருப்பேமோமழகளிறே. உரு.

என்றின்னனவுள்ளிரங்கியிருவோரும்
பொன்றும்பொருளேபொருளாயப்பொருண்முழுதும்
வென்றியயலோர்க்கும்வேதியரோடாதுலர்க்கு
முந்தியிடையினின்றுமுகந்துமுகந்துநல்கி. உசு.

கேளுங்குடியுமழுங்கியழக்கேழ்வனுடன்
வாளுன்கண்ணாளும்வருந்திமகவாசைபற்றி
யாளுங்கதிர்வேலடிகளையுள்ளாதரித்து
மூளுங்கொழுந்தழலின்மூழ்கமனமூளுங்கால். உஎ.

மட்டவிழ்பூஞ்சிறுகுஞ்சிமாலையும்வாணுதனுட்டி
விட்டமணிச்சுட்டியில்வில்வீசுமணிப்பூங்குழையுங்
கட்டெழினமென்கொடிமூக்குங்கருணைபொழிவிழிநோக்குஞ்
சிட்டர்தொழுங்கனிவாயுமிளநகையுஞ்செவ்விதர. ௨௮.

வேணித்தண்பிறையைமுறித்திணக்கியிழைத்தெனமிளிரு
மாணிபபொறபுலியுகிரிணைம்படையுமழகெரிப்பத்
தூமொளைப்பிதந்தன்றோளும்பசுந்தொடியுஞ்சுடரமணி
மாணிக்கசசிறுவிரலினமணியாழிவெயில்விரிப்ப. ௨௯.

சீதமணிவிளிம்புடைக்கோசிகமுமரைஞாணணியுங்
ஈதமுறைபரிகுரறகிண்கிணிமிழறறுசீரடிய
மேதகசமுள்விளிநதோன்மீண்டனனென்றுவிருவோருங்
காதலிப்பமுனனுதித்தானகடவுணுதறகணணுதித்தான. ௩0.

கண்டனர்கண்களிகூரக்கான்முளையென்றெடுத்தணைத்துக்
கொண்டனரெங்குறறயெங்குலக்குன்றேயெமையீநததுச்
சண்டனிரயக்குழியிறருழ்ததாதெய்தினைவாய்
வண்டனர்யாருணாயாசெவ்வேளவிளையாடலைமன்றோ. ௩௧.

எடுத்தணைக்குமதுபோழ்திலிருவரையுமுலகறியத்
தடுத்தடிமைகொளல்வேண்டிச்சண்முகமாய்ப்பன்னிருகை
கொடுத்தபடைகளுங்கருணைசுரநதநயனமுந்தோகை
படுத்தசமயிலுநதோனறுநனறனனவானவாகோமான். ௩௨.

பெய்தார்பூமாரிவிண்ணோர்பேரியியங்கினவிசும்பிற்
கைதலைகூப்பினரறவோர்கண்டுளிதேக்கினர்தொண்ட
ரெய்தரியதனிக்காட்சியிடைப்பட்டாரிருவருந்தாம்
பய்தலொழிந்துளம்வெருவிப்பணிதலுமவ்வேறகிறைபகரும். ௩௩.

முந்நீர்மாதவநெடுநாண்முயறலுமுன்னீருறங்கு
மன்னீர்மேனியன்றோன்றிமகப்பெறின்மறறில்லையென்றான்
பின்னீாபெறறிறந்தாலுமகப்பேறலருளகவென்றே
சொன்னீராதலின்மகவாய்த்தோன்றியதொண்கயிற்சங்கம். ௩௪.

ஏவலினைம்பருவம்வைகியடைந்ததுமீண்டிதுபுரிமால்
யாவதும்யாமளியுடையீராதலினிவ்வாறுநும்பாற்
றவறவாற்றினமென்றுச்சாற்றிவரம்பலநல்கித்
தேவாகடேவன்றிருவாவினன்புரிச்சேதிமஞ்சென்றான். ௩௫.

அருடெரிநாயகனுமுல்லையணங்குமாவினன்குடியிற்
றெருடருசில்பகல்வைகித்தேமலர்த்தாடினைத்தடைந்தார்
மருடுமிமாதவமுயன்றுவசுமந்தன்கலியுகத்தி
லிருவினையொத்தடைந்தவாகேண்மெனமாமுனியிசைத்தான. ௩௬.

௧௬-வது சொர்னகுத்தன் சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௬௨௩.

திருச்சிற்றம்பலம்.

## கஎ-வது வசுமந்தன் சருக்கம்.

அங்கிவளர்ப்போரமுரலியமூவர்க்கருளேவல்
வெங்கலிதிரப்புவிதருவேளாண்டொழின்மிக்கோன்
சங்கரிபாகனசிறுபிறைவேணிதந்தலையாழ்வின
மங்கைதொல்குலவன்மண்மகள்புதல்வன்வசுமந்தன். க.

அறனெறிபிறழாணுசில்குலத்தோனன்பினும்
பொறையுடையாளன்மேவியவீதோர்புரநசன்னி
லுறைசிவயோகாதிபர்பணியோர்போதினுமோவா
னறியனகனிமூலாதிகடினநன்னரினுய்ப்பான். உ.

பாவடியானைத்தாருகனுயிருண்படையொள்வேற்
றேவாகடேவன்கதையமுதுண்டான்செவிவாயான்
மேவினனோபாலானவரைப்பான்மிளிரநெல்லிக்
காவிலடைந்தான்றாபதர்குழுவைக்கண்ணுற்றான். ௩.

மொய்த்தவர்புரியுந்தவநெறிகாணுமுகினெஞ்சம்
வைத்தலாதூவாவந்தனைபுரியாவழிநின்றா
னத்தவரிவனோதீவரதரனன்கருளானு
னெததகருத்தனபுடையினனென்றாகையரானார். ௪.

வாவசுமந்தாபூவினன்பசுவின்மணிவானோர்
தாவிறவங்கூர்தலனிதுமுத்தித்தலனுமான்
மூவிருதிருமாமுகவனெவாக்கும்முதனானென்
றுவரும்வம்மினபணியுமினுய்ம்மின்னெனநின்றான். ௫.

வீறுவைகாசிவிசாகம்பூரணைவிரவுங்கா
லாறுமுகச்செவ்வேண்மயின்மேல்வந்தருணல்குங்
காறுமிழைக்குதிமாதவமென்றுகரைந்தார்பாற்
கூறருமேவல்குயிற்றினாவேளான்குலதீபன். சு.

சொற்றிடுநாளிற்கார்மயின்மீதிற்சுடர்வேலோ
னுற்றிடுவில்வவனத்தினுட்பாலொளிர்நேமி
பற்றிடுசெங்கைப்புயல்வளர்பதியின்குணபானுற்
சற்றிடுவோரெண்சண்முகதீர்த்தக்கரைசார்ந்தான். எ.

இரவிவிண்ணிரதப்புரவிகளொருசாரிடைசாய
வரநதிமீவுயரியமணிமண்டபநாப்ப
ணுரகனுமரியுங்கண்டதிசயமுற்றுளம்வெள்க
வரவுமிழ்மணியினிமைப்புறுமணியாதனமுற்றான். அ.

கவிரிதழரமங்கையர்புடைகவரிக்கால்சாய்ப்பப்
பவமறுதொண்டர்திரண்டயல்வீசணிபணிமாற
வவிர்சுடர்மணிவிண்ணவர்தருமலர்தண்ணலர்தூவப்
புவனவரோதையாபணிவிடைவேட்டுப்புடைபோற்ற. கூ.

மணிமுழவத்தொனிகளைகடல்விளவாய்முடக்
குரலியாழ்முனிவரர்முறைகானம்பாட
வசியிருவாளுளகண்ணியரசதியின்வழியாடப்
பொசிநறவூறும்பூமலையக்கால்புடைபோத. ௰.

வேறு. மழகதிரிரவியளவில்பல்கோடிமேற்செலுமாமையுமழுங்க
வழகுநிறைதிருந்துமணிகிடந்திமைக்குமணிகெழுமவுலியுமாலோன்
முறையுடறகலைகளெண்ணிரண்டோரிலொன்பதுண்டென்றுகாமனைத்தின்
விழையிருபூதுவிழைபபவாணுதனமேல்விளங்குபுண்டரமுமவில்விச.

மினறிருநுதலிறபுண்டரநிலவுவெள்ளமும்விழியருணதியு
மொன்றெனககலவாதிடைவரமபிட்டாங்கொளிாபுருகுடிவடிவோங்க
முன்றனிதரணியாய்க்கட்கடைக்களிகண்முழுவதுமொருங்கிமைத்திருப்ப
நின்றிமைகோடீகடநதலையெறியுநீள்விழியருட்கடணீட. ௧௨.

வான்முகவனப்புக்கொழுந்துவிட்டாங்குமணிச்சிரந்துண்டங்கள்வாய்ப்
பத், தானுவுச்கொருசொறசாறறுசேயிதழமாதளையிதழ்தனித்தனிதயங்க
ப, பூணிளமுலைத்தாய்புகட்டிபாறேக்கிபபொசிந்தனபனனகைபொடிப்பத்
தோண்மிசைசெவிதாழ்சுருட்குழைதுயலச்சூழ்முகமாறுமோதோன்ற.

மாலைவெள்ளருவிநறுமணிகொழித்தமணிமுடிவடகிரிசிவணிப்
பாலொளிநாலுமதாணிமாமணியும்பகட்டெழின்மாபமுநதயங்க
நீலமுங்கடம்புங்குரவமும்வெண்கூதாளமுநிறைமணமுயிாப்பக்
கோலவாழ்வயிரகுலவிளங்தோளுங்கோமளவலயமுங்குலவ. ௧௪.

மாமுதறடிந்தவேலுமொள்வாளும்பலகையும்வைரவாட்படையுங்
காமாபொறகதையுமிருதலைச்சூலுங்கதமெரித்திசிரிவான்படையுந்
தோமில்சார்முகமும்வாளியும்வரதாபயமும்வாரணச்சுடாக்கொடியுந்
தாமரைமுகிழ்ப்பமலர்ந்தபன்னிருகைநதலங்களுநலங்கிளாந்தோங்க.

பன்னிறமணியினுதரபந்தனமும்பரவொளிப்பசும்பொனிறகுயிற்று, மின்
னிவாகலிங்கமருங்கிலும்விளங்கவிண்ணவர்மவுலியில்வேதச், செனனியிற்
கிடந்தசேவடிப்போதுநதிரண்மணிச்சில்லரிச்சிலம்பும், பொன்னிறங்கெ
ழுபூஞ்சதங்கையுந்திகழப்பொலிநதனன்காட்சியிற்சிறந்தே. ௧௫.

அப்பெருங்காட்சியளிபபவாளுருமருமறைத்தாபதக்குழுவு
மெய்ப்பெருநதன்மையோருமைமபுலனுமெறிவசுமநதனும்போற்றி
மைப்பெருங்கடலின்மாட்டியமதுகைமணிநெடுஞ்சுடரிலைவேலோன்
மெய்ப்பெருவரன்கணல்கிடவேண்டிமீளவுமவிச்சையினின்றே. ௧௭.

கண்முகமிருமூன்றினையிருமூன்றுகவினியோனருளுருவாய
சண்முகதீாததங்குடைந்துநின்றுடிச்சரவணபவனெனுமெழுத்தாற்
பண்முகமறையினபாற்படுநாமம்பாடியுமாடியும்பணிந்து
மொண்முகமலர்ந்துகைமலர்முகிழ்ப்பவுளங்குதிர்குதிர்ப்பவேநின்றார்.

நின்றவர்மீளநெறிதிரைக்கடல்சூழ்நீணிலமுழுதொருங்களிக்கு
மன்றலந்துழாய்மாலாவதுநீயேயெனத்துதிவழுத்தினர்முன்ன
ரன்றுவெண்சங்கும்பதுமமுங்கதையுமவிர்சுடராழியுந்தோன்ற
மூன்றிசழ்ந்தனயாருணாவர்வேன்முருகனுடலைமுழுத்தவமுனிவீர். ௧௯.

வேறு.

பண்டையினறுமுகந்தோன்றப்பன்னிரு
திண்டிறற்புயனருடிளைத்துச்சூகர
விண்டுவைநோக்கினனுய்யமேதினி
யொண்டிரைநதிசளாறுதித்தெழுந்தவே. உ0.

உதித்தவாநதியுமுந்தியொன்றெனக்
கதித்தெழுசண்முகதீர்த்தங்கைக்கொளீ
விதித்தபாலேழுடையின்மேவியாம்பிர
வதிப்புனலடைந்துகாவிரிமரீஇயதே. உக.

பொருவின்மாதவர்வசுமந்தன்போற்றநன
கருளியாருறுவந்தடிபணிந்திடப்
பெருவரநல்கிவெண்பிறைமுடிப்பிரான்
குருபரனாவினன்குடியிலெய்தினான. உஉ.

வேலுடைக்கடவுடன்காட்சிமிக்கமுக்
காலமுமுணர்வசுமந்தன்காசுதீர்
நூலுணர்முனிவரைநோக்கிமுன்பியான்
வாலியகாசிபமரபிலாயவன். உ௩.

அறுதொழிலாற்றுவேனன்றிமறறொரு
சிறுதொழிலாற்றிடேன்றீமையாறகதி
பெறுதொழினீத்தொருகன்னல்பின்னவ
ருறுதொழில்கோட்டினானுற்றலுற்றனன். உச.

இக்குலமாய்தவினெய்தினனென்றவ
மகருலமிழைத்தலினடைந்துநும்மையுங்
கைக்குலக்களிறறினுக்கிளையகாளையை
மைக்குலவிணைதபவழுத்திவாழ்ந்தனன். உரு.

கதியுமெய்துவனினிக்காண்மினென்றுவண்
பதியினில்யோகமோபருவமுற்றிவே
ளதிர்கழலடிமலரடைந்தனனமறைத்
துதிமுனிவீரெனச்சூதன்சொல்லினான். உ௬.

கஎ-வது வசுமந்தன் சருக்க முற்று.

கடவுள வணக்கமுள்படத் திருவிருத்தம் ௬௪௬.

திருச்சிதம்பலம்.

## கஅ-வது சண்முகநதிச் சருக்கம்.

புண்ணியசாந்தமேனிச்சூதனைமுனிவர்போற்றி
யண்ணரும்பிறவித்தீயையறிவெனும்புனலாய்த்தாற்றுந்
தண்ணளியுடையையன்றேசண்முகநதியினாற்ற
லுண்மையைவிரிவினெங்கட்குரையெனவறையலுற்றான்.

சுழித்தசண்முகதீர்த்தத்தின்கரையில்வேற்கிறையன்ஞாலஞ்
செழித்திடமேவிச்சூகராசலச்சிகரிநோக்கு
முழுத்தவெண்டிங்களன்னமூவிருமுகங்கடோறுங்
கொழுத்தபேரருளாறாயநதியெனக்குலவிற்றன்றே. ௨.

சத்தியோசாதமாதிமுகங்களிற்கொன்றைசாமஞ்
சுத்தமாயார்ததஞானநதியிவைதோன்றிமூல
வத்திரந்தனிறபைந்தோகைமாநதிதோன்றிக்கங்கை
யொத்தசண்முகதீர்த்தத்திறகூடியொன்றாயதன்றே. ௩.

நாடிவந்திறைஞ்சும்யாறறைநகுமணிவேற்சேய்நோக்கி
நீடுலகிரேழுள்ளுநிகழறுபான்மீநாறுங்
கோடிமேலுளதீர்த்தங்களுருவுகொண்டும்பர்கூடி
யாடுமன்றியும்யாரேனுமாடினோர்வீடுசேர்வார். ௪.

அருளினிவ்வாறுவேண்டும்வரன்களுமளித்துச்சென்ற
முருகனதருளினாற்சண்முகநதியாகிக்கோங்கந்
தருவனஞ்செறிபாலோடைசார்ந்துசங்கரன்றாள்போற்றிப்
பெருகுபாலாறாய்ச்சூதநதியினிறபோநததன்றே. ௫.

மனமொழிமெய்களானுமன்றியும்புரிந்தபாவந
தினையளவேனுநில்லாதேகெடுந்தினமொன்றாடிற
புனலிடைதோய்ந்தக்கால்யாண்டுத்திசைபோயிற்றங்க
ணனிசராசரமுழுத்திவீட்டினைநணுகுந்திண்ணம். ௬.

ஆதலினாண்டுவைகியன்னதிகுடைந்துமாந்திற
றாதலர்நீபன்றாட்டாமரைதொழுந்தகோபெற்றி
யோதுதலரிதுசத்திவடிவமொன்றாகநனீாச்
சீதநுண்மணலினீட்டந்திகழ்சிவலிங்கமாமே. ௭.

முரிதிரைமுழக்கறாச்சண்முகநதிக்கரையின்மொய்த்த
வரிமலர்ப்பொதும்பரும்பாமுனிவர்பைங்கொடிகளவானத்
தரிவையர்கிளியும்புள்ளுமறைவனமறைகளென்றால்
விரிவினன்னதியினாற்றல்யாவர்வாய்விள்ளுகிறபார். ௮.

அண்ணலம்பதிகடம்மிலாவினன்குடியுமாடுந்
தண்ணமர்நதிகடம்மிற்சண்முகநதியும்போற்று
மெண்ணரும்தேவர்தம்மின்முருகனுமேற்றமென்னா
நண்ணிநின்றாடியுள்ளோநவினறருசிப்போர்முத்தர். ௯.

தென்பரங்குன்றங்குன்றாச்சீரலைவாய்தென்னாவி
னன்குடியேரகஞ்சூழ்குன்றுதோறாடனாலு
மென்பழமுதிர்தண்சோலைமலையிவையாறுமேநாட்
டன்பழம்பதிகளாகவைகினன்றனிவேற்செம்மல். ௰.

திலநெய்போலுயிர்கடோறுஞ்செறிகதிர்வடிவேற்செம்மன்
மலர்தலையுலகின்மேயதலந்தொறும்வைகுமேனுந்
தலனிவையாறுநீங்கான்றலத்துளாவினன்குடிப்பாற்
பலர்புகழ்சிவாசலத்திற்பரஞ்சுடர்வடிவினோங்கும். ௧௧.

நிலையுருத்தரித்தநீத்தநீணிலமுதன்மற்றெல்லாந்
தலையுருததரிப்பவேண்டிச்சததியுஞ்சிவமுமாகி
மலையுருத்தரித்தவந்தத்தலைமையாரவருப்பதென்னாக்
கலையுருத்தரித்தசூதமுனிவரன்கழறலுற்றான். ௪௨.

௧௮-வது சண்முகநதிச் சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் ௬௬௧.

திருச்சிற்றம்பலம்.

## ௧௯-வது சிவகிரி சத்திகிரிச் சருக்கம்.

தவமலைப்பெருஞ்சூதனைநோக்கிமாதவத்தோர்
பவமலைபெருங்குவடுபட்டுருவவேல்விடுத்தா
னவமலைப்பெருங்கிரிகளினலங்கெழுசத்தி
சிவமலைப்பெருங்காதைசெப்பெனச்சொலலுற்றான். ௧.

நவிலின்மாதவிர்நலங்கெழுபுராணமுனைவில்கா
லவிர்சடைப்பிரானரும்பிளநகையுருவங்
கவினியோங்கிடுமதன்கதைநீபிறற்கோத
றவிர்திகுய்யமாகுய்யமென்றனன்பராசரன்சேய். ௨.

உய்த்துநீபிறர்க்குரைத்திடேலென்றதையெண்ணி
யத்திரிக்குவடுகடொழச்சேணெறியணுகு
முததிநல்குமென்றாலதின்மானமியமுற்றும்
வைததகேழ்வியாபயனையாரவரையருததிசைப்பார். ௩.

உரைத்தமாதவினவிலிரண்டோங்கசலஞ்சேணிற்
சருத்தாறுதுசாண்பினும்வலஞ்சூழினுங்காதை
யருத்தமோதிடாதிசைப்பினுஞ்சேட்பினுமவையி
ல்ருப்பினுங்கதியடைவிக்குமிஃதுண்மையுண்மை. ௪.

உனக்குணாததினமெனப்பெருங்குரவனன்றுரைப்ப
மனத்துணர்ந்துமீளவுஞ்செழுமலர்ப்பதம்வழுததிக்
கனத்தபேரருட்கடவுளின்றிருவுளக்கிடையை
யினைத்தெனச்சிறியேன்றெரிதற்கெளிதன்றே. ௫.

என்பதையுன்னிக்கருத்தென்புகலென்றுமிக்காதை
மன்பதைக்குளோர்கீடம்யானுய்ந்திடவருத்தா
யன்புருத்தரித்தோய்பிறர்க்கரைந்திடேனென்றேன்
பின்புதண்ணருள்புரிந்தொன்றுபேசலுற்றனனால். ௬.

நோற்றுயர்ந்தநோன்மையர்க்கிதுநுவலுகின்றனனாற்
சிற்றவைம்புலச்செனெறிச்செம்பொருளுணர்ந்த
வாற்றனுண்ணறிவுடையநும்பாலறைகுதலே
யேற்றமென்றுளத்தெழுதியவாறிசைக்கின்றேன். ௭.

வெய்யசூர்ப்பகைவிளிவுறக்கடவுளர்விசும்பி
னுய்யவெம்பிரானுதற்கண்ணினுதித்தறுகூராய்த்
துய்யகங்கைவெண்டிரைக்கையிற்றாங்கியத்தூய்நீர்த்
தய்யனுய்த்திடச்சரவணப்பூந்தடஞ்சார்ந்து. அ.

வான்றயங்கலுமீன்முலைப்பாலுண்டுவளர்ந்து
தேன்றளிர்க்கையாற்றிரிபுரைதிரட்டவோர்வடிவாய்
மூன்றிரண்டுமுந்நான்குமாமுகமொய்ம்புவயங்கத்
தோன்றினான்கயிலையிறசிவன்சிவைதந்தவோர்தொல்லோன். கூ.

அந்தமில்பல்விளையாட்டயர்ந்தறுமுகக்கடவுள்
சிந்தைதேர்கயிலைக்கிரிஞாண்கரிற்சிவன்சீர்
தந்தசத்திபுத்தேளிர்தம்பலபெயாதயங்கி
வந்தபன்முடிக்கந்தமால்வரையில்வைகினால். ய.

இமைமறைந்தகணிமையவாகினைவுளந்திரியா
தமைவில்வந்தனைபுரிந்தனைவருந்தொழுங்காலஞ்
சிமயமால்வரைச்சினகரமொருவிவெள்விடையோ
னுமைவிளங்குபூங்கயிலையின்சிகரியினுயர்ந்தான். கக.

உறைந்துநாரதனாற்றுமொள்ளெரிப்பிறந்தடற்று
மறந்தருந்தகரிவர்ந்துவானவர்க்கருள்சுரந்து
சிறந்ததாதைபொற்சினகரச்செழுமணிவாயி
லறந்தவாதபேராலயத்தரசுவீறறிருந்தான். கஉ.

ஒருபகற்பரமபரமனையும்பரும்பிறரு
முருகுயிர்த்தசெந்தாமரைகிழவனுமுயன்று
மருவிமாமலர்த்தாடொழாவிடைகொண்டுமலர்ந்து
பொருவிலோகைநெஞ்சுடையராய்மீள்கின்றபோழ்தில். கங.

வானவர்க்கொருமுதல்வனுமன்னுயிர்த்தொகைக
ளானவைக்கொருதந்தையுமாரணமனைத்தும்
யானெனும்பெருஞ்செருக்குமுற்றியததுவைத்த
நான்முகன்றனையறுமுகனகைபுரிந்தழைத்தான். கச.

கூம்புகைக்கமலங்களைக்குளத்திடைகாட்டி
மேம்படத்திருமுன்புகும்வேதவேதியனைக்
காம்படுஞ்சிறுதோளிசேய்கடைக்கணாலிருத்தித்
தேம்பொதிந்தசெம்பவளவாய்திறநதொன்றுகேட்டான். கரு.

நீதிழைப்பதியாதெனநிருமலனருளான்
மாயிரும்புவிமுழுவதும்வகுக்குவதென்ற
னையெவ்வுழித்தடலினின்றாற்றுவையென்னாச்
சேயுரைப்பவேதாமறைச்செந்நெறிததென்றான். கசு.

நல்லதாயமறைவல்லையேனவிற்றெனவகத்தி
னல்லெனத்தெரிந்தோமெனமுதலெடுத்துரைப்ப
நில்லிதன்பொருணிகழ்த்திமற்றெனநிகழ்த்தென்றான்
புல்லெனக்கவலித்தயனுளங்கிவாய்புலர்ந்தான. கஎ.

மூலநானெனுமான்மகன்மொழியுமாறெனிதோ
மூலகாரணனுதல்விழிமூவிருசுடராய்
மூலமாய்வருமூவிருமுகனன்றியந்த
மூலமாமனுபபொருளையாராமுழுதொருங்குணர்ந்தார். ௧௮.

பெற்றிவெண்குடிலைப்பொருளென்னெனப்பிறிதொன்று
சொற்றிலாதிருநதிலன்பொருட்சோர்வுகொண்டிசைத்துக்
கற்றிலேனெனக்கற்றுணராமையிற்கற்றோக்
குற்றதோதிடாதிலபொருளுரைததவனுத்தான். ௧௯.

பிரணவங்கடைப்பிடித்திலையுணர்ந்திலையந்தக்
கரணசித்திகைவரத்தவமுயன்றிலைகடல்சூழ்
தரணியாதியதந்ததெவ்வாறுசாற்றிடிலோர்
திரணநீசிவன்றெண்டருக்கென்றுசெவ்வேற்சேய். ௨௦.

பொன்னினான்முடிகுருதிகொப்பளிக்கவேபுடைத்துத்
தன்னிருஞ்சிலம்படியினால்வீழ்வுறத்தள்ளிக்
கன்னிவாந்ததோட்கணங்களைநொக்கலிற்கடிதிற்
றுன்னியன்னவரயன்றனைச்சூழ்ந்துகைபற்றி. ௨௧.

செல்லிவர்ந்தகந்தாசலச்சிவசிருங்கத்தில்
வல்லியிற்பிணித்திட்டபினந்தமால்வரைச்சென்
றெல்லிருஞ்சுடர்வேலினோனினிதுவீற்றிருந்து
பல்லுயிர்ததொகைநல்கினன்பங்கயன்வெள்க. ௨௨.

காலமுஞ்சிலகழிதரக்கார்முகில்வண்ணன்
மேலைவானவர்குழீஇயினர்வெள்ளியஞ்சிலம்பிற்
சூலபாணியைததொழுதயன்றுயருழந்ததுவு
ஞாலநாரிசேய்பயந்ததுநடந்ததுநவின்றோர். ௨௩.

ஆதிநந்தியைநோக்கியந்தணன்சிறைவிடப்போ
யோதிவாவெனச்சென்றுரைத்தனன்வெகுண்டுமைசேய்
போதினோனுடனிருத்தியோபோதியோகயிலைக்கி
யாதியம்பெனவெருக்கொடுமீண்டிறைக்கிசைத்தான். ௨௪.

நன்றெனச்சிறுமுறுவலித்திகல்விடைநடாத்திச்
சென்றிழிந்துகந்தாசலச்சினகரம்புகச்சே
யன்றிறைஞ்சிநின்றரியணையிருத்தியர்ச்சனைகூர்ந்
தின்றெழுந்தருளற்கெவனிமித்தமென்றிசைத்தான். ௨௫.

அயன்றனைச்சிறைவிடுகெனவையநீயிவனை
வியந்துகொண்டதெனகந்தையென்குடிலைமென்பொருட்கு
மயங்கிநின்றுமற்றென்றினைவழங்கினேன்ஞாலம்
பயந்ததெந்தவாறுவனகம்பறிப்பதேயறனும். ௨௬.

சிறைவிடேனெனத்திருகுவெஞ்சினங்கொளீநிகழ்த்த
நறைவிடாமலர்க்கொன்றையோனவிற்றுநம்மாற்ற
முறைவிடாதொழுகென்றனன்முருகவேளுணர்ந்து
மறைவிடாமலரயன்சிறைமாற்றிமுன்னுய்த்தான். ௨௭.

வர் நுதாழ்ந்தெமையாளுடைவள்ளலேதண்டங்
கந்தவேளெமைப்புரிந்திடறகந்தையுங்களைந்தா
னுய்ந்தனனெனுச்சதுமுகனுரைத்தலுமொருவன
முந்தைநின்றொழிலாறறெனமொழிந்தருள்புரிந்தான். ௨௮.

அருகுறினறபேரொளிதிரண்டருளுருவாய
முருகன்வாண்முகநோக்கிநன்முறுவலித்திறைவ
னிருகையாலெடுத்தணைத்துமாரபிறுகிடப்புலலி
யொருகவான்மிசையிருத்தினனுச்சிமோநதுயிாத்தான. ௨௯.

அய்யநீகுடிலைப்பொருள்விளவியந்தணனைப்
பொயயெனச்சிறைமடுத்தனையுனக்கதுவருமேற்
செய்யவாய்திறந்தறையெனசசபையிடைசசெப்பக்
குய்யமோவெளிப்படைகொலோகூறெனததொழுதான். ௩௦.

எனத்திருச்செவிதாழ்த்தினன்ருதைசெயிசைத்தா
லுனகருதித்தவாறுரையெனவுலகெலாமீன்ற
வனைச்குணாத்துஞான்றடியனுமுணர்ந்தனனென்றான்
மனத்துணர்ந்தனன்மறுதெதிர்மொழிந்திலன்வளளல். ௩௧.

எவாக்குமோர்முதலெவனவனீயெனவியப்பித
துவர்ச்சடாடவித்தொன்மையோன்சுரரயன்றுளவோன்
றவத்தாசூழ்தரக்கயிலையந்தடங்கிரிசாாந்தான்
கவர்த்தபனமுடிச்சிலம்புசேய்காணிகொண்டிருந்தான். ௩௨.

கும்பமாமுனிவிழைந்தமாமனுக்களுங்குடிலைச்
செம்பொருட்டுண்வுந்திசைமுகவனசிறையிருந்த
பைம்பொனீளசிவசிருங்கத்தின்பானமையும்பாங்க
ரம்பைபேர்பெறுசிருங்கத்தினுற்றலுமருளி. ௩௩.

இமயவால்வரைச்சிகரியிலருந்தவமிழைக்கு
மமுதவல்லிசுந்தரிக்கருளவழங்கிமீண்டடைந்து
சிமயவெள்ளியஞ்சிலமபிடைச்சிவன்சிவைநாப்பண்
குமரவேளமுதாசனாகுழாந்தொழவைகி. ௩௪.

தந்தையீன்றவள்பணிந்திடத்தாருகற்காய்ந்து
புந்திமாலுறமயக்குறும்புள்வரைபொடித்துச்
செந்தில்வைகிநீர்க்கடலொரீஇமயேநதிரஞ்செறுந்து
வெந்திறற்றைத்தியர்தமைவேரொடுங்களைந்து. ௩௫.

மடங்கன்மாமுகத்தவுணனைவாட்டிவண்டிரைநாக
கிடங்குவீழருட்சூரிருண்மாவுருக்கீண்டு
குடங்கையிற்பொறிவாரணக்கொடியொன்றுதாங்கி
யிடங்கொளுஞ்சிறைக்கார்மயிலூர்தியொன்றேறி. ௩௬.

தேவர்வெஞ்சிறைதீாத்தொரீஇத்தென்பரங்குன்றின்
மேவுதெய்வவாரணந்தனைமிளிாமணம்புரிந்து
யாவரும்புகல்வலாரியைவிண்குடியேற்றிப்
பாவைபங்கர்பாற்கயிலையிற்பண்டுபோலிருந்தான். ௩௭.

நிகழ்பலகாலந்தன்னிலொருபகனிலவுவேணிப்
பகவனையிறைஞ்சவெள்ளிச்சிலம்புறைபவர்கடம்மிற்
புகல்குறுமுனியையங்கிராமுனிபுரிதருக்கத்
திகழ்வனவிகழ்ந்துஞ்சாலககுறியைநீயென்றுஞ்சொன்னான். ௩௮.

அறிவின்மாகுறியையென்றவங்கிராமுனியைச்சீறி
யுறுவர்தந்தொழிலினீத்தோருழிவைகியொருவற்சுட்டிக்
குறுமுனிநோக்கும்போழ்திறகுழகன்மாவிடையிற்றோன்றிப்
பெறுவதியாதுநீமுனம்னோதெனவுண்டேயென்றான். ௩௯.

எம்பெருமானேநீயுமெம்பெருமாட்டிதானு
மும்பராலிறைஞ்சிரண்டுகிரியெனவொருங்கிநிற்ற
னம்பயாண்டுளவோநாயேன்வழுத்திடநவிற்றுகென்றான்
கும்பமாமுனிவோன்கூப்பக்குளிர்மதிமிலைந்தோன்கூறும். ௪0.

எரிவிழித்தோறறுஞ்சேய்வீற்றிருப்பதோர்கந்தவெற்பிற்
றெரிகொடுமுடிகடம்மிற்சிவஞ்சத்தியெனும்பேர்பெற்ற
வரியநன்முடியிரண்டாயமாகுவமுமையும்யாமும்
புரிதிவந்தனையெஞ்ஞான்றும்புரியாவான்முதலோர்பூசை. ௪௧.

குடிலைமுன்புனக்குச்செவ்வேள்கூறினாயாமின்றோது
முடிகளின்பெருமைசொற்றாமெனவருள்வழங்கிமுன்னோன்
வடிவிழிமயிலினோடுமறைந்தனன்போற்றியந்தப்
படிமுடியிரண்டுங்கண்டான்பாய்திரைபபரவையுண்டான். ௪௨.

போற்றினன்றாழ்ந்தெழுந்துசூழ்ந்தனன்பூந்தண்மாரி
தூற்றினன்குடநதம்பட்டுததுதித்தனன்றகுமெழுத்துச்
சாற்றினனருவிபாரிற்றாழ்வதுகடுப்பக்கண்ணீ
ரூற்றினன்சிவமுஞ்சததியுருவமுமுருவங்கண்டான். ௪௩.

முடிதொறுங்கவினுநதெய்வத்தாமரைமுகமுமூரல்
விடுசிறுநிலவுங்கண்ணுங்கருணையுங்கடலுமெண்சீ
ரடிமலர்ச்சதங்கையுந்தாரகலமுநூலுநதோளும்
வடிசுடர்வேலுங்கொண்டோமதலைநின்றுலவக்கண்டான். ௪௪.

சித்தருமியக்கரும்பூதேசருந்தேவரும்யாழ்
வித்தியாதரரும்வேதபோதரும்வேழ்வியோரு
முத்தரும்யோகர்தாமுமுனிவரும்பிறருங்கூடித்
தத்தமினெருங்கியாற்றுநதவங்களுமருங்கிற்கண்டான். ௪௫.

காண்டொறுங்காண்டொறும்வேறதிசயங்களிப்பிற்கண்டான்
பூண்டபேரன்புபொங்கிப்புறம்பொசிந்தொழுகப்பூசை
வேண்டியவேணவாவோடிழைத்தலும்விடையின்மேலோன்
சேண்டிகழிமையவல்லிசேயெதிர்திகழக்கண்டான். ௪௬.

ஆடினன்மலர்க்கைகொட்டியருமறைச்சாமகானம்
பாடினன்பழிச்சியோர்பாற்பான்மொழிப்பாவைதோன்ற
நீடினர்நீலநாப்பணிலவநேர்ந்தனவெள்ளேற்றி
னேடிலகிதழியோயாணிழைத்தொன்றுண்டேயென்றான். ௪௭.

உருதியின்னனநின்றேத்துமுனிவனையொருவனோக்கி
யரியனபுரியும்பூசைக்ககமலர்ந்தனன்வரனக
டருகுதுமறைதியென்னத்தருகவிக்குவடிரண்டும்
பொருவிற்றென்றிசையிலுய்த்துப்பூசனைபுரிகவென்றான். சஅ.

தந்தனங்கோடியென்னுமறைநதனன்றலைவனெங்கண்
கந்தவேளுணர்த்துமுண்மையுணர்ந்ததாபதன்விண்காறு
முந்துறவளரநீட்டுங்கரங்களின்முடியிரண்டும
வந்தனவென்றாலாற்றுந்தவங்களில்வலியதுண்டோ. சகூ.

தாங்கியசெங்கைக்குத்தண்ணநதாமரைப்போதும்பானற
றேங்கமழ்போதும்போன்றவன்றிச்சீர்சிறந்தசெங்கே
ழோங்குமாமணியினீலவொளிமணியினிற்குயிற்றி
யாங்கமைத்தாடுவானோர்தம்மனைத்துணைகள்போன்ற. ருo.

சால்புறுசத்தியீதுதலைமைசார்சிவமீதாவ
மேலுறுபோகமீதுவிழைத்திடுபுத்தியாமீ
தேல்புறத்தொழுமினுய்மினென்றறிவிப்பான்போற்சிர
கோலியகுவடிரண்டுங்குடங்கையிற்கொண்டான்கும்பன். ருக.

வாரியுண்டுமிழ்ந்தவிந்தமடக்கிவில்வலன்வாதாபி
யாருயிர்வாட்டிஞாலஞ்சமன்செய்ததன்றியம்பைக்
கார்மணிமிடற்றோனுமைவரைகளுங்கையுளேந்திப்
பார்விசும்புளநின்றான்யார்குறுமுனிபான்மைசொல்வார். ருஉ.

மாதவர்வழுத்தக்கந்தவரையினின்றருவிதாழுஞ்
சீதமூர்கேதாரச்சென்னெறியிடைப்படர்ந்துதேவர்
தேவதேவன்கூர்பூர்ச்சவனங்கெழீயீசானதிற்
பூதரநிறுவியன்னோன்பூசனைபுரிந்தான்மன்னோ. ருங.

அரனருணெறிகோலோமேல்வருவதையதனுளாய்ந்தோ
தெரிவருநதவனிரண்டுசிருங்கமுமிருப்பநீங்கி
வருதிரிபதகைவைகும்வாரணாசியைவணங்கி
விரவினோன்பொதியம்புக்கான்வீரையமடுத்தமேலோன். ருச.

கண்ணுதல்கவுரிநாமங்கவினியசிகரமேனு
மண்ணிடைப்போந்துசத்திமலைசிவமலையெனும்பேர்
நண்ணினவவைகளாவினன்குடியடைந்தவாறு
புண்ணியமுனிவர்கேண்மோவென்றனன்பொருவில்சூதன். ருரு.

கக-வது சிவகிரி சத்திகிரிச் சருக்க முற்று.

கடவுள் வணக்கமுள்படத் திருவிருத்தம் எககூ.

திருச்சிதம்பலம்.

# ௨௰-வது சிவகிரி சத்திகிரி ஆவினன் குடியடைந்த சருக்கம்.

நெடும்பெருங்கடலினுப்பணிணகர்புரிந்துவைகுங்
கொடுந்தொழிற்சூரனுதிகொலைகணியவுணர்க்கென்று
மடும்படைத்தொழிற்பயிற்றுமடற்பெருங்குரவர்கோமா
னிடும்பனென்பவன்கொல்சியத்தெறுழ்வலிதடந்தோள்வீரன். ௧.

தயித்தியனென்னுநீதிதிறம்பிடான்சரவணச்சே
யயிறபடைக்கடல்வெஞ்சூரனுயிர்விருந்தளிக்குநாளி
னுயிர்த்துளங்கவன்றுமாழ்கியொருவித்தன்மனைவியோடும்
பயிர்ச்சியினுருமற்றொன்றுபயின்றுகான்படர்வதானான். ௨.

அடவிகடொறுந்தண்சோலையசலங்கடொறுங்கார்வேலைப்
புடவிகடொறுந்திரிந்துபுல்லெனநிழலினீங்கா
மடவியோடருந்தவங்களாற்றியுமலயவெற்பி
லிடவியசாரலின்கணிருந்தவருடனிருந்தான். ௩.

காலையின்முனிவர்மொய்ப்பக்கலசமாமுனிவன்பண்டை
வாலியகிரியிரண்டுங்கொணர்ந்துமெனவெழுந்துவானங்
கோலியகுறும்பலாவாய்க்குழகன்வாழ்குறருலத்தோர்
பாலணைந்திடலுங்கண்டானபணிந்தனனிடும்பனென்போன். ௪.

தனதுசொல்வடிவந்தோன்றத்தாழ்ந்தவன்றனைநோக்காக்
கனல்விழிநிருதிநீபாரடைந்ததென்கழறுகென்னப்
பனவவெஞ்சூரனுதிபடிறுடைத்தகுவர்க்கெல்லாந்
தினமடுபடையியற்றுந்தீமையேனிடும்பனென்பேர். ௫.

இயன்முனிவரனேசூரன்சேயிரணியன்போரேற்று
வயமிகுமொய்ம்புக்காறறுதுடைந்துதற்பயந்தமற்றோர்க்
குயர்கடன்புரிவானுளத்துணர்ந்துகார்க்கடலுட்புககான்
செயலொழிந்தசன்றியாமுஞ்செறியிருட்கானம்புக்கேம். ௬.

தேனலர்கடம்பன்செங்கைப்படைகளாற்செருவில்வீய்ந்து
வானகம்புககார்யானையரிமுகன்முதலமற்றோ
ரானவெஞ்சூரனூர்திகொடியெனவடையலுற்றா
னனவிவ்வினையேன்வாழவிருந்தனனிறந்திலேனால். ௭.

சாக்குநாயகனென்றுன்பாலடைந்தனன்கருணையங்க
ணோக்கினாற்பணித்தியாவுங்குயிற்றுவனுவலிரென்ற
வாக்கினானுளமுந்துயனென்பதைமுனிமனத்தாற்
றாக்கினனினதுவெய்யதுயரெலாந்துடைத்துமென்றே. ௮.

உத்திரதிசையிற்பூர்ச்சவனமடைந்தும்பர்போற்றுஞ்
சத்தியுஞ்சிவமுமுற்றதடவரைக்குவடிரண்டு
மித்தலைகொணர்ந்துவல்லைவருதியேலிருமைகூற
வைத்தனைபோகமுத்திவருமென்றான்மலயமேலோன். ௯.

உரைத்ததுசேளாவோகையுளங்கொளாவிடும்பன்றாழ்ந்து
திரைக்கடல்குடித்தவண்மைசெழுந்தவக்குருவேசத்தி
வரைப்பெருமையுஞ்சிவாசலத்தின்மான்மியமுநன்காய்
விரித்தறிமாறுநாயேற்கருள்கெனவினவலோடும். ௰.

உமிழ்மணியருவிதாழுமுயர்பெறுங்கந்தவெற்புச
சிமயவொண்சிகரஞ்சத்துகிரிசிவகிரியெனச்சே
யமுதுறுவாக்காற்சொற்றவாறுமனறியும்வேதண்டங்
கமழபொழிற்சாரல்வைகுங்காய்ப்புலமாவர்தம்மில். ௧௧.

இருக்குமங்கிராமுனிக்குந்தனக்குநூனிமித்தமேன்ற
தருக்கமுநிகழ்ந்தவாறுந்தணந்துநோன்பிழைத்தவாறு
முருக்கிதழ்ப்பவளச்செவ்வாய்முருந்தவேண்முறுவலொண்கண்
மருக்கமழோதிவாமன்மகிழ்ந்தருள்புரிந்தவாறும். ௧௨.

அருண்மொழிவழங்குசந்தகிரியடைந்தம்பையண்ண
லுருகெழுகுவடிரண்டுகொண்டொறுமிறும்பூதுள்ளம்
பெருகியவாறும்பூசைபெட்புறவிழைத்தவாறுங்
கருமணிமிடற்றோனவேற்சேய்கவுரியோடெதிர்ந்தவாறும். ௧௩.

அக்குவடிரண்டுங்கேட்பவண்ணலன்றளித்தவாறு
மக்குவடிரண்டுந்தாங்கியாயிடையசனறவாறு
மக்குவடிரண்டும்பூர்ச்சவனத்துழியமைத்தவாறு
மக்குவடிரண்டுநீங்கிமலயத்தினடைந்தவாறும். ௧௪.

போரிடையிகல்வெங்கோபப்பொருங்களிறிரியவென்ற
வாரகழலிடும்பனென்னும்வாளுழைமடங்கல்கேட்பக்
காருவராழியுள்ளங்கையிலொருளுந்தமிழ்ந்து
நீரெனவடக்கியுண்ணுங்குறுமுனிநனிநிகழ்ந்தி. ௧௫.

இத்தலையருவிக்குன்றின்வடாதுபாலிருவின்றீந்தேன்
கொத்தலைத்தெறியுஞ்சந்தக்குறடுகோல்யானைக்கோடும்
பைத்தலைமணியும்வாரிப்பாய்புனல்யாறுட்பாய்ந்து
தத்தலையெறிதண்சாரற்சதுமுகவரையுட்சார்ந்து. ௧௬.

சிலம்பதன்சாரற்சித்தநதியின்பாற்செருண்றேய்த்த
வலம்படுதடக்கைவேற்கவிரலாமலர்ந்தசென்னித்
தலன்கெழுகுருதிச்சூட்டுவாரணமுயர்த்தோன்றண்டைப்
பொலன்புனைகனைகழற்காப்புதுமலர்தூவிப்போற்றி. ௧௭.

ஒருவியவ்வுழிவழிக்கொண்டுலவையந்திசையிலுள்ளம்
வெருவியபசுவினின்னலதனுயிர்வாங்கவெங்கை
சருவியவைரஞ்சாபந்தணித்துவிண்மணிக்குமேரு
பொருவியபசுமலைக்கண்ணடைந்திருப்பூதும்பார்த்து. ௧௮.

நீங்கிவெள்ளருவிவள்வாய்முழவமாஞிமிறினீட்டங்
தூங்குதெள்ளிசைமிழற்றத்தோகைகூத்தயருந்தொல்சீர்
தாங்குவல்லுளிவரைதென்றலையத்தாச்சார்ந்துதீந்தேன்
றேங்குதண்மலர்ப்பைங்கானந்திகழ்குடநாடுஞ்சேர்ந்து. ௧௯

பணிநெடுங்கிரியிருப்பண்மனமுள்ளிப்படர்ந்தஞான்றிற்
றனிமுதல்பணிப்பத்தென்பாற்சமன்செய்யச்சார்கநந்தம்
புனிதநீர்க்கரகஞ்சாய்த்தீம்புனலொழுகருவிக்குன்றி
னணிவளங்கெழுதண்சாரற்குறியின்கணடந்துசென்று. ௨௦.

பொய்ப்பொருடிளைப்போரின்னற்புணர்த்துவெண்ணிரயத்துள்ளு
மெய்ப்பொருடிளைப்போரோகைவியப்புறுசுவர்க்கத்துள்ளு
முய்ப்பனபோகமொப்புநிறுத்தருளுதிக்குமின்பந்
துய்ப்பவரிருக்குமூதூர்ச்சுப்பிரமணியமெய்தி. ௨௧.

கடிநறுங்கமலம்பூத்துக்கருநெய்தலமர்ந்தவள்ளிக்
கொடிபடர்தருவையோர்பாற்குஞ்சரந்தழுவுமாறு
முடியுடைவைரக்குன்றைமுடிவிலாமுக்கட்கன்னல்
வடிவுறவுயிர்த்தமுத்தைமனங்குவிததிறைஞ்சிவாழ்த்தி. ௨௨.

அங்கதுவகன்றுவிண்டோங்கடலெயின்மூன்றும்வெள்கப்
பொங்கழலுமிழ்புனமூரற்புயங்கனும்புயங்கநல்கும்
பங்குபெற்றுயர்ந்தபீதாம்பரனுமோவாவடிவுதாங்கித்
தங்குசங்கரநாராயணநதனைத்தழுவிநீங்கி. ௨௩.

வெள்ளைவெண்கமலப்போதில்வீற்றிருப்பவளைச்செங்கேழ்
வள்ளவாய்ப்பொகுட்டினும்பர்வாழ்நதிருப்பவளையோங்க
லொள்ளிழைமகளையொண்கண்மகேசையையுதவிஞளைப்
புள்ளலர்புரிந்துகொல்லாபுரியினையொருவிப்போகி. ௨௪.

வருடைசென்றுழக்குகோன்றேனுடைந்துவார்ந்தொழுகுதீந்தேன்
பெருகுதண்கிரியுநதிங்கண்மருவையொண்பிணையென்றுன்னித
திருகுகோட்டிரலைபாயும்பிறங்கலுஞ்சீயஞ்செல்லி
னுருக்கெழுகரிவெண்கோட்டின்குருத்துடைத்துன்னும்வெற்பும்.

நஞ்சுமுற்றெயிற்றுப்பாந்தள்வழங்குகல்லளையுஞாங்கர்
வெஞ்சினப்பேழ்வாய்வேங்கைமிடைபெறும்பொறையும்வீழ்ந்து
குஞ்சரம்பிடியோடாடுங்குறுஞ்சுனைவரையுந்தீம்பர்
நெஞ்சினுட்கிடந்தவன்பாற்பதுக்கைநீணெறியுநீந்தி. ௨௬.

சிதடியினொலிவழங்குமடவியும்பகாந்தசென்று
விதநெறிதவழ்ந்துதூமமுயிர்ப்பவெம்புலிங்கஞ்சிந்துங்
கதமெறிவனமுமக்களுயிர்ப்பலிகவர்வெஞ்சூலி
சுதரிசனங்கைக்கொண்டொள்சூழலில்யாறுமூழ்கி. ௨௭.

காரகிற்குலமுஞ்சந்தக்குறடுங்காய்கனற்கண்வேழக்
கூர்மருப்பினமுந்தேற்றகொழுங்கழைத்துணிவும்வேர
லேர்மணிக்குவையும்பொன்னும்வரன்றியெம்மருங்குஞ்சிந்தி
வார்சிலைக்கணைபின்செல்லமுன்செல்லுமணிநீர்யாறும். ௨௮.

மடுக்களுமடுவிற்றண்டாமரைகளும்வசனப்போதி
னடுத்திகழ்பொகுட்டுளன்னநாடுமன்னுட்டினிஞ்சி
யுடுத்தவன்பதிகளந்தப்பதிச்சினகரமுமோங்கு
மடுத்துயர்பீர்படிந்தடைந்துவணங்கியவ்விடன்கணீங்கி. ௨௯.

அடைந்தவர்கதியைச்சார்வதலதுசார்தராதுநாளுந்
தடைந்ததொல்காசிபெய்திச்சதமகன்முதலோர்வேலை
கடைந்ததெள்ளமுதங்கைப்பச்சுவைதருங்கைநன்னீர்
குடைந்தகிலேசர்தாட்கைகுவித்தறுதிங்கள்வைகி. ௩௦.

விழுத்தகுகடவுட்காசிவியநகர்துறந்துமேலை
முழுத்தவரிருக்கைமிக்கமுரண்வகைக்குலமும்வென்றி
பழுத்தவில்மிலச்சர்வாழ்க்கைப்பதிகளுமளறுபாய்நது
சுழித்தலையெறியுங்கண்டற்சூரல்பம்மியகான்யாறும். ௩௧.

தெற்றியபிறழ்பற்பேழ்வாயலகையுஞ்செறிபுன்குஞ்சி
வற்றியநரம்பின்யாக்கைமண்ணையுங்குழிகட்பேயுஞ்
சுற்றியகுடர்சென்னீர்வெண்ணிணந்தசைவழும்புதோண்மேற்
பற்றியகடியுந்துய்த்தபழுவமுங்கழியச்சென்று. ௩௨.

முடங்குளையரிமானேறுமுடைப்புலிபுழைக்கையாழி
கடங்கவிழ்கவுண்மால்யானைகரியகோட்டிரலைநவ்வி
தடங்கெழுசேழற்பன்றிசல்லியங்கடமாப்பல்ல
மடங்கலில்விலங்குநீங்காவடவியங்கடறுநீங்கி. ௩௩.

போர்தரலின்றிப்பெய்யும்பெரும்பனிக்குடைந்துசார
லார்தருவிலங்கும்புள்ளும்பிறவுமாங்கணைந்துசாயக்
கூதருபுயங்கமீன்றகொழுமணிச்சுடர்தீயென்று
சாதரும்பொழிற்கேதாரத்தடங்கிரியடைந்துதாழ்ந்து. ௩௪.

தணந்ததன்வடகிழ்பாலிற்றயங்கியவொருசான்மாக்கட்
சணந்திகழ்புலவுமேனைக்கலகெழுகடறுந்தள்ளி
மணந்திசைதிகழும்பூாச்சவனங்கெழுமிலிங்கம்வந்தித்
துணாந்துதொல்கிரியிரண்டுங்கொணாந்திவணுறைதியென்றே. ௩௫.

சென்னெறியுணாத்திமற்றுமற்றுளசிலநவிற்றிப்
புன்னெறிமாற்றுமூலமனுநெறிபுகுததிக்காகி
லின்னெறிவழாமணிற்றியெனச்சொலிவிடுததானென்று
நன்னெறியினரைச்சோந்தார்தமக்கொருநவையுமுண்டோ. ௩௬.

**வேறு.** சாற்றுமறைகொண்டுசதுமாமுகவரைக்க
ணேற்றமுறுசித்தநதியின்கரையுதக்கின்
றேற்றுகுகனைத்தொழுதுதொல்பசுவரைச்சென்
றுற்றலொடுசெய்யகிரியொய்யெனவடைந்தே. ௩௭.

சண்ணடைகண்மற்றுளசணந்துதனிவேற்கை
யண்ணலுறைசுப்பிரமணியம்பரவியேகிப்
புண்ணியர்தவம்புரிகொல்லாபுரியொரீஇமுக்
கண்ணன்மணிவண்ண னுறைபவர்பதியேகி. ௩௮.

கல்லருவியுங்கிரிகளுங்கரைகொல்யாறுஞ்
செல்வனமும்வேறுபலதேயமுதல்யாவும்
வல்விரைவினெய்திமறைவாணர்புகழ்காசித்
தொல்பதியிலீசர்முடிசூடுநதியாடி. ௩௯.

அங்கணறுதிங்களிலேசனைவணங்கி
வெங்கடறுமேனவும்விராவிவிரைவிற்போய்த்
தங்குபனிமூழ்கியகேதாரநெறிபோகிப்
புங்கவரினம்பரவுபூர்ச்சவனமேவி. ௪0.

கோமுனிமுனோதியதுணர்ந்துகுறியங்க
ணேமுறவிருந்ததலனெய்தியெதிரபோற்றி
மாமலர்கடேவினன்மனம்புனிதனானான்
ருமுனிவர்போற்றுசிவசத்திமலைகண்டான். ௪௧.

கண்டெனவிழுந்தனனெழுந்துதவமிக்கோன்
றெண்டெனவலித்தருள்சுரந்திடுதலாலே
சண்டனமிவ்வாறுபிறர்கண்டிலர்கொல்யாஞ்செய்
பண்டைவினைநல்வினையல்லாதுபயனாமோ. ௪௨.

என்றனனிடும்பிபணியாவதுமிழைப்ப
மன்றன்மலராய்ந்துமுறைவந்தனைபுரிந்தான்
றென்றல்வரையோன்மொழிவழாதுதெளிவோடாண்
டொன்றுபதமைந்தையுமுளத்தெழுதிவைத்தே. ௪௩.

ஆங்கவனருந்தவமுனாற்றிடுமவ்வேலை
யோங்குபுயதண்டமெனவொண்பிரமதண்டுந்
தாங்குதிசைசூழுரகர்தாம்பினமுமாகப்
பாங்கினடைநதிடுதல்பார்த்ததிசயித்தான். ௪௪.

கொண்டலினெழுந்துகைகுவித்திருகுவட்டின்
மண்டுரகராசியுறிவாய்ப்புறவிசைத்துத்
தண்டொடுபிணித்தெழுசடங்கடலைவாரி
யுண்டவனுரைத்தமனுவுண்டதையுணர்ந்தான். ௪௫.

மண்ணினிடைசானுவுறவூன்றிவருதண்டந்
திண்ணியபுயத்துமிசைசேர்த்திமலயத்துப்
புண்ணியன்வழங்குபுரைதிருருவநெஞ்சு
ளெண்ணினனெழுந்தனனெழுந்தகிரிரண்டும். ௪௬.

அன்னதுணைமால்வரைகளன்பினனிகாவின்
மன்னிடுமிடும்பன்மணிநீலமொருதட்டுந்
தன்னிகரின்மாமணியோர்தட்டினுநிறைத்து
நன்னரினிறுக்குமொருநாய்கனைநிகர்த்தான். ௪௭.

தேவர்திகழ்தென்றிசைதிளைத்ததவமோசீர்
மேவுமுனிவாய்மைவிழைவோவிறலிடும்ப
னாவலின்முனாற்றுதவனோவணிசொள்காசிக்
காவடியர்போல்விரைவுகொண்டதர்கடந்தான். ௪௮.

வந்தநெறிகண்டிலன்மயங்கிநெடுவிந்த
மந்தநெறிசென்றுமல்லிகார்ச்சுனமடைந்து
சிந்தைதெளிதிண்ணர்புரிதென்கயிலைபோகி
யுந்தருவிதாழ்கனலினொண்கிரியுறைநதே. சகூ.

முத்தநதிநீடுமுதுகுன்றநெறியேறி
நததிலகுபொன்னிநதிநன்கரைகடந்து
புததமுதபானர்புகழ்புட்பகிரியுற்றான
மததனெனநின்றுளமயங்கிவழிகாணான். ருo.

ஆவயினடுக்கலுறையள்ளிலைவெள்வேலோன்
காவலனெனக்கரியகச்சையிடைவீக்கித்
தூவடியின்மீதுகொடுதோற்கழல்புனைந்தே
யேவயில்வைவாளிவில்லெடுததெதிராபுகுநதான். ருக.

புகுந்தனனெவன்கொலெழில்பூத்தவன்விறற்போர்
மிகுநதவனிருங்கழன்மிலைந்தவனவில்வல்லோன்
முகுந்தன்மருகன்பொருவினொண்முருகனென்றுண்
ணெகிழ்ந்துகுலம்யாதுதனிநினறதுரையென்றான். ருஉ.

யானுலகமாளுமிறைவன்றனயனீண்டக்
கான்மிருகவேட்டைகருதித்தனிபுகுந்தே
னீநிருதனோவரைகடாவியெதிர்நின்றாய்
மேனதெவனோதெனவினாவினன்வெள்வேலோன். ருங.

வீரைநுகர்மாமுனிவிடுத்தபணிவெஃகி
வாரையிவைகொண்டுமலயம்புகுதுகின்றேன்
தாரையறியாதுதடுமாறியிவண்வந்தேன்
பாரையினிதாளிறைபயந்தவிறலோயே. ருச.

மைவழியுமேனியன்வழங்குமொழிகேளாச்
செவவழிபயின்றளிசெறிந்திமிர்கடம்ப
னிவ்வழியினெய்தியெழிலேனவரைவைகி
யவ்வழியணைந்துமலையத்தடைதியென்றான். ருரு.

ஏவினனிவன்கருணைவள்ளலெனவெண்ணி
மேவினன்விரைநதனன்விசும்பினுயர்கேழன்
மாவினசலத்துவடபாலருகுமாவோ
டாவினன்வலம்புரியுமன்னகரடைந்தான். ருசு.

தாளுடறளர்ந்துதவனம்பசியுழற்றத்
தோள்வலிதொலைந்தவனையொத்ததுயரெய்தி
நீளிணைவரைச்சுனைநிலத்தினிடைவைத்தா
னாளுடையவேலாசெயலாரறிவரம்மா. ருஎ.

ஆவதுணரானருகடைந்துதவவாம
தேவனுறைகானிடைசெறிந்தவணிருந்தா
னேவலினிடும்பிதருமின்கனிகிழங்கு
மேவுபிசிதம்பிறவும்வேண்டுவநுகர்ந்தான். ருஅ.

நித்தனுமைவெற்பிலொருசார்நெடுநிலைத்திற்
கைத்துணையினாலுவளகங்கடிதுதோட்டுத
நுய்த்தனனறும்புனமெருணிக்கடல்வரப்ப
வதிருவரைத்துணையடுத்தனனெடுத்தான். ௫௯.

வேறு.

தோண்முறிந்தனநெரிந்தனசுவற்புறஞ்சானு
தாண்முறிந்தனவெறிந்தனதடங்கண்கள்பிதுங்கிப்
பாண்முறிந்துநம்மடுதிறன்முறிந்ததென்னெனா
நாண்முறிந்திடாநின்றுளநடுங்கினனிடும்பன். ௬0.

அரியினைச்சிவனுக்குநீடருந்தவனடிமைக்
குரியனென்றிடுந்தொழிலுமன்றுதவுமந்திரமும்
பிரியநம்முடைவலிகளும்பெயர்தரவீண்டு
திரியுமாறெவனெனவுளம்புழுங்கினன்சீறி. ௬௧.

சொறுகொறுத்துளஞ்சிவகிரிக்குவட்டின்மேலேறி
யுறுகணெங்கணுமபரப்பதூஉமூங்கொருசாரின்
மறுவறுங்குராவடியிலோமழலையங்கனிவாய்ச்
சிறுகுழந்தைநின்றிடுவதுதெரிதரத்தெரிந்தான். ௬௨.

எற்றைஞான்றுமில்லாததின்றிஃதிறும்பூதொன்
றுற்றதொண்சிறுபிள்ளையன்றியக்கனோவும்பர்
மற்றையோதம்மிலொருவனோமந்திரங்குடிலங்
கற்றவன்கொலோவிவன்வலிகாண்டுமென்றடைந்தான். ௬௩.

பிடர்கிடந்தபுன்குஞ்சியும்பெருகியகருணைக்
கடலலம்புகண்களுங்கவினொழுகியமுகமும்
வடிவுநூலுமார்புங்கையொண்கோலும்வயங்க
நெடியகோவணவுடையுடனின்றதுகண்டான். ௬௪.

உருகினன்பெயர்த்தொன்றும்விண்டுரைத்திலனன்பு
பெருகிநின்றுழிப்பிறைமதிக்கண்ணியோன்றருசேய்
முருகனின்றிவன்றிறலினைமுருக்கியபின்னர்
மருவுநன்கருளுறுமேநம்மமானல்கிடுஞ்சால். ௬௫.

குறுமுனிப்பிரான்பணித்தகுற்றேவலுக்கிடையூ
றுறுமிடத்திலென்னுயிரினைவிடுத்துமாற்றுதுமென்
றுறுதியிட்டிடும்பாசுரன்சேயைநேர்ந்தியார்நீர்
நெறிபிழைத்தனையோதனிநின்றதென்னென்றான். ௬௬.

என்றதற்கெதிரிசைத்திலனகைத்தனனென்கோன்
வன்றிறற்றைதியன்மனங்கொத்திளமைந்தா
நின்றுபுன்னகைவிளைப்பதற்கேதுவென்னிகழ்த்தாய்
குன்றுவிட்டுநீபோகியான்கொலைத்தொழிற்றகுவன். ௬௭.

தருவனீகொணர்ந்திட்டவிச்சயிலநம்மிருக்கை
யிகலுனக்குளதேற்கொடுபோகெனவிசைப்ப
நகைபுரிந்தனனன்றிதுநன்றிதுசிறுவ
புகரிலாவொருபொய்மையும்புகன்றிடாப்பெரியை. ௬௮.

மஞ்சவஞ்சனைவல்லைநீயென்றுளமதித்தே
னஞ்சிடேன்றிருமாயனையரனெனவகுத்த
விஞ்சயன்றனக்கடிமையான்வெய்யவன்முன்ன
ருஞ்சிறிதறியோவென்றனனுறுமெனவுறுத்தான். ௬௯.

பிசைந்தகையினனெயிறுமென்றுறப்புகப்பேழ்வாய்
நசைந்துசென்னியனனலுமிழ்தீக்கணனடுயோக்
இசைந்தநெஞ்சினன்குமரனென்றறிவனேறெழுந்து
பசைந்தபூங்குராவடியினினமுடிவுறப்பாய்ந்தான். ௭௦.

நிலமதிர்ந்திடவதிர்ந்தறநெருங்கியகாலை
வலமிகுஞ்சுடர்வேல்கொலோகோல்கொலோமற்றைச்
சிலையைத்தடிந்தனவோதெரிந்திலன்றிறலிடும்ப
னலறிவீழ்ந்தனனசனிபோலிழந்தனனாவி. ௭௧.

இருந்தநாகமுந்தண்டமுமெழுந்தனவிருநீ
ரருந்துமாமுனிக்குற்றவாறறைந்தனதத்தம்
பொருந்திருக்கையிற்புகுந்தெனபோன்றுதானவன்பாற்
றிருந்துவேளருள்புரிந்தவாசெப்புகின்றனமால். ௭௨.

உலம்பெருந்தடந்தோளிடும்பாசுரனுயிர்பூஞ்
சிலம்பில்வீழொலியாமதேவெனுஞ்செழுந்தவத்தோ
னிலம்புறுந்தநீள்வனத்திடைநிலைந்தபேரிடும்பி
புலம்புமாறுகேட்டெழுந்தனள்பொருக்கெனப்போந்தாள்.

